
விலை: 50/=
muhavary.com



# முகவரி
MUHAVARY

மாதாந்த சஞ்சிகை | எண் 10 | பாதை I ஓகஸ்ட் -2015

## அசத்தப்போவது யாரு...





உங்கள் கணினிகள் பழுதடைந்துள்ளனவா..?
நம்பகத்தன்மை மிக்க சேவைகளை எதிர்பார்க்கின்றீர்களா?
All Kinds of Computer Sales
& Repairing
Service & Maintanence
Software Development
Networking
Data Recovery
CALL NOW...
+94777072092
ibuy
COMPUTERS
SALE
4GB
DDR2
80GB HDD
CORE2
DUO
3.0GHz
மிக குறைந்த விலையில் தரமான 2nd Hand
கணினிகள் விற்பனைக்கு உண்டு.
Branded Dell optiplex 760 , 755 PC
CCTV Security Camera Systems
கண்காணிப்பு Camera system செய்து
கொடுக்கப்படும்,
Online இல் 24 மணிநேரமும் எங்கிருந்தாலும்
CCTV Camera பொருத்தப்பட்ட இடத்தை
பார்வையிடும் வசதியும் உண்டு
Come inside & See your self...
i Buy Computers
Taking you forward...
Business Reg No. NAL/DS/977
#75/10, Front Lane, Palaly Road, Thirunelvely, Jaffna
Hotline : +94 777 072092 Landline: +94 213 202411
e-Mail : ibuycomputers@live.com





ஒலிம்பியா ஸ்போட்ஸ்
மெய்வல்லுநர் நிகழ்வுகளுக்குரிய
தட்டு, குண்டு, ஈட்டி, அளவுநாடா, etc.
பாண்ட் வாத்தியக் கருவிகள்
வெற்றிக்கேடயங்கள், வெற்றிக் கிண்ணங்கள்,
பந்து வகைகள்
Rackets
கிரிக்கெட் உபகரணங்கள்
நீச்சல் உடைகள் உபகரணங்கள்
உடற்பயிற்சி சாதனங்கள்
போன்றவற்றிற்கும்
மெடல்ஸ்,
அணிகளுக்கான Jersy வகைகள், T-Shirt வகைகள்
உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு
ஓடர்செய்து பெற்றுக்கொள்ள.
ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல.6. ஜும்மா பள்ளிவாசல் லேன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
TEL:021 222 3490
Hotline: 077 8060267




கபில்
ஸ்ரூடியோ அன் வீடியோ
Kabil
Studio & Video
உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்துவிதமான
நிகழ்வுகளையும் சிறந்த முறையில் அதி நவீன டிஜிட்டல் கமெரா மூலம்
படப்பிடிப்பு செய்து கொடுப்பதுடன் அனைத்துவிதமான
அல்பங்களும் சகலவிதமான பிறேம் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
No: 749, Palaly Road, Thirunelvely
இல.749, பலாலிவீதி, திருநெல்வேலி
தொ.இல: 021 5686 187 - 0776002364




NLT
New Lanka Traders (Pvt) Ltd.
Post : No. 222 & 226, Staney Road, Jaffna, Sri Lanka.
Tel : 0094 (0) 21-2222062, 21-2222838, 21-2221150
Fax : 0094 (0) 21-2222062
Email : newlanke@sltnet.lk / nltpvtltd@sltnet.lk

Charty Beach Resort
Tilko Jaffna City Hotels
Spacious Luxurious Rooms | Gymnasium and spa | Beauty salon
Conference rooms | Banqueting hall | Entertainments
TILKO
No: 70/6 K.K.S Road
Jaffna , Sri Lanka
Tel: 021 2225969
Fax: 021 2227291
www.cityhoteljaffna.com
info@cityhoteljaffna.com
Tilko Charty Hotel

Not for Sale Muhavàry

முகவரி
MUHAVARY

**CHIEF EDITOR**
A. VIJAYAKRISHNAN

**EDITOR**
JEYA VAMATHEVAN

**ADVISORY BOARD**
BASKEY T.RAJI. DR.V.AMEERDEEN
MR.A.PANCHALINGAM
MR.A.SATHYAMOORTHY
DR.(MRS)S .THIRUMAGAL
DR.S.NANTHAKUMAR
PROF. V.P.SIVANATHAN
MS. JEYA THAMPIAH

**SRI LANKAN BUREAU CHIEF**
S.P.BALA

**MONTREAL BUREAU CHIEF**
N.SATCHITHANANTHAM
(+1 514-827-8392)

**ADVERTISEMENTS**
GEORGE SUBRAMANIAM, MASIL

**LAYOUT & DESIGN**
S.MARIYA

**PUBLIC RELATIONS**
T.SIVANESAN

**TECHNOLOGY**
GNANAVATHANAN V R M

**CONTACT**
5215. FINCH AVE. E., UNIT 218
GTA SQUARE,
TORONTO, ONTARIO.
M 1S OC2
CANADA.

**CANADIAN ACADEMY OF PROFESSIONAL STUDIES (CAPS)**
52, PALALY ROAD,
THIRUNELVELY,
JAFFNA,
SRI LANKA.
E-MAIL: INFO@MUHAVARY.COM
PHONE : (+1)416 628 6214
FAX : (+1) 416 619 0335
WEB : MUHAVARY.COM

MUHAVARY AN ENTERTAINMENT MAGAZINE, IS PUBLISHED MONTHLY BY MUNAIPU MEDIA GATE : A SUBSIDIARY OF 2377000 ONTARIO INC.A BUSINES CORPORATION DULY INCORPORATED UNDER THE LAWS OF THE PROVINCE OF ONTARIO IN CANADA FOR THE BENEFIT OF THE GENERAL TAMIL LANGUAGE READER. THE OPINIONS AND VIEWS EXPRESSED IN MUHAVARY ARE THOSE OF THE AUTHORS AND NOT OF THE PUBLISHER. ADVERTISERS ARE COMPLETELY RESPONSIBLE FOR THE CONTENTS OF THE ADVERTISEMENTS AND MUNAIPU MEDIA GATE RESERVES THE RIGHT TO REFUSE TO PUBLISH ANY ARTICLE OF ADVERTISEMENT CONSIDERED UNSUITABLE OR INAPPROPNATE FOR PUBLICATION . ALL RIGHTS RESERVED AND THE CONTENTS MAY BE REPRODUCED WITH WRITTEN PERMISSION FORM THE PUBLISHER . IN SPITE OF THE AUTHOR'S PROFESSIONAL CAPACITY NO CONTENTS OF MUHAVARY SHOULD BE CONSIDERED AS PROFESSIONAL ADVICE. NEITHER THE PUBLISHER NOR MUNAIPU MEDIA GATE WILL BE RESPONSIBLE FOR ANY CLAIMS OR ACTIONS OR DAMAGES THAT THE READER MAY HAVE THROUGH RELIANCE ON THE CONTENTS OF THE MAGAZINE INCLUDING ADVERTISERMENTS.



# என்ன நடக்குது இங்கே?.......


அரசியல் என்பது இரத்தம் சிந்தா போர். அதில், அரசியல் கட்சிகள் தங்கள் கொள்கைகளை வகுத்து மக்களிடம் பரப்புரை செய்வது வழக்கம். இதன் மூலம் மக்களை விழிப்புணர்வுக்கு உட்படுத்தி சரியான பாதையினூடாக நாட்டை முன்னோக்கி நகர்த்துவதே இலக்கு. இதில் தோற்பவர்கள் நாளை வெல்பவர்களாகவும், வெல்பவர்கள் நாளை தோற்பவர்களாகவும் இருப்பர். ஆனால் கதாநாயகர்கள் மக்களே. ஆனால் துரதிஷ்டவசமாக ஆசிய நாடுகளில் குறிப்பாக இலங்கையில் தேர்தல் களத்தில் அதன் அரசியல் கட்சிகளே கதாநாயகர்களாக வலம்வர விரும்புகின்றனர். அரசியலை வியாபாரமாகவும் மக்களை ஏமாற்றுபவர்களாகவும் காணப்படுகின்றனர்.

**"தண்ணியில் மீன் அழுதால் கரைக்கொரு தகவலும் தருவதில்லை. எமக்குள் நாம் அழுதால் துடைக்கவே எமக்கொரு நாதியில்லை."** அதேபோன்று மக்களின் துன்பம் இவர்களுக்கு தெரிவதில்லையோ என்னவோ. வீடு தேடி வந்து வாக்குப் பிச்சை கேட்பதுடன் இவர்களது பணி நின்று போய்விடும். முன்னர் தமிழ் அரசியல் கட்சிகளை மக்கள் மலை போல் நம்பினர். தந்தை செல்வா காலத்தில் அவருடைய நகர்வை மக்கள் ஏற்றனர். மேடைப் பேச்சால் பலனில்லை செயல்தான் முக்கியம் என்று வாழ்ந்து காட்டியவர்கள் மேல் மக்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். இதைப் போலவே கடந்த மூன்று தசாப்த கால போர் மூலம் விடிவு வரும் என மக்கள் நம்பினர். ஆனால் அதன் பின் அந்த நம்பிக்கை (Trust) சரியான வழியில் தலைமைத்துவத்தில் கட்டப்பட்டிருக்கவில்லை. இது தான் வெளி. இந்த வெளி, இளைய தலைமுறையினரால் கட்டியெழுப்பப்பட வேண்டும். மக்கள் அலையை ஏற்படுத்தக்கூடிய "தலைமை" வேண்டும். அப்போதுதான் மக்கள் கதாநாயகர்களாக வலம் வர முடியும். எங்களுக்காக மக்களா? மக்களுக்காக நாங்களா? பாராளுமன்றக் கதிரை ஓய்வூதியம் பெறுவதற்காக அல்ல ஓய்வின்றி மக்களுக்கு உழைப்பதற்காக. வெறும் மானிய உதவியுடன் சில கட்டடங்களைக் கட்டி திறந்து வைத்து பத்திரிகையில் போடலாம். ஆனால் பலமுள்ள மக்கள் கட்டமைப்பை கட்டுவதானால் சுயநலம் அற்ற அரசியலும் விலைபோகாத தன்மையும் இருக்க வேண்டும். அதற்கு விளம்பரங்கள் தேவையில்லை. தேர்தல் முடிவே விளம்பரமாகும். எமது வடக்கு முதலமைச்சர் லண்டனில் உரையாற்றும் போது எமது தாயகத்தில் நாம் பெரும்பான்மை இனம் என்றார். ஆகவே, வடக்குக் கிழக்கில் பெரும்பான்மையைக் காட்டத் தவறுவோமாயின் வரலாறு எம்மைக் கேலி செய்யும். ஒருமித்த கருத்தும் ஒற்றுமையுமே எமக்குப் பலம். இல்லாவிடில் ஒவ்வொரு 5 வருடமும் தேர்த்திருவிழாதான்.....

சமஷ்டியை வலியுறுத்தும் தமிழ் கட்சிகள் தமது ஆசனத் தொகையை அதிகரிப்பதன் மூலம் பேரம் பேசலாம், தம்மைப் பலப்படுத்துங்கள் எனக் கேட்கின்றார்கள். இது கடந்த ஐந்து தசாப்த காலமாக கூறப்படும் விடயம். ஆனால் இதனை நிறைவேற்ற பல சவால்களை எதிர்நோக்கவேண்டி இருக்கிறது.

முதலாவது, இது தனித்து தேர்தல் கோசமாக இல்லாமல் தளத்தில் இறங்கி நிறைய வேலை செய்ய வேண்டி இருக்கும். சிங்கள மக்களிடம் சமஷ்டி சேர்ந்திருக்கத்தான் பிரிவதற்கில்லை என்ற விடயம் தெளிவுபடுத்தப்படவேண்டும்.

ஒன்றுபட்ட அமைதியான இலங்கை என்ற பொதுக் கருத்துக்காக சிங்களவர்கள் தமிழர்கள் கைகோர்த்துச் செயற்படவேண்டும். இல்லையேல் வரலாறுகளில் இருந்து பாடம் படிக்காதவர்கள் வரலாற்றின் கண்டனத்துக்கு ஆளாவர் என்ற கருத்துக்கு அவர்கள் ஆளாக நேரிடும். இதை சிங்கள அரசியல் தலைவர்களும் தமிழ் அரசியல் தலைவர்களும் உணரவேண்டிய காலம் வெகு தொலைவில் இல்லை.



# மாசில்லா நீரே வா!

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட கழிவு எண்ணெயால் நிலத்தடி நீர் மாசுபட்டுள்ளது என்பதை முகவரியின் பெப்ரவரி - மார்ச் 2015 இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் ஆசிரியர் தலையங்கத்தில் "யாழ். குடாநாட்டு மக்களின் குடிநீர் மாசடைந்து வருவது பெரும் பிரச்சினையாக உருவெடுத்து உள்ளது. அதிலும்கூட சில குறிப்பிட்ட பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கழிவு எண்ணெய்க் கலப்பு என்பது ஓர் உடனடிப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. பிரச்சினைகளுக்கான தீர்வு காண்பதில் முறையான அணுகு முறைகள் பற்றி அதிகம் பழக்கப்படாத எமது மக்களுக்கு தெரிந்த தீர்வு முயற்சி என்பது "கவனயீர்ப்பு போராட்டம்" மட்டுமே. அதனை மக்கள் இவ் விடயத்தில் கடைப்பிடித்து வருகிறார்கள். " ....

ஆசிரியரின் இக் கூற்றுக்கு மேலதிகமாக யாழ். பல்கலைக்கழக உயிரியல் இரசாயனத்துறை (Department of Bio Chemistry) காத்திரமான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. இவ் ஆய்வு தொடர்பில் அவர்களை நேரில் சந்தித்து விபரங்களைப் பெற்றுக் கொண்டோம்.

நீர், நிலம், வளிமண்டலம் ஆகியன அடிக்கடி அனர்த்தத்திற்கு உள்ளாவது உண்டு. இவ்வனர்த்தம் இரு வழி முறைகளினால் உருவாகிறது.

**ஒன்று:** இயற்கை அனர்த்தங்கள் (Natural Disaster)

**இரண்டு:** மனிதனால் ஏற்படுத்தப்படுபவை.(Man Made Disaster)

சுன்னாகம் நிலத்தடி நீரில் எண்ணெய்க் கழிவு கலந்தமையானது மனிதனால் மேற்கொள்ளப்பட்ட ஓர் அனர்த்தமாகும்.

கேள்வி: நீங்கள் ஏன் குடிநீரில் கழிவெண்ணெய் கலந்த விடயத்தில் அதிகம் அக்கறை செலுத்தி வருகிறீர்கள் ?

பதில்: பொதுவாகவே சமூக சுகாதாரப் பிரச்சினைகளை (Community Health Problem ) கண்டறிந்து அவற்றில் கவனம் செலுத்தவேண்டியது எமது கடப்பாடும் பொறுப்புமாகும். இதன் மூலம் பெருந்தொகையான மக்களுக்கு ஏற்படவிருக்கும் நோய் அனர்த்தங்களில் இருந்து மக்களை பாதுகாப்பதற்காக அது பற்றிய விழிப்புணர்வினை சமூக மருத்துவப் பிரிவினால் ( Department of Medicine) ஏற்படுத்தி வருகிறோம். அதன் ஒரு செயற்பாடுதான் குடிநீரில் கழிவெண்ணெய் கலந்த விடயமும்.

மேற்படி பல்கலைக்கழகத்தை அப்போதைய உயர் கல்வி அமைச்சராக இருந்த கௌரவ பதியுதீன் மொகமட் அவர்கள் திறந்து வைத்து உரையாற்றிய வேளை "இப் பல்கலைக்கழகத்தின் நோக்கம் கற்றல் மட்டுமல்ல. இப் பிரதேசத்தில் சமுதாயம் சார்ந்து எழுகின்ற பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கவேண்டிய கடப்பாடும் உண்டு என்பதை மறந்து விடக்கூடாது" என்றார். என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

கேள்வி: எந்தக் கட்டத்தில் தாங்கள் இந்த விடயத்தில் தலையீட்டீர்கள்?


பதில்: தங்களது குடிநீர் கிணறுகளுக்குள் எண்ணெய்ப் படலம் வந்துவிட்டது , அதைக் குடித்தால் என்னென்ன வியாதிகள் வருமோ? என தங்களது கிணற்று நீரை போத்தல்களில் எடுத்துக்கொண்டு அதைப் பரிசீலிப்பதற்காக பாதிக்கப்பட்ட மக்கள் அலைந்து திரிந்தார்கள். அவர்களது பிரச்சினை தொடர்பில் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டார்கள். இதுபற்றி ஊடகங்களினூடாக அறிந்து கொண்டோம்.

கேள்வி: இந்தக் கழிவு எண்ணெய் விவகாரம் பற்றி முதலில் கதைத்தவர் யார்?

பதில்: 2008 ஆம் ஆண்டு சுன்னாகத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி. (அவரது பெயர் எமக்குத் தெரியாது) தனது பிரச்சினையை எழுத்து மூலம் அப்போதைய யாழ்ப்பாண அரச அதிபராக இருந்த திரு. கணேஸ் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். அரச அதிபர் இது விடயமாக சுன்னாகம் மின்சார சபையிடம் விளக்கம் கேட்டு அனுப்பியிருக்கிறார். எனினும் இது விடயமாக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படாது அது கிடப்பில் போடப்பட்டதாக அறிகிறோம்.

கேள்வி: மின்சார சபையின் கழிவெண்ணெய் எந்த அடிப்படையில் நிலத்தடி நீருடன் கலந்திருக்கமுடியும் என நீங்கள் கருதுகிறீர்கள்.


பதில்: உண்மையில் சுன்னாகம் மின்நிலையத்தருகில் ஒரு கழிவு எண்ணெய்க் குட்டை (Oil Pond) இருந்திருக்கிறது. இது அவ்வளவு வேகமாக நிலத்தடி நீருடன் கலந்திருக்கவில்லை. திடீரென நிலத்தடி நீருடன் கலந்தமைக்கு இரு காரணங்களைக் குறிப்பிடலாம். ஒன்று: 2014 ஆம் ஆண்டு உயர் மின்னழுத்தக் கோபுரம் (High Tension Tower) ஒன்றினை அமைப்பதற்காக நிலத்திற்கு அடியில் துளை போட்டிருக்கிறார்கள். அந்த துளை நிலத்தடி நீரைத் தொட்டமையால் தேங்கியிருந்த எண்ணெய்க் கழிவு கலந்திருக்க வாய்ப்புண்டு. இரண்டு: 2014 ஆம் ஆண்டு பெய்த கடும் மழை காரணமாக ஏற்கனவே தேங்கியிருந்த எண்ணெய்க் கழிவு மழைவெள்ளத்துடன் கலந்து ஏனைய பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு நிலத்தடி நீருடன் கலந்துள்ளது. மேலும் நிலத்தடி நீரைவிட மண்ணிலேயே அதிகளவு ஒயில் கழிவுகள் சேர்ந்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. 2006 ஆகஸ்ட் 11 ஆம் திகதி A9 வீதி முகமாலையில் நிரந்தரமாக மூடப்படுவதற்கு முன்னர் சுன்னாகம் மின்னுற்பத்தி நிலையத்திலிருந்து கழிவு எண்ணெய் ஒரு பரல் ரூபா 6000 இற்கு கொழும்பில் உள்ள அலுமினியத் தொழிற்சாலைகளுக்கு விற்கப்பட்டதாம். பாதை மூடிய பின் இக் கழிவு எண்ணெய் மின்னுற்பத்தி நிலையத்தின் சுற்றுச்சூழலில் விடப்பட்டதாகவும் ஊரவர்கள் குறிப்பிடுகின்றனர். இதுவே மேற்கூறப்பட்ட எண்ணெய்க் குட்டையாகும்.




எனினும் 2014 நவம்பர், டிசம்பர் மாதங்களில் எண்ணெய்க் கழிவு தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் நிறுவனங்கள் உரிய நடவடிக்கையில் இறங்கியிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு எதனையும் அவர்கள் செய்யவில்லை.

குறிப்பிட்ட பாதிக்கப்பட்ட கிணறுகள் உள்ள ஊர்களில் பணியாற்றிய வைத்தியத்துறை சார்ந்தவர்கள் மூலம் மேற்படி தகவல்கள் சேகரிக்கப்பட்டு பல்வேறு வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் எமது கருத்து என்னவென்பதை அறிவதிலேயே மக்கள் அதிக ஆர்வம் காட்டினர். தமக்கு வரவிருக்கும் நோய் பற்றியோ? மரணம் பற்றியோ நாம் உறுதிப்படுத்த வேண்டும் என வற்புறுத்தினார்கள். இவ்வாறான ஒரு அனர்த்த நிலையில் பொறுப்புடன் பதில் கூறுவதற்காக உரிய ஆய்வுகளில் ஈடுபட்டோம்.

(5ம் பக்கம் பார்க்க...)



# வாக்கு எண்ணும் முறை

கட்சி பட்டியல் அடிப்படையிலான விகிதாசார பிரதிநிதித்துவம் எனக் கூறப்படும் இத்தேர்தலில் கட்சிக்கு வாக்களிக்கின்ற அதேவேளை, கட்சியில் தான் விரும்பும் 3 வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும் படி - வாக்காளர் வேண்டப்படுவர். கட்சிக்கு மட்டும் வாக்களித்து, வேட்பாளர்களுக்கு வாக்களிக்கப்படாவிடினும் அவ்வாக்கு செல்லுபடியான வாக்காக கருதப்படும். ஆனால் கட்சிக்கு வாக்களிக்காமல் வேட்பாளர் இலக்கத்துக்கு வாக்களித்தால் செல்லுபடியற்ற வாக்காகக் கருதப்படும்.

தகுதி காணும் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் தேர்தல் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த செல்லுபடியான வாக்குகளில் 1/20 (5%) கணிப்பிடப்படும். இத்தொகைக்கு குறைவான வாக்குகளை ஏதாவது அரசியல் கட்சிகள் அல்லது சுயேட்சை குழுக்கள் பெற்றிருப்பின் அவை எண்ணிக்கை செய்யப்படுவதிலிருந்து நீக்கப்படுவதுடன், அவைகளால் பெறப்படும் வாக்குளும் மொத்த செல்லுபடியான வாக்குகளிலிருந்து கழிக்கப்படும். இதன் பின்னருள்ள வாக்குகளே தொடர்புடைய வாக்குகள் எனப்படும்.

## தகுதிகாண் வாக்குகள்

ஒரு அங்கத்துவம் பெறும் வாக்குகளே தகுதிகாண் வாக்குகளாகும். குறிப்பிடப்பட்ட தேர்தல் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டிய அங்கத்துவத்திலிருந்து ஒன்றை கழித்து வரும் எண்ணிக்கையினால் தொடர்புடைய வாக்குகளை பிரிப்பதன் முலம் தகுதிகாண் வாக்குகளாகும்.

## உதாரணம்

தேர்தல் மாவட்டம் யாழ்ப்பாணம் - தெரிவாக வேண்டிய அங்கத்துவர் -7
அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகள் - 240000
தகுதிகாண் - 240000/6
= 40000

| கட்சி | மொ.வாக்கு | போனஸ் | 1ம்எண் | மீதி | 2ம் எண் | மொ. |
|---|---|---|---|---|---|---|
| A | 135000 | 1 | 03 | 15000 | - | 4 |
| B | 80000 | - | 02 | - | 2 | - |
| C | 25000 | - | - | 25000 | 1 | 1 |

## விருப்பத்தேர்வு வாக்குகள்

ஒவ்வொரு அரசியல் கட்சியும் சுயேட்சைக் குழுவும் பெற்றுக் கொண்ட அங்கத்துவ எண்ணிக்கையை கணிப்பிட்ட பின்னர் வேட்பாளர்களின் விருப்பத் தேர்வு வாக்குகள் எண்ணப்படும். ஒவ்வொரு கட்சிக்கும் கிடைத்த ஆசானங்களுக்கு ஏற்ப ஆகக் கூடுதலான வேட்பாளர் உறுப்பினராக தெரிவு செய்யப்படுவர்.

## மாசில்லா நீரே....

(4 ம் பக்கத் தொடர்ச்சி...)

இதன் மூலம் எண்ணெய்க் கழிவு தொடர்பான முகாமைத்துவம் (Oil waste Management) ஒழுங்காக செய்யப்பட்டிருக்கவில்லை என்பது கண்டறியப்பட்டது. இதில் சுற்றுச் சூழல் தொடர்பான அதிகாரிகள் முக்கிய பங்கு வகித்திருக்க வேண்டும். அவ்வாறு எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

இந்த ஆய்வுகளின் பின்னணியில்தான் மாசுபட்ட நீரை எவ்வாறு சுத்திகரிப்பது என்ற ஆய்வில் மும்முரமாக ஈடுபட்டோம்.

கேள்வி: குடிநீர்க் கிணறுகள் எண்ணெய்க் கழிவுகளால் பாதிக்கப்பட்டது என்பதற்கு ஏதாவது புள்ளிவிபரத் தகவல்கள் அல்லது ஆதாரங்கள் உண்டா?

பதில்: ஆம். 2014 இல் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் பாதிப்பிற்குள்ளானதாக கூறப்பட்ட 150 கிணறுகளில் தண்ணீர் மாதிரிகள் (Water Sample) எடுக்கப்பட்டு, அவற்றில் 109 கிணறுகளில் குடிநீரில் கழிவு எண்ணெய் மாசு இருப்பது கண்டறியப்பட்டது. இது 72%இற்கும் மேற்பட்ட பாதிப்பு அல்லவா?

கேள்வி: இப்பகுதியில் உள்ள குடிநீரில் எண்ணெய்க் கலப்பிற்கு மேலதிகமாக வேறு மாசுக்களும் ஏற்பட்டுள்ளதா?

பதில்: நிச்சயமாக , 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அதன் பின்னான காலகட்டத்தில் தென் பகுதியில் இருந்து செயற்கைப் பசளை , கிருமி நாசினிகள், பல வகை இரசாயனங்கள் என்பன அதிகரித்த பாவனைக்கு உட்படுத்தப்பட்டது. இவற்றின் காரணமாக நிலத்தடி நீரின் நைத்திரேற்றின் செறிவு ($NO^{3-}$) அதிகரித்துள்ளதுடன் கிருமிநாசினி, களைகொல்லிகளின் மீதிகளும் நிலத்தடி நீருள் கலந்திருக்குமென ஊகிக்க முடிகிறது.

நீரில் கலந்துள்ள எண்ணெய்க் கழிவு , நைத்திரேற்று ஏனைய கிருமிகள் போன்ற அனைத்தையும் ஒரேநேரத்தில் சுத்திகரிக்கக்கூடிய தொழில்நுட்பம் இங்கு இல்லை. அவ்வாறு இவை அனைத்தையும் செய்து விடக்கூடிய தொழில்நுட்பத்தை பெறுவதாயின், அதற்கு அதிக பணச்செலவு ஏற்படும். இவற்றிற்கு சாதாரண மக்கள் முகம் கொடுக்க முடியாது.

கேள்வி: தங்களது ஆய்வுகளின் மூலம் குறைந்த செலவில் குடிநீரை சுத்திகரிக்கக்கூடிய வழிவகைகள் எதையாவது கண்டுபிடிக்க முடிந்ததா?

பதில்: அதைத்தான் நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த முறைமூலம் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் குடிநீரை வடிகட்டி குடித்திருக்கிறார்கள் எனவும் அறிய முடிகிறது. இந்த அடிப்படையில் நாம் உயிரியல் மண் (Biosand Filter ) முறையை கண்டுபிடித்திருக்கிறோம்.

நாம் வடிவமைத்திருக்கும் இந்த நீர் வடிகட்டியின் மேற்பாகத்தில் எண்ணெய் கலந்த நீரில் காணப்படும் பக்றீரியாக்களை விட்டிருக்கின்றோம். முதலாவதாக, வடிகட்டியினுள் இறங்கும் தண்ணீரில் இருக்கக்கூடிய எண்ணெய் பகுப்புக்களை இவை பிரித்தளிக்கின்றன. "இயற்கை என்றுமே இடைவெளிகளை வைத்திருப்பது இல்லை" என்ற கருத்து சுன்னாகத்தில் குடிநீருடன் கலந்த எண்ணெய் விடயத்திலும் பொருந்துவதாகவே உள்ளது. எண்ணெய் கலந்த நீரில் இருந்தே அவ்வெண்ணெய் தாதுக்களை அழித்துவிடக்கூடிய பக்றீரியாக்கள் உருவாகியுள்ளன என்பதுதான் அது. இதன் இரண்டாவது கட்டமாக வல்லிபுரக்கோயில் கடற்கரையில் எடுக்கப்பட்ட சுத்த மான மணல் போடப்பட்டு எண்ணெய்த் தொற்று நீக்கிய நீரை வடிய விடுவதன் மூலம் ஏனைய மாசுக்கள் நீக்கப்படுகின்றது. இச் செயற்பாட்டின் மூலம் அம் மண்ணில் இந்த பக்றீறி யாக்கள் சேர்ந்துகொள்ளும்.

அடுத்த கட்டத்தில் அடிப் பாகத்தில் இறங்கும் நீரானது சிறுகற்கள் மற்றும் உயிர்ப்பூட்டிய கரி என்பவற்றைக் (Activated Charcoal) கலந்து பாவிக்கப்படுகின்றது. மேலும், எதிர் அயன் உறிஞ்சியும் பயன்படுத்தப்படவுள்ளது. மேற்படி வடிகட்டும் கருவியானது Biosand activated char coal மற்றும் எதிர் அயன் உறிஞ்சி ஆகியவற்றைக் கொண்டிருப்பதால், ஒயில் - ஐதரோ காபன், விவசாய இரசாயன மீதிகள் மற்றும் நைத்திரேட் போன்ற வற்றை அகற்றும் தன்மை வாய்ந்தது.

சுருக்கமாகக் கூறுவதாயின் இந் நீர் வடிகட்டியானது எமது சூழலுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

கேள்வி: இது போன்ற குடிநீர் சுத்திகரிப்பு முறை உலகில் வேறு எங்காவது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா?

பதில் : நிறையவே உண்டு. அண்மைக்கால உதாரணமாக சாம்பியாவில் ஏற்பட்ட வாந்திபேதி நோய் மாசுபட்ட ஆற்று நீரால் பரவியது என்பதால், இவ் வடிகட்டும் முறையைப் பயன்படுத்தி உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் அந்தச் சவால் வெற்றி கொள்ளப்பட்டது. யாழ். குடா நாட்டைப் பொறுத்தவரை சாம்பியா வில் காணப்பட்ட சூழலுக்கு மேலதிகமாக கழிவு எண்ணெய்க் கலப்பு ஏற்பட்டுள்ளது. பொதுவாக மணற்பாங்கான நிலங்களைத் தவிர ஏனைய பகுதிகள் உலக சுகாதார ஸ்தாபனங் (WHO) களில் திறந்த குடிநீர் கிணறுகளை (Open Dug Well) வெட்டிக் கட்டும் போது வெட்டப்பட்ட மண்ணுக்கும், சீமெந்தால் கட்டப்படும் சுவருக்கும் இடையிலான பகுதி யில் சுத்தமான மணல் போட்டு நிரப்புவது வழக்கம். இது பொதுவாக எமது முன்னோர் பின்பற்றிய ஒரு வடிகட்டல் முறையாகும். இதன் மூலம் பாதுகாப்பான குடிநீரை பருகுகின்ற வழக்கம் எம்மிடம் ஏற்கனவே இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

இறுதியாக நாம் ஒன்றை குறிப்பிட விரும்புகின்றோம். "ஒரு சுகாதர மான சுற்றுச்சூழலை பெற்றுக் கொள்ளும் உரிமை தற்போது வாழும் மக்களுக்கு மட்டுமல்லாது, இனிமேல் பிறக்கப்போகின்றவர்களுக்கும் உண்டு" என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இது சட்டத்தில் உள்ள "வாழும் உரிமை" என்பது எம்மில் பலருக்கு தெரிந்திருப்பதில்லை.

**The right to a Healthy environment is a right even the unborn**



01.07.2015 காலை 10 மணியளவில் திருநெல்வேலி, யாழ்ப்பாணம் லட்சுமி மண்டபத்தில் முகவரி நூல் அறிமுக விழா கொண்டாடப்பட்டது.யாழ். இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் ஓய்வுநிலை அதிபர் மதிப்புக்குரிய திரு.அ.பஞ்சலிங்கம் தலைமையில் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அவர் தனது தலைமை உரையில் எமது



யாழில் முகவரி வெளியீடு

பிரதேசத்தில் தேய்ந்து போய்விட்ட வாசிப்பு பழக்கத்திற்கு புத்துயிர் அளிப்பதற்கும், பயன்மிக்க பொழுது போக்காக வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதற்கும் "முகவரி" மாத இதழ் துணை நிற்கும் என்று வலியுறுத்திய அவர், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாண இந்திய துணைத் தூதரகத்தின் துணைத் தூதுவர் திரு.எ.நடராஜன் அவர்களது வருகைக்காக பாராட்டும் நன்றியும் தெரிவித்தார்.

"முகவரி" சஞ்சிகையின் வெளியீட்டு உரையை யாழ்ப் பாண பல்கலைக்கழகத்தின் கல்வித்துறை முதுநிலை விரி-வுரையாளர் இ.குமரன் அவர்கள் நிகழ்த்தினார். தமிழ் இலக்கிய பரப்பில் சஞ்சிகைகளின் வளர்ச்சிப்போக்கினையும் அவை ஏற்படுத்திய தாக்கங்களையும் விபரித்த அவர், முகவரியின் விடய உள்ளடக்கங்கள் அதன் தொலைநோக்கு என்பவற்றையும் மிக விரிவாக தெளிவுபடுத்தினார். பொழுதுபோக்கு சஞ்சிகை என்ற நோக்கில் அதன் பல்வகைமை பற்றியும், விரிவாக பேசிய திரு. குமரன் அவர்கள் அதன் எதிர்கால வளர்ச்சி பற்றிய நம்பிக்கை சிந்தனைகளையும் முன் வைத்தார்.

வாழ்த்துரை வழங்கிய பேராசிரியர். மா.சின்னத்தம்பி அவர்கள் முகவரி ஆற்ற வேண்டிய சமுதாய பங்களிப்பு பற்றியும் கல்விமான்கள் மற்றும் சான்றோர்களின் சமூகப் பொறுப்புணர்வுகள் பற்றியும் குறிப்பிட்டார். தமிழர்களின் முகவரியாக அவர்களது பண்பாடு விளங்குவதையும், அது பேணப்படுதலே அவர்களது பலம் என்றும் குறிப்பிட்டார். தமிழ்மொழி, கலை, இலக்கியம் தமிழர் தம் ஒழுங்கு, ஒழுக்கம், வாழ்க்கை நடத்தைக் கோலங் கள் வாழ்க்கை பற்றிய விழு மியம் என்பவற்றை கட்டிக்காப்பது, இத்தகைய சஞ்சிகைகளின் தேவைப்பாடு என்பதை வலியுறுத்தினார். முறைசார் கல்வியில் ஈடுபடும் மாணவர்கள் பரீட்சை மண்டபத்தில் ஒப்புவிப்பதற்கான அறிவைத் தேடுவதில் காட்டும் நடத்தை, ஏனைய வகுப்புக்களில் வெளிப்படுத்துவதில்லை. பொதுவாக முன்னைய எழுத்தாளர்களான லஷ்மி போன்றவர்கள் நடுத்தர குடும்ப பெண்களுக்கான பயனுள்ள அறிமுக வழிகாட்டுதலை தமது புனைவுகள் ஊடாக வழிகாட்டியிருந்தார். முன்பு வாசிப்பு - குடும்பப் பெண்களின் பிரிக்க முடியாத அம்சமாகவும் இருந்தது. இப்போது தொழில் நுட்பக் கருவிகளின் மேலாதிக் கத்தால் வாசிப்புப் பழக்கம் தூர்ந்துபோய் விட்டது. இந்த இடைவெளிகளை நிரப்பும் பணியை முகவரி ஆற்றும் என வலியுறுத்திய அவர் முகவரியின் வளர்ச்சி நம்பிக்கை தருவதா-கவும் சுட்டிக்காட்டினார்.

பிரதம விருந்தினராக யாழப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தின் மாண்புமிகு எ.நடராஜன் கலந்து கொண்டார். முகவரி மாத இதழா-னது வார இதழாகவும் வளர்ச்சி பெற்று நாளிதழாகவும் வெளி-வரும் என்ற நம்பிக்கை கலந்த வாழ்த்தினை தெரிவித்தார். யாழ்ப்பாண மக்களின்அனைத் துத் தேவைகளையும் நிறை வேற்றுவதற்காகவே இந்திய துணைத்தூதரகம் இருப்ப தென்பதையும் வலியுறுத்தினார்.

பின்னர் வருகை தந்திருந்த வைத்திய கலாநிதிகள், விரிவுரையாளர்கள், பாடசாலை அதிபர்களுக்கு சிறப்புப் பிரதிகளை வழங்கி நிகழ்வை சிறப்பித்தார். சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்ட பின்னர் நன்றியுரையில் திரு.ப.பாலமுகுந்தன் அவர்கள் முகவரியை முகர வந்திருக் கும் முகவரி வாசக அன்பர் களுக்கும், இந்திய துணைத் தூதுவருக்கும் முக்கியமாக கனடா வாழ் தமிழ் அன்பர் களுக்கும் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

நிகழ்ச்சியினை வர்ணனைக் கலாநிதி காரை M.P அருளானந் தம் அவர்கள் தமது இனிய வர்ணனைகளினால் தொகுத்து வழங்கினார். முகவரி வெளியீட்டு விழா இனிதே நிறைவடைந்தது.

## டயஸ் போறா
(Diaspora)

டயஸ்போறா என்ற சொல் - இலங்கையில் எல்லோராலும் பந்தாடப்பட்டு வருகின்றது. உண்மை யில் இது ஒன்றும் வேண்டப்படாததோ அல்லது தூஷண வார்த்தையோ அல்ல. டயஸ் போறா என்பது புலம் பெயர்ந்து வாழுகின்ற மக்கள் என்று அர்த்தப்படும். சிங்கள மக்கள் கூட உலகின் பல நாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். ஆனால், இந்த வார்த்தையுடன் மிக நெருக்கமாக இணைத்துப் பேசப்படுபவர்கள் புலம்பெயர் தமிழர்களே.

புலம்பெயர் தமிழர் ஏற்கனவே ஐ.நா. சபைக்கு முன்பாகவும், வேறு பல இடங்களிலும் புலிக்கொடியை ஏந்திய வண்ணம் போராட்டங்களில் இறங்கி இருந்தனர். முள்ளிவாய்க் காலில் தமிழ் மக்கள் கொல்லப்பட் டதற்கு சர்வதேச விசாரணை ஒன்று நடாத்தப்பட்டு, குற்றம் இளைத்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் எனப் பல நாடுகளில், தமிழ் புலம் பெயர்ந்த வர்கள் தமது மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு நியாயம் கேட்டு வருகின்றனர்.

இது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட அவரது அரசியலில் அங்கம் வகித்த பலருக்கும் பாரிய தலையிடியாக உள்ளது. பீல்ட் மாஷல் சரத் பொன்சேகா உட்பட பல இராணுவ அதிகாரிகளும் இவ் அமைப்புக்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த விடயம் சிங்கள ஊடகங்களில் தமிழ் டயஸ்போறா என்றே வெளிக் கொணரப்பட்டுள்ளது.

அவர்களது அர்த்தத்தில் புலிகள் தான் வெளிநாடுகளில் டயஸ்போறா என்ற பெயரில் உள்ளனர் என்ற தோற்றப்பாடு ஏற்பட்டு விடுகின்றது. சிங்கள அகராதியில் டயஸ் போறா என்கின்ற ஆங்கிலச் சொல்லுக்கு சரியான சிங்களச் சொல் ஒன்றை கண்டு பிடிக்கும் வரை சிங்களவர் மத்தியில் இந்தக் குழப்பம் இருக்கத்தான் போகிறது.



**செ.நந்தகுமார்**
**கோப்பாய் வடக்கு, கோப்பாய்.**
**Mr.X அவர்களே!**

**தமிழர் சிங்கள மொழியைப் படிப்பது பிரியோசனமானதா? ஏன் படிக்கவேண்டும் என்பதற்குத் தங்களது பதிலை அறிய விரும்புகிறேன்.**

பதில்: சிங்கள மொழியை நீங்கள்" எதிரியின் மொழி" என்று கருதினால் அதற்கான பதில் கட்டாயம் கற்க வேண்டும் என்பதுதான். " சகோதரமொழி" என்று நினைத்தால் கட்டாயமாக அந்த மொழி தெரிந்திருப்பது அவசியம்.

மிக நீண்ட காலமாக அராபியருடன் போராடி வருகின்ற யூதர்கள் அரபு மொழியைத் திட்டமிட்டுத் தமது பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கின்றனர் . ஒரு மனிதனுக்கு தனது தாய்மொழியைவிட வேறு மொழிகளை கற்கமுடியுமாயின், ஒவ்வொரு மொழியும் அவனுக்கு இன்னோர் கண்போல அமையும். யாழ்ப்பாணத்து அறிஞரான ஆறுமுகநாவலருக்கு ஆங்கிலம் தெரியாது இருந்திருந்தால், அவரால் கிறிஸ்தவ மத நூலான பரிசுத்த வேதாகமத்தை தமிழில்மொழி பெயர்த்திருக்க முடியாது.

சிங்கள மொழியை எதிரியின் மொழியாகக் கருதிய எம் மூத்தோர்கள் - அதை ஒரு சவாலாக எடுத்துக் கற்றிருந்தால், நாம் நினைப்பதை சிங்கள மக்களுக்கு இலகுவில் விளங்கப்படுத்தியிருக்க முடியும். இந்த விடயத்தில் தமிழரிடம் அந்நியமாதல் என்ற நிலை இருந்தமையால் இன்று வரை எம்மை நாமே அந்நியமாக்கிக் கொண்டோம். பொதுவாக தமிழரிடம் ஆயிரத்தில் ஒன்று என இருக்கும் கெட்ட உதாரணங்கள் பற்றியே தொடர்ந்தும் பேசும் பழக்கம் உண்டு.

1983 இனக்கலவரத்தின் போது ஏறத்தாழ 3000 இற்கு மேற்பட்ட தமிழர் கொல்லப்பட்டதை பற்றிப் பேசுகின்றோமே தவிர, சிங்கள மக்களால் காப்பாற்றப்பட்ட 300000 ம் மேற்பட்ட தமிழர்களைப் பற்றி யாரும் கண்டுகொள்வதில்லை. இவ்வாறு குடும்பம் குடும்பமாக சிங்களவரால் காப்பற்றப்பட்டவர்களில் பலர் தற்போது வெளிநாடுகளில் வசித்து வருகின்ற போதிலும், அந்த உயிர்போகும் தருணத்தில் உதவிய சிங்கள நண்பர்கள் பற்றியோ அவர்கள் செய்த உதவிகள் பற்றியோ எந்த செய்திகளிலும் பேசுவதாய் இல்லை. அவர்களின் பிள்ளைகளாவது ஒருக்கால் வாய் திறந்தால் என்ன? மரணத்தறுவாயில் காப்பாற்றப்பட்டு விட்டால் கடவுள் தான் அந்த வடிவத்தில் வந்து காப்பாற்றினார் என்கிறோம். ஆனால், 1983 கலவரத்தில் உயிர் காத்தவர்கள் மட்டும் ஏன் அவ்வாறு தெரிவதில்லை .

சிங்களமொழியைப் படிப்பதன் மூலம் சிங்கள மக்களின் கலாசாரம், இலக்கியம், திரைப்படங்கள், கவிதைகள் என இன்னோரன்ன விடயங்களைக் கற்று அதைத் தமிழுக்கும் பரிமாறமுடியும்.

ஒரு மொழியைக் கற்பது என்பது எப்பொழுதும் பயனுடையது. முன்னாள் இந்தியப் பிரதமராக இருந்த நரசிம்மராவ் அவர்களுக்கு ஒன்பது மொழிகள் நன்றாகவே தெரியும். சென்னை மாநகரில் உள்ள ஒரு முச்சக்கரவண்டிச் சாரதிக்கு குறைந்தது ஐந்து மொழிகளாவது பேசமுடியும்.

திலக் ஜயரட்ண என்பவரால் எழுதப்பட்ட கடுள்ள (கடவை) என்ற தொலைக்காட்சி நாடகத்தில், சிங்களவர் தூய இனத்தவர் அல்ல தென்னிந்தியப் பகுதிகளில் இருந்து வந்தவர்களே என நிருபித்துள்ளார். இவ்வாறான பல விடயங்கள் சிங்களமொழி தெரியாது இருப்பதால் தமிழ் மக்களைச் சென்றடைவதில்லை.

எனவே, சிங்களமொழியைப் படிப்பது எந்த வகையிலும் பயனுடையது. எமது முன்னைய சந்ததியில் பலர் சிங்கள மொழிப் பரீட்சையை எடுக்கமாட்டேன் என தமது பதவிகளை இராஜினமாச் செய்துவிட்டு பின்னர் வருந்தியதைக் கண்டிருக்கிறேன்.

தமிழருக்கு இன்னொரு மொழி தெரிந்திருந்தால் அது ஒரு கெட்ட விடயமாக ஆகாது. ஆனால் சிங்களவர் தமிழ் மொழியை ஆர்வத்துடன் கற்று வருகின்றார்கள்.

**க. துஸ்யந்தன்**
**மானிப்பாய்**

**Mr X அவர்களே 2015 பொதுத் தேர்தலில் என்றும் இல்லாதவாறு தேர்தல் ஆணையாளர் சட்டங்களை இறுக்கி வருகிறார். வேட்பாளர் தமது சுவரொட்டிகளைக் கூட ஒட்டமுடியாது என்கிறார். இது சரிதானா?**

பதில் - துஸ்யந்தா! இது ஒன்றும் புதிய சட்டம் அல்ல. தேர்தல் ஆணையாளரான மகிந்த தேசப்பிரிய




ஓய்வுபெற்றுவிட்டார். அவர் தலைமையில் நடைபெறும் இறுதித் தேர்தல் இது என்பதால் தேர்தல் சட்டங்களை உண்மையாகவும், ஜனநாயக முறைப்படியும் அமுல்படுத்த முனைகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக பொதுமக்கள் நன்மை அடையவேண்டும் என்பதே அவரது விருப்பமாக இருக்கின்றது.

தேர்தலுக்காக :

- தேவையற்ற செலவுகளைக் குறைத்தல்.
- சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பான வகையில் பொலித்தீன் தாள்களை பாவிப்பதை தவிர்த்தல்.
- சாராயம், சில பரிசுப் பொருட்களை இலஞ்சமாக வழங்கி வாக்கு கேட்பதைத் தவிர்த்தல்.
- மதத் தலங்களைத் தேர்தல் பிரச்சாரங்களுக்குப் பாவிக்காது தடுத்தல்.
- பொதுச் சொத்துக்களைத் தேர்தலுக்காக பயன்படுத்துவதைத் தடுத்தல்
- போஸ்ரர், கட் அவுட்டுக்களை வைப்பதற்குத் தடை.

எனப் பல விடயங்கள் இதில் அடங்குகின்றன ஆனால், வேட்பாளர்கள் பல அலுவலகங்களை திறக்கவும், 15 பேருக்குக் குறைவான தொகையினர் வீடு வீடாகச் சென்று மக்களை சந்திக்க முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பல வேட்பாளருக்கு மக்கள் மத்தியில் சென்று எதைச் சொல்வது? மக்கள் தாம் சொல்வதை ஏற்றுக்கொள்வார்களா? போன்ற ஒத்திகைகளை மேற்கொண்டபின் தமது ஆதரவாளருக்கூடாக கிராம மட்டத்தில் அறிந்த பின் அதனால் ஏற்படப்போகும் அனர்த்தத்தை முன்னுணர்ந்து செயற்படுகின்றனர்.

இதனால் தமிழ்க் கட்சிகள் பல நேரடியாக மக்களைச் சந்திக்கின்ற பயத்தில் தமது வீரதீரங்களை எல்லாம் கடிதமாகவும், கட்டுரையாகவும் எழுதி அவ்வப்போது சிரித்த படங்களையும் போட்டு அச்சடித்து, மூன்றுவேளை சாப்பாடு, ரூபா1500 நாளொன்றுக்கான சம்பளம் எனக் கூலிக்கு ஆள்பிடித்து தேர்தல் தூது அனுப்புகிறார்கள்.

இவ்வாறு செல்பவர்கள் வீடுகளில் மக்கள் இல்லாத நேரத்தில் வேலியில் உள்ள பூக்களை களவெடுப்பது போல, ஆளில்லா நேரத்தில் சுவர்களில் ஸ்ரிக்கர்களை ஒட்டிவிட்டுத் துண்டுப்பிரசுரங்களையும் கசக்கி சொருகிவிட்டு ஓடுகிறார்கள். சில இடங்களில் இவ்வாறான பிரசுரங்களும், படங்களும் பற்றைகளுக்குள்ளும், புறம்போக்கான இடங்களிலும் நூற்றுக்கணக்கில் வீசி எறியப்பட்டுள்ளன.

தற்செயலாக யாராவது துண்டுப்பிரசுரங்களைக் கொண்டு வரும் போது அவரது வேட்பாளர் தொடர்பில் ஏதாவது கேட்டால் "அது பற்றி எமக்குத் தெரியாது நாங்கள் சம்பளத்திற்கு வேலை செய்கிறோம்" என்கின்றனர்.

தேர்தல் ஆணையாளர் ஒவ்வொரு வேட்பாளரும் மக்களை நேரடியாகச் சந்தித்து வாக்கு கேட்கும் பூரண சுதந்திரத்தை வழங்கியிருக்கிறார் என்பதில் சந்தேகம் இல்லை.

03.08.2015 இல் தேர்தல் ஆணையாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு அறைகூவலை விட்டிருக்கின்றார் "தற்போது அவர்களிடம் உள்ள அரசுக்குச் சொந்தமான வாகனங்களை உடனடியாகக் கையளிக்குமாறும், அல்லாவிடில் பொலிஸ் திணைக்களத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்படும்" இவ்வறிவித்தல் பல முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கையறு நிலையைத் தோற்றுவித்துள்ளது.

அதேவேளை, தேர்தலுக்கு முன்னதாக வேட்பாளர்கள் தமது சொத்து விபரங்களை கையளித்து விடவேண்டும் என ஆணையாளரினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களைச் செவிமடுத்து, 04.08.2015 இற்கு முன்னதாக 68 வீதமான வேட்பாளர்கள் தமது விபரங்களை கையளித்து விட்டனர். இது என்றும் இல்லாத ஒரு மாற்றமென அவரே குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தேர்தலினூடாகவாவது மக்களுக்குத் தேர்தல் சட்டங்கள் என்னவென்று புரிந்துவிடும் அல்லவா? ஓய்வுபெற்றுச்செல்லும் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவுக்கு முகவரியின் சார்பாக எமது வாழ்த்துக்களை தெரிவித்துகொள்வோம்.

## தேசியப் பட்டியல்

ஒரு பா.உ மக்களுக்கு சேவைபுரிபவராக இருப்பது மிக அவசியமானது. இந்த அடிப்படையில் தேசியப் பட்டியலில் தெரிவு செய்பவர்கள் இருப்பதில்லை.

- கட்சித் தலைவருக்கு விசுவாசமானவர்.
- தேர்தலுக்கு பணம் செலவிட்டவர்.
- மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள்.
- சண்டித்தனம் உடையவர்கள். திறமையற்றவர்கள்.
- குறிப்பிட்ட கட்சியில் நீண்ட காலம் இருப்பவர்கள்.
- பொது வாழ்வில் மக்கள் நலன்களில் அக்கறைகொள்ளாதோர்.
- கட்சியின் கொள்கைகளுக்கு முரண்பாடாக நடந்துகொள்வோர்.
- சட்டம் இயற்றும் நிறுவனமான பாராளுமன்றத்திற்கு செல்பவர்கள். அது சார்ந்த அறிவுள்ளவுள்ளவர்களாக இருத்தல் அவசியமானது.

ஒரு சமூகத்தின் நவீன கால வரலாற்று வளர்ச்சியென்பது அதன் பொருளாதார வலிமையை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளினால் பெரிதும் தீர்மானிக்கப்படுகின்றது.

# தமிழர் வங்கியும், தமிழருக்கான முன்னேற்றமும்

பேராசிரியர் : மா.சின்னத்தம்பி

உலகமயமாதல் - அறிவுப்பொருளாதாரம் என்ற உலக வளர்ச்சி சார்ந்த கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகள் வங்கியியல் சார்ந்த நிதிமுறைச் செயற்பாடுகளுடன் பிணைந்திருப்பதுடன், அவை நவீன பொருளாதார வளர்ச்சியின் போக்கையும், உறுதித் தன்மையையும் நிர்ணயம் செய்கின்றன.

வங்கியியல் வளர்ச்சிகளின் இன்றியமையாத அம்சமாகக் கருதப்படுவது பல்வகை மாதிரியான வங்கிகளின் எண்ணிக்கையும் வளர்ச்சி வேகமுமாகும்.

வளர்ச்சி பற்றிய மூலக்கூறுகளில் வங்கிகளில் சமூக ரீதியான செயற்பாடுகளும் செயற்றிறன்களும் முக்கியமானவை.

இலங்கையின் நாட்டுக்கோட்டை செட்டிமாரினால் ஆரம்பிக்கப்பட்ட வங்கித்துறை சுதந்திரத்துக்குப் பிந்திய ஆறு தசாப்த காலத்தில் பல்வகைமையுடன் இயங்கி வருகின்றது.

இஸ்லாமிய வங்கிமுறை - இஸ்லாமியர்களின் பொருளாதார எண்ணத்துக்கமையவும், சம்பத் வங்கி பௌத்த மத எண்ணக் கருக்களுக்கமையவும் உருவாகி செயற்பட்டு வருகின்றன.

தென்னிலங்கை அபிவிருத்தி, மலைநாட்டு அபிவிருத்தியென பிரதேச வளர்ச்சிகளை மையப்படுத்தியும் வங்கிகள் உருவாகி, குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றி வருகின்றன. இவையனைத்துமே தேசிய ரீதியிலான வங்கித்துறை மற்றும் நாணய முறைமையின் வளர்ச்சிக்குத் துணை செய்வதோடு, தமக்குரிய குறிப்பான இலக்குகளை அடைவதிலும் அக்கறையும் கொண்டுள்ளன.

மாகாண அரசியல் முறைமையில் தமிழர் தம் புதிய நோக்கிலான புதிய பொருளாதார எத்தனங்கள் பற்றிய சிந்தனை எமக்கும் அவசியமாகவுள்ளது. இதற்கமைவாக தமிழர்களுக்கான வங்கியொன்றை உருவாக்குவது பற்றிய சிந்தனையை சமூகமயப்படுத்த விரும்புகிறேன்.

தமிழர்களுக்கான வங்கியென்பது, தமிழர்களின் அரசியல், சமூகவியல், கல்வி மற்றும் பண்பாட்டுக் குறிக்கோள்களுக்கு அமைவான பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு நீண்ட காலத்தில் மிகப் பெரிய வாய்ப்புக்களை வழங்க முடியும். மகளிரைத் தலைமையாகக் கொண்ட பல புதிய தொழில் முனைப்புக்களுக்கும் அது உந்துதல் வழங்க முடியும்.

**தேசிய அபிவிருத்தியில் பங்கு கொள்ளுதல்.**

இலங்கையில் வேற்றுமை மற்றும் தனித்துவம் என்பவற்றுடன் தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்பவராகவும் தமிழர்களின் பொருளாதார செயற்பாடுகளை வடிவமைக்கும் காலம் இப்போது தொடங்குவதாக நாம் நம்புதல் வேண்டும்.

புதிதாகச் சிந்தித்தல் அல்லது மாறுபட்டுச் சிந்தித்தல் என்பது வளரும் சமூகங்களுக்கு அவசியமாகின்றது. தேசிய வங்கி முறையில் செயற்படும் பல்வேறு அரச வங்கிகளிலும் தனியார் வங்கிளிலும் வாடிக்கையாளர்களாகவும், பணியாளர்களாகவும் தமிழர்கள் 1930 களிலிருந்தே செயற்பட்டு வந்துள்ளனர். முன்னோடி வங்கிப் பணி இன்று வரை வினையாற்றலுடனும் விசுவாசத்துடனும் தொடர்வதை இச் சந்தர்ப்பத்தில் பெருமையுடன் நாம் நினைவு கூறவேண்டும்.



உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் எங்கள் மக்களது உழைப்பின் வருமானமும், முதலீடும், செல்வமும் பல நூறு வங்கிகளை வளர்ச்சி பெற உதவி வருகின்றன. இவ்வாறு சிதறிக் கிடப்பவற்றை ஒருமுகப்படுத்தும் மாதிரியில், தமிழருக்கான வங்கியொன்றை தனித்தன்மையுடன் ஆரம்பிப்பது அவசியமாகியுள்ளது. உலகமயமாதல் நிகழ்வுடன் அது பொருந்தவும் வேண்டும்.

தமிழர்களின் பொருளாதார மேம்பாடு பற்றிச் சிந்தித்து தேசிய முறைமையை பலப்படுத்தும் பங்காளராக எமது தமிழர் வங்கி உருவாக்கப்படுவதும் செயற்படுவதும் அவசியம்.

எளிய மக்களிடம் சிறு சேமிப்புக்களை ஊக்குவிப்பதிலிருந்து, பாரிய முதலீட்டு நிதியை திரட்டுவது வரை எமது கிராமிய மக்கள் தொடங்கி உலகின் பாரிய தொழில் முனைவோர் வரை நிதிசார் அணுகுமுறையை புத்துயிர் பெறச் செய்வதாக தமிழர் வங்கி வளர்ச்சி பெறமுடியும்.

நுண் நிதியிலிருந்து உலக முதலீடு வரையான முயற்சிகளில் தமிழர்களையும் அவர்களது நிதி மூலங்களையும் ஒருங்கிணைப்பது அவசியமாகிறது.தமிழர்களின் அறிவு மூலங்களை ஒருங்கிணைப்பதிலும் இவ்வங்கி சிறப்பாக கவனம் செலுத்தமுடியும். உள்ளூர் விவசாயக் கிராமங்களிலிருந்து உலகின் வளர்ச்சிபெற்ற நகரங்கள் வரை எமது தமிழர்களின் நிதி மூலங்கள் சிந்திச் சிதறிக் கிடக்கின்றன. இவற்றை ஒருங்கிணைப்பதாகவும் இந்த முயற்சி அமைய முடியும்.

புதிதாக உருவாக்க நினைக்கும் தமிழர் வங்கியானது தேசிய சேமிப்பு, தேசிய முதலீடு, சுதேசிய உற்பத்திப் பெருக்கம் சுதேசிய தொழில் வாய்ப்பு, தேசிய அந்நிய செலாவணி உழைப்பு, தேசிய அபிவிருத்தியின் பங்காளராக ஆவதுடன் தமிழர் சார்ந்த குறிப்பான வளர்ச்சி இலக்குகளிலும் கூர்மையாக கவனம் செலுத்த முடியும்.

தமிழர்களின் சேமிப்பு ஊக்கத்தினை புதிய முனைப்பு மிக்கதாக மாற்றுவதில் தமிழர் வங்கி மிகப் பெரிய பங்காற்ற முடியும். “எமது வளர்ச்சியில் எமது நிதி” என்ற வளர்ச்சிக் கோட்பாட்டை நாம் இந்த வங்கி முறை மூலம் உலகரீதியில் நிலை நிறுத்தமுடியும்.

எமது விவசாய கிராமங்கள், சிறு கைத்தொழிற் கிராமங்கள், கடற்கரையோரக் கிராமங்கள் போன்ற பலவும் நிதித் தேவைகளுடனும், நிதிசார் உள்ளடங்கிய ஆற்றலுடனும், அரைகுறையாக இயங்கி வருகின்றன. இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் நியமங்கள் மற்றும் விதிகளுக்கு அமைவாக எமது கிராமிய வங்கியியல் செயற்பாட்டை புதிய திசைகளில் திட்டமிட வேண்டும். எமது பிரதேசங்களில் புதிதாக வளர்ச்சி பெறும் சிறு நகர மற்றும் துணைநகர வளர்ச்சியில் பங்கேற்கும் சேவைத்துறை (Service sector) இல் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கவும், புதிய தொழில்சார் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் தமிழர் வங்கி புதிய மாதிரியில் நிதித் திட்டங்களை வகுக்க முடியும். இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் விதிமுறைகளுக்குட்பட்டனவாக அவற்றை வடிவமைப்பதில் எவ்வித நெருக்கடியும் ஏற்படமாட்டாது.

(17ம் பக்கம் பார்க்க...)

# மக்கள் விடுதலை முன்னணியின் (J V P) எழுச்சி

அ. விஜயகிருஷ்ணன்


தோழர் சண்முகதாசன்

**தலைவர்களின் ஊழல் அற்ற தன்மையும் நேர்மையான நடவடிக்கைகளும் ஒழுக்கம் மிக்க செயற்பாடுகளும் ஜனநாயகத் தன்மையும் ஜே.வி.பியின் அரசியலைத் தக்க வைத்துக் கொள்ளும் என்பதைவிட அவர்களின் வெற்றி என்பது ஏனைய அரசியற் கட்சிகளுக்கு சிறந்த முன்னுதாரணமாகவும் இருக்கமுடியும்.**

சீன சார்பு கொமினியூஸ சித்தாந்தத்தில் இலங்கையின் புகழ்பூத்த ஒரு தலைவராக விளங்கியவர் திரு. சண்முகதாசன். இவரது அணியில் முக்கிய உறுப்பினராக ரஷ்யாவில் கல்வி கற்ற இளைஞரான ரோஹன விஜயவீர இணைந்து செயற்பட்டார். சண்முகதாசனுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அக்கட்சியிலிருந்து விலகி மக்கள் விடுதலை முன்னணி என்ற அமைப்பை உருவாக்கினார்.

சீன சார்புக் கொம்யூனிஸ சித்தாந்தத்தைக் கொண்டவரும் கியூபா புரட்சியில் முக்கிய பங்கு வகித்தவருமான சேகுவேராவின் போராட்ட நடவடிக்கைகளாலும் கவரப்பட்ட றோகண விஜேவீர பல்கலைக்கழக மாணவர் மத்தியிலும், இளைஞர்கள் மத்தியிலும் பொதுவுடமை சித்தாந்தத்தை விதைத்து கிராமம் தோறும் மக்களை அணிப்படுத்தி 1971 இல் நாடு தழுவிய ஆயுதப் போராட்டத்தில் இறங்கினார்.

இந்த ஆயுதப் போராட்டமானது சேகுவேராவின் பாணியில் முன்னெடுக்கப்பட்டதால் இவர்களை "சேகுவேரா காரர்கள்" என அழைத்தனர். இப்போராட்டக் காலத்தில் இலங்கையின் பிரதமராக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பதவி வகித்தார். மேற்படி கிளர்ச்சியினை மிக மோசமாக பொலிஸ், இராணுவத்தின் உதவியுடன் அடக்கினார். சிங்களக் கிளர்ச்சியாளர்களான இவர்களை தமது இனம் என்றும் பாராமல் கொன்று குவித்தார். இப் போராட்டத்தில் 10000 இளைஞர்கள் வரை கொல்லப்பட்டும் 20000 இற்கு மேற்பட்டோர் சிறைபிடிக்கப்பட்டும் இருந்தனர்.

இதன்போது பல்கலைக்கழக மாணவியான மனம்பேரி என்ற அழகுராணி இப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக உயிருடன் புதைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. நாட்டின் தலைவியாக ஒரு பெண் இருந்த போதிலும். இவ்வாறு கொலை செய்யப்பட்டது என்பது இலங்கை வரலாற்றில் இன்றும் மாறா வடுவாக உள்ளது.

1971 ஆம் புரட்சியின் போது றோகண விஜேவீர கைது செய்யப்பட்டதுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஸ்கந்தபுரம், ஊர்காவற்றுறை, கடற்கோட்டை போன்ற இடங்களில் கூட றோகண விஜேவீர சிறை வைக்கப்பட்டிருந்தார். 1977ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி அமைத்ததன் பின்னர் ஜே. ஆர். ஜெயவர்த்தன பொது மன்னிப்பு ஒன்றின் மூலம் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தார். 1982 இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலிலும் றோகண விஜேவீர போட்டியிட்டார்.

விடுதலையான விஜேவீர தொடர்ந்தும் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டு 1989 ஆம் ஆண்டு இரண்டாவது ஆயுதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தார். இத்தகைய கட்டத்தில் வடகிழக்கில் இந்திய இராணுவம் குடிகொண்டு இருந்தமையால் சிங்கள இராணுவமும் பொலிசாரும் ஜே.வி.பி. இளைஞர்களின் நடவடிக்கைகளை முடக்குவதில் அதிக அக்கறை செலுத்தினர்.

சிங்கள இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கில் சிறைப்பிடிக்கப்பட்டனர். இறுதியில் றோகண விஜேவீர தலைமறைவானார். இந்தக் காலகட்டத்தில் கிளர்ச்சியாளர்கள் பொலிஸ், இராணுவத்தின் குடும்பங்களைப் பழிவாங்கினர். அதில் அதிக பிரயத்தனம் காணப்பட்டதால் ஜனாதிபதி பிறேமதாச ஜே.வி.பி. கிளர்ச்சியை எப்படியாவது முடிவுக்குக் கொண்டு வந்துவிட யோசித்தார். இதன் பின்னர் றோகண விஜேவீர கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டதுடன், இரண்டாவது ஆயுதப் புரட்சியும் தோல்வியில் முடிந்தது. இதன்போது 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஜே.வி.பி. இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள். இக் கொலைகளுக்கு உடுகம்பொல என்ற பொலிஸ் அதிகாரி முக்கிய பங்காற்றியதாக சொல்லப்படுகிறது.

இதன் பின்பு சோமவங்ச அமரசிங்க அதன் தலைவரானார். விமல் வீரவன்ச இவ்வணியில் மிகவும் தீவிர பேச்சாளராக மாறியிருந்தார். இவர்களது அரசியற் பிரவேசம் காரணமாக ஒரு தேர்தலில் 39 ஆசனங்களை ஜே.வி.பி கைப்பற்றிக் கொண்டது. இதன் பின்னர் சோமவங்ச அமரசிங்கவின் ஆளுமையற்ற தலைமைத்துவம் காரணமாக சோர்வு நிலைக்குச் சென்ற ஜே.வி.பி. இனிமேல் இலங்கை அரசியலில் தலையெடுக்க முடியாது என்ற ஓர் அபிப்பிராயம் பல அரசியல் விமர்சகர்களின் மத்தியில் இருந்தது.

ஜே.வி.பியின் சிறந்த பேச்சாளரான விமல் வீரவன்ச கட்சியை விட்டு வெளியேறியதன் பின்னர் ஜே.வி.பி. முழுமையாக அழிந்துவிடும் என்றே பலராலும் எதிர்வு கூறப்பட்டது.

கட்சியின் இவ்வாறான ஒரு சூழலில் கட்சியின் நிலையைப் புரிந்துகொண்ட சோமவங்ச தமது தலைமைப் பதவியை அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்க முன்வந்தார். (தமிழர் அரசியலில் நடக்காத ஒன்று) இதன் பிரகாரம் அனுர குமார திசாநாயக்க ஜே.வி.பியின் புதிய தலைவராக ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

ஒரு பட்டதாரியான இவர் சிறந்த பேச்சாற்றலும், கட்சிக்குள் எழுகின்ற கருத்துக்களுக்கு செவிசாய்ப்பவராகவும், இனிமேல் ஆயுதப் போராட்டம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதையும் சிறந்த ஜனநாயக தன்மைகளுக்கு மக்களை இழுத்துச் செல்லவேண்டும் என்பதிலும் அதிகம் அக்கறை செலுத்தி வருகிறார்.

கடந்த தேர்தலின் போது 3 பாராளுமன்ற உறுப்பினர்களே ஜே.வி.பி.யிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர். அதாவது அனுரகுமார திஸாநாயக்க , விஜிதஹேரத், சுனில் ஹந்துநெத்தி ஆகியோர் பாராளுமன்றத்தில் தமது கருத்துக்களை ஆணித்தரமாக முன்வைத்தனர்.

மகிந்த அரசு மீதான ஊழல் மற்றும் முறைகேடான விடயங்கள் தொடர்பாக தமது அதிருப்தியை மக்கள் மத்தியில் உரியவாறு எடுத்துச் சென்றவர்களில் இம்மூவரின் பங்கு முக்கியமானது. இந்தக் காலகட்டத்தில் அனுரகுமார திசநாயக்க சிங்கள மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்ற ஒரு தலைவராக வளர்ந்து வருகிறார்.

இனி ஆயுதப்போராட்டம் இல்லை என்ற பின்னணியில் மத்திய தர மக்கள் மத்தியிலும், கிராமத்தவர்கள் மத்தியிலும் ஊழல் அற்ற, நீதியான ஆட்சியொன்று அவசியமானது எனவும் 1971 தொடங்கப்பட்ட ஆயுதப் போராட்டம்



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியாலும், 1989 இல் தொடக்கப்பட்ட இரண்டாவது ஆயுதப் போராட்டம் ஐக்கிய தேசியக் கட்சியினராலும் ஒடுக்கப்பட்டமையால் இவ்விரு கட்சிகளின் செயற்பாடுகளும் ஜே.வி.பி.யினரின் விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

ஜே.வி.பி. க்கு எதிரான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன மாறி மாறி ஆட்சிக்கு வந்தபோதிலும் கடந்த 45 வருட காலமாக ஜே.வி.பி. நிலைத்துநிற்கின்றது என்பது இலங்கை வரலாற்றில் மிகவும் காத்திரமான ஒரு விடயமாகும்.

ஜே.வி.பி .தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை சுகததாஸ உள்ளரங்கில் வெளியிட்டு வைத்த நிகழ்வில் அந்தக் கூட்டம் மிக நேர்த்தியாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

(17 ம் பக்கம் பார்க்க...)

# இறைவற்கொரு பச்சிலை

சந்திரன் கோப்பி குடித்துக் கொண்டிருந்தபோது கிணற்றடியில் இருந்து மணியோசை கேட்டது.

"கிரிஜா" மணி ஆறரை. மார்க்கட்டுக்குப் போட்டு வாறன்" என்று

மனைவிக்குக் குரல்கொடுத்தபடி கூடை-யைத் தூக்கிக் கொண்டு கிளம்பினான்.

தினமும் சரியாக ஆறரை மணிக்கு அந்த மணியோசை கேட்கும்.

அவனுடைய வீட்டிற்கு முன்பாக, முற்றத்திற்கு அப்பால் இருக்கும் கிணற்றடியில் சிறிய அம்மன் கோயில் உண்டு. அந்தக் குடும்பத்தால் பரம்பரை பரம்பரையாக ஆதரித்து வழிபட்டு வரும் அம்மன்.

சந்திரனின் அப்பா நடேசர் தினமும் ஐந்து மணிக்கு எழும்பி, கோயிலைக்கூட்டி, மெழுகி மூன்று குடம் தண்ணீரால் அபிஷேகம் செய்து, மலர் மாலையிட்டுப் பூசை செய்வது வழக்கம். சரியாக ஆறரை மணிக்குத் தீபம் காட்டி, மணி அடித்துப் பூசை செய்வார்.

நாலுமுழ வேட்டியுடன் உடம்பில் திருநீற்றுக் குறியுடன், நெற்றியில் சந்தனப்பொட்டுடன் பூசை முடித்து வரும் போது அவரில் ஒரு தெய்வீகத் தன்மை ஜொலிக்கும்.

நடேசரின் மனைவி திடீரெனக் காலமான போது அவருக்கு நாற்பது வயது. சந்திரன் சிறுபிள்ளை. ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். மனைவியின் இழப்பின் பின்பு அவரது முழுக்கவனமும் சந்திரன்மேல் இருந்தது. அவனைப் படிப்பித்து முன்னுக்குக் கொண்டுவருவதே அவரது குறிக்கோளாக இருந்தது.

அம்மன்மேல் உள்ள பக்தியும், ஈடுபாடும் கூடியது. அம்மனுக்குப் பூசை செய்வதில் பெரும் அமைதியைப் பெற்றார்.

சந்திரன் மார்க்கட்டுக்குப் போய் ஒரு சில நிமிடங்களில் கிரிஜாவின் தோழி வந்தாள். அமெரிக்காவில் வசிக்கும் அவள் தன்வீட்டிற்குக் காரில் வந்ததில் கிரிஜாவிற்குப் பெரும் மகிழ்ச்சி.

அவர்கள் கதைத்துக் கொண்டிருந்த போது, நடேசர் பூசை முடிந்து வந்து கொண்டிருந்தார். அவர் வருவதைக் கண்டதும், அவரை யார் என்று அறியாத "யாரோ பூசாரி வருகுது தண்டலுக்காக்கும், பெரிய நியூசன்ஸ்" என்றாள்.

கிரிஜா எட்டிப்பார்த்தாள். வருவது அவள் மாமனார். அவளுக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. "இவர் அடிக்கடி வருவார். கோப்பி குடுத்தால் குடிச்சிட்டு போயிடுவார்" என்றவள் எழுந்து போய்க் கோப்பி கலந்து கொடுத்தாள்.

இவர்களுடைய உரையாடலைப் பற்றி எதுவுமே அறியாத நடேசர் வழக்கம் போல் சாய்மனைக் கதிரையில் வந்து அமர்ந்தார். கிரிஜா கொடுத்த கோப்பியைக் குடித்துவிட்டுத் திருவாசகம் படித்தார்.

சந்திரன் மார்க்கெட்டால் வந்ததும் கிரிஜா நடந்ததைச் சொன்னாள். "உங்கப் பாவுக்குப் புத்தி சொல்லி இந்தக் குறியையும், பூசையையும் நிற்பாட்டுங்கோ". என்றாள்.

சந்திரன் வெளியே எட்டிப்பார்த்தான். அவர் கோலத்தைப் பார்க்கப் பூசாரிபோலத் தான் இருந்தது. "கிரிஜா இண்டைக்கு அவருக்குச் சொல்லி இதெல்லாத்தையும் நிப்பாட்டுறன்" என்றான்.

அன்று இரவு சாப்பாட்டிற்குப் பின் நடேசர் கந்தபுராணம் படித்துக் கொண்டிருந்தார். சந்திரன் அவரிடம் போய் அப்பா என்றான். படிப்பதை நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்து ""என்ன சந்திரா" என்றார்.

"விடிய ஐந்து மணிக்குப் பச்சைத் தண்ணியிலை குளிச்சு வருத்தத்தைத் தேடப்போறியள். பனிக்காலம், உடம்புக்குக் கூடாது" என்றான். இதைக் கேட்ட நடேசருக்கு உள்ளம் பூரித்தது. தன்னில் எவ்வளவு அக்கறை வைத்திருக்கின்றான் மகன் என நினைந்து மகிழ்ந்தார். பின்பு "எனக்கொண்டும் வராது. அம்பாள் விடமாட்டாள்" என்றார். "அப்பா உங்களுக்கு இப்ப அறுபத்தைந்து வயது. வருத்தம் வந்தால் டாக்டரிடம் தான் போக-வேணும். ஆம்பாளிடம் இல்லை" என்றான்.

"நீ போய் வேலையைப் பார். எனக் கொண்டும் வாராது" என்றவர் மீண்டும் கந்தபுராணத்தில் ஆழ்ந்தார்.

அடுத்தநாள் அதிகாலை ஐந்து மணிக்கு நடேசர் எழும்பினார். வழக்கம் போல கோயிலைக் கூட்டி மெழுகிச் சுத்தம் செய்துவிட்டுக் குடத்தை எடுத்துக் கொண்டுபோய் பைப்பைத் திறந்தார். தண்ணீர் வரவில்லை. மகனின் அறைக் கதவடியில் நின்று சந்திரா தண்ணி இல்லை மோட்டரை போடு, என்றார்.


இவர் கூப்பிட்டவுடன் சந்திரன் எழுந்து வந்தான். "தண்ணி முடியவில்லை தண்ணி இருக்கு நான் தான் பூட்டினான். விடியக் குளித்து உடம்பைக் கெடுக்காதையுங்கோ" என்றான்.

"என்ரை உடம்பு கெடாது. இருபது வருடமா செய்யுற பூசையை விடமாட்டன். தண்ணியைத் திற" என்றார்.

சந்திரனுக்குச் சினம் பற்றிக்கொண்டு வந்தது. "இந்தப் பூசையால என்ன பலனைக் கண்டியள்"? என்றான்.

திடுக்கிட்டுப் போ-னார் நடேசர். சந்திரனா இப்படிக் கேட்பது அவர் காதுகளையே நம்பமுடியவில்லை.

"என்ன பலனா? மன அமைதி கிடைச்சுது. அதைவிட வேறு என்ன வேண்டும்? பத்து வயதிலை உன்தாய் இறந்தபோது இந்த உல-கில் தனித்து விடப்பட்ட உனக்கு மன அமைதியையும் மனப்பக்குவத்தையும் தந்தது அம்பாள் தாண்டா.இந்த மனஅமைதி கிடைத்திரா விட்டால் உன் அம்மா இறந்ததும் நான் பைத்தியக் காரனாகியிருப்பேன்" என்றார்.



இவர்களுடைய உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த கிரிஜா கதவைத் திறந்து வெளியே வந்தாள். "நீங்கள் போடும் இந்த வேஷத்தாலை எங்களுக்குப் பெருத்த அவமா-னமாக இருக்கு. தியானமும், குறியும் பூசையும்! இதென்ன வீடா? கோயிலா? யாரிந்தப் பூசாரி என்று கேட்டபோது எவ்வளவு அவமானமாக இருந்தது. மூன்று வேளையும் சாப்பாடு போடுறம். சாப்பிட்டிட்டு சும்மாயிருங்கோ" என்று பொரிந்து தள்ளிவிட்டு உள்ளுக்குள் போனாள்.

நடேசர் நிலைகுலைத்து போனார். தலையில் சம்மட்டியால் யாரோ தாக்கியது போல இருந்தது. அவருக்குப் பேச்சே வரவில்லை. தொண்டையை அடைத்து ஏதோ செய்வது போல் இருந்தது. துக்கம் நெஞ்சை அடைக்க, கை, கால் நடுங்க கையில் இதுவரை வைத்திருந்த குடத்தை நடுங்கியபடி நிலத்தில் வைத்துவிட்டு "அம்மா, தாயே என்ன சோதனையம்மா" என்று அவர் வாய் சொன்னபோது கண்களில் இருந்து நீர் வடிந்தது.

அவரால் நிற்கமுடியவில்லை . அருகில் இருந்த வாங்கில் அமர்ந்தார்.

சந்திரனும், கிரிஜாவும் ஒன்றும் பேசாது உள்ளே போய்விட்டனர்.

வாங்கில் செயலற்று இருந்த நடேசருக்கு மனைவியின் நினைவு வந்தது. "மூன்று வேளையும் ருசியாய் சமைச்சுப் போட்ட நீ போய்விட்டாய் பாவி - தனிமரம் தள்ளாடி வாடித்தவிக்குதே" என நெஞ்சுருகினார். தகப்பனாகவும், தாயாகவும் மகனை வளர்த்த நாட்களை எண்ணிப் பார்த்தார். அவர் நெஞ்சு வெடித்து விடும்போல் இருந்தது.

தனது அறைக்குப் போய் தனது வேட்டியையும், சால்வையையும் ஒரு பையில் வைத்துக் கொண்டு வெளியே வந்தார். நேரே அம்மனுக்கு முன்போய் மௌனமாக நின்றார். பின்பு நேரே குளக்கரை அம்மன் கோவிலுக்குப் போனார்.

கோவில் பூந்தோட்டத்தில் பூப் பறித்துக் கொண்டிருந்த குருக்கள் நடேசரைப் பார்த்ததும் "என்ன இந்தப் பக்கம்" என்று கேட்டார். " இனி இது தான் வீடு" என்று சொன்ன வண்ணம் மடத்தை நோக்கிப் போனார். குருக்களுக்குப் புரிந்துவிட்டது. நடேசருக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தார்.

கிரிஜா விடிய எழுந்ததும் கிணற்றடியைப் பார்த்தாள். நடேசரைக் காணவில்லை. அறையைப் பார்த்தாள். அங்கும் இல்லை. சந்திரனிடம் போய்ச் சொன்னாள்.

"கோபம் ஆற திரும்பி வந்திடுவார்" என்று சொல்லிவிட்டுத் தன் வேலைகளைச் செய்தான் சந்திரன். அன்று மாலை அவன் வந்த போது "உங்கப்பா இன்னும் வரவில்லை என்றாள். கிரிஜா.

"கோயில் மடத்தடியில் இருக்கிறாராம். வந்திடுவார்" என்றான் சர்வ சாதாரணமாக.

அன்று இரவு ஒரு மணியளவில் திடீரென விழித்துக்கொண்ட சந்திரன் பக்கத்துக் கட்டிலில் படுத்திருந்த கிரிஜா நித்திரை கொள்ளாது விழித்தவண்ணம், முகட்டைப் பார்த்தபடி இருப்பதைக் கண்டான்.

சந்திரன் தன்னைப் பார்ப்பதைக் கண்டதும் "கனாக் கண்டேனப்பா! அதுக்குப் பிறகு நித்திரையே வரவில்லை" என்றாள்.

"பித்தம் தலைக்கேறிட்டுது. நல்லா முழுகு கனவு வராது. இந்த ஷம்பு வேண்டாம். சீயாக்காய் வைத்து முழுகு" என்று சொன்னவன் திரும்பிப்படுத்தான்.

அடுத்த நாள் இரவும் அதேநேரம் கிரிஜா கனவு கண்டு, உடலும் உள்ளமும் பதற கண-வனை எழுப்பினாள். " என்ன இண்டைக்கும் கனவா" என்று கேட்டான்.

கிரிஜா ஒன்றும் பேசவில்லை. அவள் முகத்தில் நிலவிய பீதி சந்திரனைக் கலங்க வைத்தது.

"என்னப்பா குழந்தை போலக் கனாக்கண்டு பயப்படுகிறீர்" என்று கேட்டான். "வெள்ளைச் சீலை உடுத்த கிழவி குளிக்க மூன்றுகுடம் தண்ணி கேட்டுது" என்றாள்.

சந்திரன் சிரித்தான். " இதுக்கா பயந்து சாகிறாய். நான் ஏதோ பேய் பிசாசைக் கண்டாயாக்கும் எண்டு நினைச்சன் . ஒரு கிழவிக்கா பயப்படுகிறாய்" என்று சொன்னவனின் வாயைப் பொத்தினாள்.

சந்திரனுக்கு ஒன்றும் புரியவில்லை. வெள்ளைச் சீலை உடுத்து வந்தது அம்மன். உங்கப்பா காலை மூன்று குடம் நீராலை அபிஷேகம் செய்து பூசை செய்வாரல்லவா? இப்ப மூண்டு நாள் இல்லை. அது தான் கனவில வந்திருக்கிறா. பெரிய பிழை செய்திட்டம்" என்றாள் குரல் நடுங்க.

சந்திரனுக்கு இப்போது எல்லாம் புரிந்தது. தான் சின்னக் குழந்தையாக இருக்கும்போதே தகப்பன் அம்மனுக்குப் பூசை செய்து வந்தது நினைவில் வந்தது. இருபது வருடங்களுக்கு மேலாகத் தகப்பன் செய்த பூசையைத் தான் வலுக்கட்டாயமாக நிறுத்தியதை எண்ணிப் பார்த்தான்.

முதல் முறையாக மனைவிமேல் எரிச்சலும், ஆத்திரமும் வந்தது. " எல்லாம் உன்னாலை வந்தது. யாரோ ஒருத்தி வந்ததுக்காக அப்பாவின்ரை கோலத்தைப் பார்த்துத் துள்ளிக் குதித்தாய். மூன்றுவேளை சோறு போடுவதாகச் சொன்னாயே. பத்து வயது முதல் அவர் தாண்டி எனக்குச் சோறு சமைத்து, தீத்தி விட்டவர். தாயும் அவர் தான், தகப்பனும் அவர்தான். உன்ரை சொல்லைக் கேட்டு அந்த தெய்வத்தின் மனதை நோகப் பண்ணிப் போட்டடேனே" என்று சத்தம் போட்டான்.

"சத்தம் போடாதையுங்கோ. இரவு நேரம். அடுத்த வீட்டுக்குக் கேக்கும். நான் செய்தது பிழைதான். மன்னிச்சுக் கொள்ளுங்கோ. மாமாவை நாளைக்குக் கூட்டிக் கொண்டு வாருங்கோ" என்று அழுதபடி கெஞ்சினாள்.

"மாமா" என்ற சொல் கேட்க கோபத்தால் அவன் முகம் சிவந்து, குரல் நடுங்கியது." இவ்வளவு காலமும் உங்கப்பா , உங்கப்பா என்று வேற்று மனிதரைக் குறிப்பிடுவது போலச் சொன்னாய் இப்பத்தான் மாமா என்ற உறவு தெரிஞ்சுதோ, அவர் உறவையே அறுத்தெறிந்து போட்டாரடி" என்று பொரிந்து தள்ளினான்.

சந்திரனின் ஒவ்வொரு வார்த்தையும் அவளுக்கு நெஞ்சில் ஈட்டிபோல் குத்தியது, துக்கம் தாழாது "அம்மா தாயே, அகிலலோக நாயகியே என்ர பிழையைப் பொறுத்தருள் தாயே" என்று நெஞ்சம் நெருக்குருக அம்மனை வேண்டிகுழந்தை போல அழுதாள்.

சந்திரன் அறையைத் திறந்து வெளியே வந்தான் , இந்த இரவுநேரத்தில் எங்கே போகிறார் என்று எண்ணியவாறு அவனைப் பார்த்தாள். பேசப் பயமாக இருந்தது . சந்திரன் நேரே தகப்பன் படுத்திருக்கும் அறைக்கு வந்தான். வெறுமையான கட்டிலைப் பார்த்ததும் துக்கம் நெஞ்சை அடைத்தது. மடத்தில் வெறும் நிலத்தில் படுக்கும்படி செய்து விட்டேன். என்று எண்ணியபோது அவனுக்கு நெஞ்சே வெடித்துவிடும் போல் இருந்தது. வாய் விட்டு கதறி அழுதால் பாரம் குறையும் போல் இருந்தது.

அந்தக் கட்டிலில் அமர்ந்து சலிப்புத் தீர விக்கி விக்கி அழுதான்.

விடிந்ததும் தகப்பனைப் பார்க்கப் புறப்பட்டான் . கேற்றைத் திறக்கும் போது பின்னுக்கு யாரோ நிற்பது போன்ற உணர்வு தோன்றத் திரும்பிப் பார்த்தான். கிரிஜா மௌனமாக நின்றாள். சேலைகட்டி, தோஞ்ச ஈரத்தலையுடன், நெற்றியில் விபூதிகுங்குமத்துடன் காட்சியளித்தாள்.

இதற்கு முன் அவளை இந்தக் கோலத்தில் பார்த்ததாக அவனுக்குத் தோன்றவில்லை.

ஒன்றும் பேசாது அம்மன் கோவிலுக்கு புறப்பட்டான் . கோயில் மடத்தடியில் நடேசர் இருப்பதை ஏற்கனவே அறிந்திருந்தான்.

சந்திரனைப் பின்தொடர்ந்து கிரிஜாவும் போனாள் . இருவரும் மௌனமாகச் சென்றார்கள்.

சந்திரன் அருகில் போய் "அப்பா" என்று அழைத்தான். "என்ன சந்திரா" என்று வழக்கமாகக் கேட்கிறவர். இன்று " அப்பனே" என்றார். "சொந்தமென்று வருவதெல்லாம் சொந்தமில்லை அப்பனே. துயர்கோடி வளர்ந்தோங்கும் காடு அப்பனே" என்றார்.

கிரிஜாவும் சந்திரனும் முழங்காலில் நிலத்தில் அமர்ந்து நடேசரின் கால்களைத் தொட்ட வண்ணம் சாமி என்று அழைத்தனர்.

சந்திரன் அருகில் வந்து "வீட்டுக் கிணற்றடியில் இருக்கும். அம்மனுக்குப் பூசைசெய்ய வேணும்" என்றான்.

"யாவர்க்குமாம் இறைவனுக்கொரு பச்சிலை அப்பனே, பூசையை நீயே செய். என்று சொல்லி விட்டு மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தார்.

- **வில்வம் பசுபதி**



செல்வராஜா

# தமிழ் உணர்ச்சிப் பிழம்புகள்

"தமிழருக்கு ஒரு நாடு வேண்டும்" இது தமிழ் தலைவர்கள் கையில் எடுத்துக்கொண்ட ஆயுதம் "தமிழருக்கு எதுவும் கொடுத்துவிடக்கூடாது" இது சிங்களவர்கள் எடுத்துக்கொண்ட நிகழ்ச்சி நிரல்.

இலங்கையின் சுதந்திரத்திற்கு பின்பான அரசியல் என்பது இந்தக் கயிறு இளுவை மட்டும் தான் இதை வைத்து கடந்த அறுபது வருடங்களை இரு சாராரும் கழித்துவிட்டனர்.

சிங்களவரின் முதலாவது இராசதானி என வெளிப்படையாகக் குறிப்பிடப்படும் அளவிற்கு ரஜரட்டை நாகரிகம் என்று வர்ணிக்கப்படும். அனுராதபுரத்தை மையமாக வைத்து எழுச்சி அடைந்த நாகரிகத்தை கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் எழுச்சி பெற்ற சோழ சாம்ராஜ்யம் தனது சமஸ்தானங்களில் ஒன்றாக மாற்றியது. ஆனால் அவர்களின் தலைநகரமாக அநுராதபுரத்தை வைத்திருக்காது பொலநறுவையை தமது ஆளுகைக்கு உட்பட்ட சமஸ்தான தலைநகரமாக ஆக்கிக் கொண்டனர்.

கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் இருந்த மகா விகாரைப் பௌத்த துறவி மகாநாமரால் எழுதப்பட்ட மகாவம்சம் என்ற நூலில் தென்னிந்தியர்களின் படையெடுப்புப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் சோழப் படையெடுப்புக் காரணமாக மேற்கொள்ளப்பட்ட சோழ படையெடுப்பு கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப் பகுதியில் எழுச்சி பெற்றிருந்த அநுராதபுர தலைநகரம், மகாவிகாரை, றுவான் வெலிசாய போன்ற அனைத்தும் பறிக்கப்பட்டதானது சிங்கள பௌத்தர்கள் மத்தியில் மகாவம்சம் என்ற நூல் ஒரு சக்தி மிக்க சிந்தனைத் திரட்டாக மாறியது.

கி.பி. 15 நூற்றாண்டில் ஐரோப்பியர் நாடுகாண் பயணங்களையும், நாடுகளைக் கைப்பற்றி நிர்வாகம் நடத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தார்கள். ஆனால், இது எல்லாவற்றையும் கி.பி 10 ஆம் நூற்றாண்டிலேயே சோழர்கள் ஆசியப் பிராந்தியம் எங்கும் நிறைவேற்றி இருந்தார்கள்.

இதன்மூலம் தமிழர்கள் எவ்வளவு தூரம் முன்னோடிகளாக இப்பிராந்தியத்தில் இருந்தார்கள் என்பது புலனாகிறது. இதனால், இலங்கையில் சோழப் படையெடுப்பின் போது அவர்களது முழுமுதற் கடவுளாக வணங்கப்பட்ட சிவனை சிங்களவருக்குப் பிடிப்பதில்லை. ஆனால் சிவபெருமானின் புதல்வர்களான முருகனையும், பிள்ளையாரையும் தமது வணக்கத்துக்குரிய கடவுளர்களாக கொண்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட தகவல் சிங்கள அரசியலைப் புரிந்து கொள்வதற்கு அவசியம் என்பதால் மேலே குறிப்பிட்டுள்ளேன். எனவே வரலாற்று ரீதியாக தமிழர் தம்மை அழிக்கக்கூடியவர்கள் என்ற பயம் சிங்களவர்களுக்கு தொடர்ச்சியாக இருந்து வருகின்றது.

தமிழரின் ஆயுதப் போராட்டத்தின் போது அநுராதபுரம் மகாபோதி, தலதாமாளிகை போன்ற பௌத்த தலங்கள் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளான போது மகாவம்சத்தில் எப்போதோ குறிப்பிட்ட விடயங்கள் சிங்கள மக்களின் எண்ணத்துக்கு உரம் ஊட்டுபவையாக இருந்தது.

இதன் மூலம் மீண்டும் மகாவம்சம் என்று நூல் ஒரு தீர்க்க தரிசனமான புனித நூல் என்ற முக்கியத்துவத்தை சிங்களவர்கள் மத்தியில் பெற்றுவிட்டது. மகாவம்சத்தின் கதாநாயகனான துட்டகைமுனு இரவில் தூங்கும்போது சுருண்டுகொண்டு தூங்குவதாக அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கான காரணம் என்னவெனில், வடக்கே தமிழரின் அச்சுறுத்தலும் தெற்கே கடலின் அச்சுறுத்தலும் இருப்பதாக துட்டகைமுனு அதற்கு காரணம் கூறியதாக அந்நூல் குறிப்பிடுகின்றது.

சிங்கள அரசியல்வாதிகளின் அரசியல் என்பது -

◆ எந்த விடயமாக இருந்தாலும், எந்தத் தலைவராக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும், (ஜே.வி.பி போன்ற கொமினிஸ சிந்தனையைக் கொண்டவர்களும் கூட) தமது நடவடிக்கைகளின் விபரத்தை மகாநாயக்கர்களின் பாதத்தில் சமர்ப்பித்து ஆசி பெறவேண்டும்.

◆ எப்போதும் தமிழருக்கு இந்த நாட்டில் இடம் இல்லை எனக்குறிப்படல் வேண்டும்.

◆ சிங்களமொழிக்கு முதன்மை கொடுக்கவேண்டும்.

◆ இந்த நாடு பௌத்த சிங்கள நாடு என எப்போதும் இருக்கவேண்டும்.

◆ சிறுபான்மை இனங்கள் சிங்களத் தலைவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்வது.

◆ பௌத்த மதத்திற்குப் பாதகமாக எதுவும் நடந்துவிடக்கூடாது.

இந்த அடிப்படைகளைக் கொண்டே சிங்களத்தலைவர்களும், ஆட்சியை நடத்தி வருகின்றனர்.

இதில் சிங்கள மக்களால் அதிகம் விரும்பப்படுகின்ற தலைவர்களைப் பற்றிக் கவனிப்போம்.

## S.W.R.D பண்டாரநாயக்கா

சொலமன் றிச்சாட் டயஸ் பண்டாரநாயக்கா எனப்படும் இவர் பிறப்பால் ஒரு கிறிஸ்தவன். நான் மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரலுக்கு கிறிஸ்தவ மதமும், ஆங்கிலக் கல்வியும், சட்டத்தரணித் தொழிலும் உதவப்போவதில்லை என்பதை உணர்ந்து கொண்ட அவர், தன்னை ஒரு பௌத்தனாக்கி 'சிங்களம் மட்டுமே தேசியமொழி" என ஒரு மொழிக் கொள்கையை அறிமுகப்படுத்தியதன் மூலம் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தமிழ்த்தலைவர்களுக்கு இருந்த முக்கியத்துவம் குறைக்கப்பட்டது. இதன் பின்னணியில் பண்டாரநாயக்க சிங்கள மக்களின் போற்றுதற்குரிய தலைவரானார். (தற்போதய ஜனாபதி மைதிரிபால சிறிசேன பண்டாரநாயக்கா அவர்களைப் பின்பற்றி வருவதாக சிங்கள மக்களுக்கு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.)

## J.R.ஜெயவர்த்தன

யூனியஸ் றிச்சாட் ஜெயவர்த்தன இவரும் பிறப்பில் ஒரு கிறிஸ்தவர். ஆங்கிலப் பின்புலத்தைக் கொண்ட சட்டத்தரணி. இவரும் அரசியலுக்காக பௌத்தமதத்திற்கு மாறியதுடன், 1978ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட புதிய அரசியல் அமைப்பில் சிங்கள பௌத்த நிலைப்பேற்றிற்கு ஏற்றவாறு உலகத்தில் அதிகாரம் கூடிய அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளின் அரசியல் அமைப்புக்களை மாதிரியாக வைத்து புதிய அரசியல் அமைப்பொன்றை உருவாக்கியதற்காக சிங்கள மக்களால் போற்றப்படுபவர்.

இவர் தமிழ்மக்களின் எழுச்சியை மட்டுப்படுத்த பல்கலைக்கழக தரப்படுத்தல், 1977 ஆம் ஆண்டு கலவரத்தின் மூலம் அநுராதபுரம், மதவாச்சி, நிக்கவரெட்டிய மற்றும் இலங்கையின் ஏனைய பாகங்களில் காலூன்றி இருந்த தமிழ் முதலாளிமார்களின் பொருளாதாரத்தை அழித்து சிங்கள முதலாளித்துவத்தை வளர்த்துவிட்டவர்.

1983 இனக்கலவரத்தின் மூலம் கொழும்பை மையமாக வைத்திருந்த தமிழரின் கல்விசார், பொருளாதாரம் சார் விடயங்களைக் கட்டுப்படுத்தி சிங்கள மக்களுக்கு திறந்த பொருளாதாரத்தின் மூலம் பல்வேறு வரப்பிரசாதங்களை வழங்கினார்.

வடகிழக்கு மாகாணம் தமிழரின் பூர்வீக நிலம் என்பதை மறுதலிப்பதற்காக வெலி ஓயா என்ற பகுதியை வடமத்திய மாகாணமான அனுராதபுரத்துடன் இணைத்ததன் மூலம் வடகிழக்கு நிலத்தை சட்டபூர்வமாக வடக்கு, கிழக்கு எனப் பிரித்து இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இவ்விரு மாகாணங்களும் அடுத்துள்ள மாகாணங்கள் அல்ல என்பதை நிரூபித்ததன் மூலம் தமிழர் நிலமான மண லாறு என்ற தமிழர் பகுதியை கபளீகரம் செய்து சிங்கள மக்களுக்கு வழங்கியவர்.

## ரணசிங்க பிரேமதாச

இலங்கை அரசியலில் பிறப்பிலேயே சிங்கள பௌத்தனாக காலடி எடுத்து வைத்தவர் இவர்.

அடிமட்டச் சிங்கள மக்களின் வாழ்வை உயர்த்திய பெருமைக்குரிய சிங்களத் தலைவராக சிங்கள மக்களால் நினைவுகூரப்படுபவர். "2000 ஆம் ஆண்டு அனைவருக்கும் புகலிடம்" என்ற வீடமைப்புத் திட்டத்தினாலும் 'கம் உதாவ' என்ற கிராம எழுச்சித் திட்டம், "ஜனசக்தி" '(மக்கள் சக்தி) போன்ற திட்டங்களின் மூலம் ஏழைச் சிங்கள மக்களின் வாழ்வை உயர்த்தியவர்.

## சந்திரிகா குமாரணதுங்க

இவர் தந்தையான பண்டாரநாயக்காவின் வழியில் அரசியலில் இறங்கியிருந்த போதிலும், வடக்கில் விடுதலைப்புலிகளின் இராணுவத் தாக்குதல்கள் உச்ச நிலையில் இருந்தமையால் குறிப்பாக எதையும் சாதிக்காது விட்டாலும் நாட்டின் தலைவி என்ற ரீதியில் தமிழருக்கு எதையும் விட்டுக்கொடுக்காது பார்த்துக் கொண்டார்.

அதன்பால் புலிகளின் தற்கொலைத் தாக்குதலுக்கும் உட்பட்டவர் என்ற வகையில் சிங்கள் மக்கள் மத்தியில் மதிப்புள்ளவர்.

## மகிந்த ராஜபக்ஸ

முதற் தடவையாக 'பாதரட்ட" என்ற கீழ் நாட்டுச் சிங்களவர் ஒருவர் இலங்கையின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றிய சம்பவம் இது.

தமிழரின் ஆயுதப் போராட்டம் மிக உச்சமாக இருந்த வேளை ஒரு மீசை வைத்த சிங்களத் தலைவனாக சிங்கள மக்கள் மத்தியில் இருந்து எழுந்து விடுதலைப் புலிகளின் முப்பது ஆண்டுகால ஆயுதப் போராட்டத்திற்கு முகம் கொடுத்து, 2009 மே மாதத்தில் விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டு சிங்கள மக்களின் நவீன துட்டகைமுனுவாக தன்னை மாற்றிக்கொண்டவர்.

இவர் தமிழ் மக்களுக்கு உரிமை கொடுக்காமல் பார்த்துக் கொண்டவர் என்ற வகையில் சிங்கள மக்களால் மதிக்கப்பட்டு வருபவர்.

## ரணில் விக்கிரமசிங்க

இவர் ஜே.ஆர்.ஜெயவர்த்னாவின் மருமகன். அரசியல் சதுரங்கத்தில் மிகவும் கீர்த்திபெற்றவர். இவரது தனிப்பட்ட திறமை காரணமாகத்தான் 32 தடவைகள் தேர்தலில் தோல்வியுற்ற பின்பும், சிங்கள மக்கள் மத்தியில் நின்று பிடிக்கிறார். ( 18 ம் பக்கம் பார்க்க)

# பேராளுமை மிக்க வில்லிசைக் கலைஞர்

நா.மதியழகன்

பருத்தித்துறையிலே மாதனை எனும் கிராமத்தில் கலை அறிவும், ஆற்றல்களும் மிக்க நாகலிங்கம் இரா சம்மா தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாக 30.03.1936ல் அவதரித்தார். இவருடைய இயற்பெயர் கணபதிப்பிள்ளை. இவர் தனது ஆரம்பக் கல்வியை மாதனை மெதடிஸ் மிஷன் பாடசாலையில் கற்றுக்கொண்டார். அதன்பின்னர் ஆறாம் வகுப்பில் இருந்து எட்டாம் வகுப்பு வரை புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி பயின்றார். தனது எட்டுவயதிலே குழந்தைக் காத்தானாக நடித்தார். அத்தோடு குறவன் குறத்தி நாடகத்திலும் நடித்துக் கொண்டார். ஒன்பதாம் வகுப்பில் இருந்து ஏழாலை அர சினர் உயர்தரப் பாடசாலையில் படித்து சிரேஷ்ட கல்வித் தராதர பரீட்சையில் தோற்றினார்.

இத்தகைய கல்விக் காலத்தில் கீதாஞ்சலி நல்லையா அவர்களால் தயாரிக்கப்பட்ட காவடி நடனத்தில் பங்குகொண்டு, கொழும்பில் விக்டோறியா பூங்காவில் நடைபெற்ற போட்டியில் பரிசையும் பெற்றுக்கொண்டார். அதன் பின்னர் 1949இல் அதே பாடசாலை மாணவர்களுடன் கொழும்பு றோயல் கல்லூரி மண்டபத்தில் நடாத்தப்பட்ட கப்பல் பாட்டு கலை நிகழ்வில் அகில இலங்கை ரீதியில் பரிசிலையும் பாராட்டையும் பெற்றுக்கொண்டார்.

கீதாஞ்சலி ஏ.மு. நல்லையா நாட்டியக் கலைஞரிடம் நடனம் சார்ந்த நுட்பங்களைக் கற்றறிந்து தன்னை வளர்த்துக் கொண்டார். அதன்பின்னர் நடனம், காவடி, கரகம், போன்ற கலை நிகழ்வை தனது சகோதரனான க. நா. நவரத்தினத்துடன் இணைந்து செயற்பட்டு பல பரிசில்களையும் பெற்றுக் கொண்டார். 1957ம் ஆண்டில் ஆசிரியராக நியமனம் பெற்று இரத்மலானை கொத்தலாவல புரம் தமிழ் பாடசாலையில் தமிழ், ஆங்கிலப் பாட  ஆசிரியராக கடமையாற்றினார். அதே நேரம் கொழும்பில் தங்கியிருந்த இசை நாடக கலைஞர்களுடன் தொடர்புபட்டு, கலைவாணரிடம் நாடகம், வில்லிசை, சார்ந்த நுட்பங்களை கற்றுக் கொண்டார் .

நாடகத்துறையில் எஸ்.ரி. அரசுடன் இணைந்து கலைவாணர் நாடக மன்றத்தின் ஸ்தாபகரில் ஒருவராக செயற்பட்டார். மேலும் வண்ணை கலைவாணர் மன்றத்தால் நிகழ்த்தப்பட்ட நாடகங்களான இன்பக்கனவு, திப்புசுல்த்தான், வீரமைந்தன், சாம்ராஜ் அசோகன், சரியா தப்பா, போன்ற நாடகங்களில் பங்கெடுத்தார். 1962இல் அரிச்சந்திர மயானகாண்டத்தில் நான்கு வேறுபட்ட குணஇயல்புகள் கொண்ட பாத்திரங்களாக நடித்தார். நாரதராகவும், நட்சத்திரராகவும், அயலாத்துப் பிள்ளையில் ஒருவராகவும், சுடலையில் மேளம் அடிப்பவராகவும் நடித்தார். 1970இல் லாலா சோப் நடாத்திய நாடகப் போட்டியில் சத்தியகீர்த்தியாகவும் அதனைவிட சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் யமன் பாத்திரமாகவும், காத்தவராயன் கூத்தில் முற்காத்தான், கிருஷ்ணர்,  ஆரியமாலாவாக, வண்ணார நல்லியாக, மந்தரையாக எனப் பல பாத்திரங்களை ஏற்று நடித்து நாடக உலகில் புகழை ஈட்டிக் கொண்டவர்.

பாடும் திறன், பாத்திரப் பொருத்தம், நடிக்கும் முறை தன்னை பயிற்றுவித்துக் கொள்ளும் தரம், கற்பனாசக்தி, எனப் பன்முகச் சிறப்புக் கொண்டவர்.

வில்லுப்பாட்டு என்ற இசையுடன் கதை கூறும் முறையை தமிழுக்கு அறிமுகப்படுத்திய இவர். பல்வேறுபட்ட நுணுக்கங்களை அதில் புகுத்தினார். இது அவரது தனிப்பட்ட திறமைக்குச் சான்றாகும் . சப்பாணிகொட்டி இருந்தவாறு பரதநாட்டியம், அபிநயம், அரசன், ஆண்டி பாத்திரங்கள் என இருந்த இடத்தி லேயே நடாத்திக்காட்டும் வல்லமை அவருக்கு இருந்தது. சிறந்த குரல் வளமும் திடகாத்திரமான உடற்கட்டும் பெண்பாத்திரங்களைக் கூட அதன் தன்மை பிசகாது நடித்துக்காட்ட வல்லவர் அவர். தனது சால்வையைப் பல்வேறு கதாபாத்திரங்களை மாற்றும் போதேல்லாம் தாவணியாகவும், தலைப்பாகையாகவும் மாற்றி நடித்துக்காட்டுவார்.

இவரது வில்லிசைப் பாடல்களில் வள்ளி திருமணம், சத்தியவான் சாவித்திரி ஆகிய இரு கதைகளும் மிகவும் பிரசித்தமானவை. இக் கதையில் சாவித்திரியாகவும்



இயமனாகவும் இருந்த இருப்பில் நடிக்கும் நடிப்பு சின்னமணியால் மட்டுமே செய்யக்கூடியது. சாவித்திரி தனது கணவனை விடுவிக்குமாறு கதறி அழும் கட்டத்தில் சின்னமணி உண்மையாகவே கண்ணீர் விட்டு அழுவார். அது பார்த்திருப்போரை மெய்சிலிர்க்க வைக்கும்.

வள்ளி திருமணக் கதையிலே அரசனாக வேடமிட்டு குதிரையில் செல்லும் போது குழந்தை ஒன்று அழும் சத்தம் கேட்கும் போது, குதிரையை நிறுத்தி "யாரங்கே குழந்தை ஒன்று அழுகின்றது என்னவென்று பாருங்கள்" என்று கூற காவலன் எட்டிப்பார்த்துவிட்டு வள்ளிக்கிழங்கு பிடுங்கிய குழியில் குழந்தை ஒன்று கிடக்கிறது என்றான். ஆண்பிள்ளையா பெண்பிள்ளையா என்று பார்த்துவா? என்றார். அதற்கு அந்தக் காவலன் " அரசே அது குப்புறக்கிடக்கிறது" என்றான். இவ்வாறு மிகவும் தத்ரூபமான நகைச்சுவை அவரது வில்லிசையில் இருக்கும்.

வில்லிசைக்குரிய கருப்பொருள், கதைப்பொருள் பல்வேறுபட்டனவாக அமையும். தனிக்கதைகளாக, தொடர்கதைகளாக, கிளைக்கதைகளாக எனக் கூறலாம். அவற்றுள்ளே மகாபாரதம், இராமாயணம், இதிகாசம், புராணம், வரலாற்றுக் கதைகள் விசேட நாட்கள், சரித்திரக்கதைகள், கிறிஸ்தவக் கதைகள், திருக்குறள், நாலடியார் நீதி நூல், பெரியார்கள் எனப் பலநூற்றுக் கணக்கான கதைகளை ஆற்றுகைப்படுத்திக்கொண்டார்.

தானே வில்லிசைக்குரிய கட்டமைப்பை அமைத்துக் கொள்வதனால், கதைசொல்லும் முறை, கதைவிளக்கம், நகைச்சுவை, பாடல் ஏற்ற இறக்கங்கள், சுருதி, லயம், தாளம், பக்கவாத்தியம் என்பவற்றை எல்லாம் கவனத்திற் கொண்டு ஆற்றுகைக்குரிய நேரகாலம் அறிந்து, பார்வையாளர் தரம் அறிந்து, இரசிகர்களை எப்படித் தன்பக்கம் கொண்டு வரவேண்டும் என்ற புத்திசாதுரியத்துடன் ஆரம்பத்தில் இருந்து வில்லிசை முடியும் வரை அனைத்துப் பார்வையாளர்களையும் ஒருங்கிணைத்து வைத்திருக்கும் திறமை கொண்டவர். யாராவது எழுந்தால் அவர்களை எப்படியோ சுவாரஸ்யமாக இருத்தும் கெட்டித்தனம் கொண்டவர்.


வில்லிசைக் கலையை சீர்குலைக்காது பண்பாட்டுடன் எடுத்துச் சென்ற பெருமை க.நா. கணபதிப்பிள்ளையைச் சார்ந்தது. தனக்கென தனித்துவமான உடையுடன் 'ஆள்பாதி ஆடைபாதி' என்பார்கள் அதுபோல பண்பாடான உடை - இரசிகர்களைக் கவர வேண்டும் என்பதற்காக தேவையற்ற பகிடிகள் இன்றி, இரண்டுபட்ட அர்த்தமில்லாது, கேலித்தனமில்லாது, பார்வையாளர்களுக்கு சரியான செய்தியைச் சொல்லி நேர்த்தியான முறையில் வில்லிசை நிகழ்த்துவார். கதைக்கு ஏற்ப இரச பாவங்களைத் தோற்றுவித்து தேவையான இடத்தில் பாத்திரங்களாகவும் மாறி வில்லிசையை நிகழ்த்தி வில்லிசைக்கு என இலக்கணம் வகுத்துக் கொண்டார்.

இலங்கையில் மட்டு மல்லாது பல நாடுகளுக்கும் சென்று புலம்பெயர் தமிழர்களை சிரிக்க வைத்தது மட்டுமல்லாது உலகத்தையும் வியக்கவைத்தார். இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா, சுவிஸ்லாந்து எனப் பலநாடுக-ளிலும் வில்லிசைக் கலையை விஸ்தரித்தார். அதனூ டாகப் பல பட்டங்களையும் பெற்றுக் கொண்டார். வில்லிசைவேந்தன், வில்லிசைப்புலவர், வில்லிசைப் பேரொளி, பல்கலை வேந்தன், வில்லிசைச் சக்கரவர்த்தி, வில்லிசை திலகம், முத்தமிழ் மாமணி, கலாவினோதன், முத்தமிழ் வித்தகன், நவரசக்கலைஞன், ஜனரஞ்சக நாயகன் எனப் பல பட்டங்கள் இவருக்குரியவை.

கலைக்காக வாழ்ந்தார்கள், கலையை வளர்த்தார்கள், கலையைப் புனிதப்படுத்தினார்கள். எனப் பலகலைஞர்கள் உண்டு. இத்தகைய கலைஞர்களுள் சிலர் தங்கள் வாழ்வை ஏழ்மையிலும், மதுபோதையிலும், ஆணவத்திலும் அழித்தவர்களும் உண்டு. ஆனால் க.நா. கணபதிப்பிள்ளை சின்னமணியவர்கள் தனக்கென உலகத்தில் வில்லிசைக்கோர் இடத்தைப் பிடித்தது மட்டுமன்றி, தன்வாழ்வில் சிறந்த ஒரு பெருங்கலைஞன் என வாழ்ந்தும் காட்டியுள்ளார்.

சின்னமணி என்பது அவரது புனைபெயராக இருப்பினும் தமிழ் உலகெங்கும் ஓங்கிஒலித்த பெரிய மணி. இவர் என்றும் காலத்தால் வாழும் கலைஞர்.

# ஆச்சரியங்கள் கொண்ட அரசியலமைப்புத் திரித்துவம்



(முன்னைய தொடர்ச்சி....)

பின்னர் அவர்களுள் ஒருவர் 1989 முற்பகுதியில் தனது ஆளுநர் பதவியிலிருந்து விலகிக்கொண்டு ஜனாதிபதி பிரேமதாசாவின் அமைச்சரவையில் பிரதம அமைச்சராகப் பதவியேற்றுக்கொண்ட சூழ்நிலையானது. மத்திய அரசாங்கத்துடன் ஆளுநர்கள் கொண்டிருக்கவேண்டுமெனத் திட்டமிடப்பட்டிருந்த நெருக்கமான தொடர்புகளைக் கோடிட்டுக் காட்டுகிறது.

1988 யூன் மாதத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு அதீத விசுவாசத்துடனும், அதன் பிரதம நீதியரசர் என்ற அங்கீகாரத்துடன் கடந்த பல வருடங்களாகப் பணியாற்றிய தமிழர் ஒருவர் பெருபான்மை கொண்ட ஒரு மாகாணமான மேல் மாகாணத்திற்கான ஆளுநராக ஜனாதிபதியால் தெரிவு செய்யப்பட்டார். இது தமிழ் மாகாணமொன்றிற்குச் சிங்கள ஆளுநர் ஒருவரை நியமிக்க வழிசமைப்பதற்கென ஏனைய பிறவற்றுள் முன்னோக்கத்தக்க விதத்தில் திட்டமிடப்பட்ட ஒரு நியமனமாகும். அக்காலத்தில் ஆளுநராகப் பணியாற்றத் தகுதியுடையவர்களெனக் கருதப்படக்கூடியதாக கௌரவ-மும், கீர்த்தியும் கொண்ட சிங்களக் கனவான்கள் சிலரை அநேகமாக எமது மனக்கண்களால் காணக்கூடியதாக இருந்தது. வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஆளுநராக சிங்களவரான மேஜர் ஜெனரல் நளின் செனிவிரட்ன நியமிக்கப்பட்டதன் மூலம் மனத்தளவில் தரிசனமாயிருந்த ஒரு விடயம் பின்னாளில் நிதர்சனமானது.

முன்நாட்களில் தமிழ்ப் போராளிகள் இயக்கத்திற்கெதிரான யுத்தத்தில் இலங்கை இராணுவத்தின் பிரதம தள-பதியாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் நளின் செனிவிரட்ன - போர் வெற்றிகொள்ளப்பட்ட இந்நாட்களில் தமிழ் மக்களை அவர்களது ஆளுநராக மீண்டும் ஆட்சி செய்யத் திரும்பியிருப்பது முற்றிலும் பொருத்தமுடையதே.

வடக்கு மாகாணம் கிழக்கு மாகாணத்துடன் இணைந்திருக்கின்றதா? இல்லையா? என்பதல்ல இங்குள்ள பிரச்சினை என்பதை நாம் உணர்ந்து கொள்வோம். வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒன்றாய் இணைந்திருத்தால் தமிழர்களுக்கென்று ஓர் ஆளுநர்களைக் கொண்டிருக்கும் சிறப்பினைத் தமிழர்கள் கொண்டிருப்பார்கள்.

நிச்சயமாக இலங்கை அரசாங்கமானது பின்னால் வரவிருக்கும் ஒரு நாளில் பாரிய துணிச்சல் கொண்டெழும் ஒரு தருணத்தில், தமிழ் மாகாணமொன்றிற்குத் தமிழர் ஒரு-வரை அவர் ஜனாதிபதிக்கு விரும்பியாங்கு விசுவாசமாகவும், உண்மையாகவும் நடந்து கொள்வாரெனத்தெரியும் பட்சத்தில் ஆளுநராக நியமிப்பதே பாதுகாப்பானது என்று கருதுவது கூட எப்போதும் சாத்தியமானதே.


எப்படியிருந்தாலும், ஒருசிங்கள ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு அவருக்கு விரும்பியாங்கு பதவி வகிக்கும் ஒரு தமிழ் ஆளுநரூடாகத் தமிழ் மக்கள் ஆளுகை செய்யப்படுவதைவிட மேலான ஒரு வழி இருக்க முடியாது.

இந்த அணுகுமுறையானது 1940 களில் 'குயிஸ்லிங்' என்ற பெயர் கொண்ட நோர்வே நாட்டவர் ஒருவரூடாக நோர்வேயை ஆளுகை செய்ய முனைந்து அச்சம்பவத்தினூடாக 'குயிஸ்லிங்' என்றால் 'தேசத்துரோகி' என்று பொருள்படும் விதத்தில் ஆங்கில மொழியின் அகராதிக்கே எப்போதும் நிலைத்திருக்கும்படியான பங்களிப்பொன்றைச் செய்த ஹிட்லருடன் போட்டியிடுவது போன்றதாகும். அதுபோல் வரவிருக்கும் மாதங்களில் தமிழ்மொழியின் செழுமைக்கு அதே போன்றதொரு பங்களிப்புச் செய்ய 'தமிழ் குயிஸ்லிங்' ஒருவர் முன் வருவாரா என்பது விரைவில் தெரிந்துவிடும்.

சரி அது அப்படியே கிடக்கட்டும்.

13 ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளை ஆழமாகப் பரிசோதனை செய்து பார்க்கும் எம் முயற்சிகளை அது எவ்வளவு சிரமமான பணியாக இருப்பினும் அதனை நோக்கித் தொடர்ந்து முன்நகர்வோம். மாகாண விடயங்கள் தொடர்பிலான நிறைவேற்று அதிகாரத்தின் தத்துவங்கள் ஆளுநரால் பிரயோகிக்கப்படுமென்று 13 ஆவது திருத்தச் சட்டம் பகர்வதை நாம் பார்த்தோம். ஆனால் அத்தோடு அது நின்றுவிடவில்லை. அத்தகைய நிறைவேற்றுத் தத்துவத்தை ஆளுநரானவர் 'ஒன்றில் நேரடியாகவோ அல்லது அமைச்சர்கள் சபையைச் சேர்ந்த அமைச்சர்கள் மூலமாகவோ அல்லது அவருக்குக் கீழமைந்த அலுவலர்கள் மூலமாகவோ' பிரயோகித்தல் வேண்டும் என்றும் அது கூறுகிறது.

நிறைவேற்றுத் தத்துவங்கள் ஆளுநரால் பிரயோகிக்கப்படும் - அமைச்சர்கள் சபையும் அதன் கீழமைந்த அலுவலர்களும் தமக் கூடாக ஆளுநரால் பிரயோகிக்கப்படும் நிறைவேற்றுத் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.




### 13ம் திருத்தச் சட்டமும் மாகாண-சபை அரசாங்க முறையும்

இலங்கையில் நீண்டகாலமாக நிலவி வருகின்ற இனப்பிரச்சினைக்குத் தீர்வாக பல்வேறு கால கட்டங்களிலும் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. இவற்றில் அரசியல் அமைப்பு ரீதியாகவும், அரசியல் அமைப்புக்கு புறம்பாகவும் மேற்கொள்ளப்பட்டன. அரசியல் அமைப்பு எனும் போது டொனமூர், சோல்பரி என்பவற்றில் சில ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.


1972, 1978 ஆம் ஆண்டுகளில் அரசியல் அமைப்பில் இனப் பிரச்சனையின் ஒரு பகுதியாகிய மொழி சம்பந்தமான விடயங்களில் சில ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. அரசியல் அமைப்புக்கு புறம்பாக பண்டா - செல்வா, டட்லி - செல்வா, மாவட்ட அபிவிருத்தி சபைகள் (1981 ) என்பன இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள். இவைகள் நடைமுறையில் ஒழுங்காக செயற்படாததினாலும், தமிழ் மக்களின் அபிலாஷைகள் போதியளவு பூர்த்தி செய்யப்படாததினாலும், வெற்றிகளை பெறக்கூடியதாக இருக்கவில்லை.

ஆனால் மறுபக்கத்தில் தமிழ் மக்கள் தமது விடுதலைக்காக தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து தொடர்ச்சியாக போராட்டங்களை நடாத்தினர். பல்வேறு இயக்கங்கள் உருவாகி தங்களுக்கிடையே மோதி இறுதி யில் விடுதலைப்புலிகள் வடக்கு கிழக்கு மாகாணத்தில் தனிமையாக அரச படைகளுக்கு எதிரான தாக்குதல்களை நடாத்தி வந்தனர். இதன் பேறாக 1987 மே 26 இல் வடமராட்சியில் ஒப்பரேசன் லிபரேசன் என்ற பெயருடன் இராணுவ நடவடிக்கை ஏற்பட்டது. இதன் பயனாக பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிப்புறவே இந்தியா இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வந்தது. இந்திய அரசின் வற்புறுத்தலின் பேரில் 1987 யூலை 29 ம் திகதி இலங்கை ஜனாதிபதி J.R. ஜெயவர்த்தனாவுக்கும் - இந்திய பிரதமர் ராஜிவ் காந்திக்கும் இடையில் கொழும்பில் வைத்து இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இவ் ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசியல் அமைப்புக்கு கொண்டுவரப்பட்ட 13ம் திருத்த சட்டத்தின் படி மாகாணசபை அரசாங்க முறை கொண்டு வரப்பட்டது. இம் மாகாண அரசாங்க முறை ஏனைய அரசாங்க முறையைப் போலவே சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகிய 3 பகுதிகளாகக் கொண்டதாக விளங்கியது. மாகாண சட்டத்துறைக்கு மாகாண சபையும், மாகாண நிர்வாகத் துறைக்கு ஆளுநரும் முதலமைச்சரை தலைவராகக் கொண்ட அமைச்சரைவையும் மாகாண நீதித்துறைக்கு பொறுப்பாக ஒவ்வொரு மாகாணங்களிலும் உருவாக்கப் படும் மேல் நீதி மன்றங்களும் காணப்பட்டன.

### மாகாணங்களின் சட்டத்துறை

மாகாண சட்டத்துறைக்கு ஒவ்வொரு மாக-



ணங் களிலும் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை ஒரு வருடத்திற்கு அவையிரண்டும் ஒன்றாக இணைந்து ஒரே மாகாண சபையாக இயங்க அனுமதி வழங்கப்பட்டது. ஒரே வருடத்திற்கு பின்னர் கிழக்கு மாகாண மக்கள் வடக்கு மாகாணத்துடன் இணைவதற்கு விரும்புகிறீர்களா? இல்லையா? என்பது தொடர்பாக கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறும் எனவும் கூறப்பட்டது.

மாகாண எல்லைகள் ஏற்கனவே காணப்பட்ட மாகாணங்களின் எல்லைகளாக இருக்கும் எனவும், திருகோணமலை துறைமுகத்தினதும் அதன் சுற்றுப் புறங்களினதும் நிர்வாகத்திற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் ஒரு அதிகார சபை உருவாக்கப்படும் எனவும் கூறப்பட்டது.

மாகாண சபைகளுக்கான அங்கத்துவத்தை பொறுத்த வரை ஒவ்வொரு மாகாணத்தினதும் சனத்தொகை பரப்பளவு என்பவற்றின் அடிப்படையில் மாகாண சபை களுக்கான அங்கத்தவர் எண்ணிக்கை வரையறுக்கப்படும். 5 வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறும் தேர்தல் மூலம் மாகாண சபை அங்கத்துவர் தெரிவு செய்யப்படுவர்.

**அதிகாரங்கள்:-**

மாகாண சபைகளின் பிரதான கடமை மாகாண அரசாங்கத்துக்குரிய சட்டங்களை இயற்றுவதாகும். இந்த வகையில் மாகாண சபைப் பட்டியலிலுள்ள விடயங்கள் தொடர்பாக சட்டங்களை இயற்றும் அதிகாரம் இச்சபைக்கு உண்டு. மாகாண சபைப் பட்டியலில் பொலிஸ், பொது ஒழுங்கு, உள்ளூராட்சி, தெருக்கள், பொதுச் சேவை, விவசாயம், கிராமிய அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், என்பவற்றினை உள்ளடக்கிய 37 விடயங்கள் காணப்படுகின்றன.

(தொடரும்...)



# 21 கிராண்ட் ஸ்லாம்கள் கடந்து...

ஜெயம் மாஸ்ரர்

**செரினா** வில்லியம்ஸ் 21 கிராண்ட் ஸ்லாம்கள் கடந்து.....

ரெனிஸ் உலகில் நிறையவே சாதனைகள் புரிந்தவர். இவரது வயதுடன் ஒப்பிடும் போது, இவரால் இந்த உயர் திறனை எப்படித் தக்கவைத்துக் கொள்ள முடிகிறது என்பதே ஆச்சரியம். இறுதியாகக் கடந்த மாதத்தில் விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் வென்றதுடன், இருபத்தோராவது கிராண்ட்ஸ்லாம்ஸ் வென்றவராகிறார். முன்னதாக கிராண்ட்ஸ்லாம்ஸ் நான்கையும் இரண்டு முறை வென்றிருந்தாலும், ஒரே பருவ காலத்தில் நான்கையும் வென்றவர் என்ற பெருமையைப் பெறுபவர் ஜேர்மனியின் ஸ்ரெபி கிராப் மட்டுமே. ஸ்ரெபி 1988 இல் இச் சாதனையை நிகழ்த்தியிருந்தார். தற்போது இம் மாத இறுதியில் செரினாவின் தாயகத்தில் நடைபெறவுள்ள யூ.எஸ் ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் ரெனிஸ் போட்டிகளில் வெற்றி பெறுவாராயின், அந்தச் சாதனையும் செரினாவிற்குச் சொந்தமாகிவிடும். நவீன யுகத்தில் தனது 34 வயதில் இவர் சாதனை புரிந்த ஒருவராகவும், இவர் பதிவு செய்துகொள்வார்.

ஆனால், செரினா சாதனைகளுக்காக தான் ரெனிஸ் விளையாடவில்லை என்றே கூறுகிறார். இருந்தாலும் இவரது ரசிகர்களும், ரெனிஸ் விற்பன்னர்களும் இவரால் இருபத்தைந்து கிராண்ஸ்லாம்களை வெல்ல முடியும் என்று நம்புகிறார்கள். இதற்கொரு பிரதானமான காரணம் உண்டு. இவர் எவ்வளவு திறமையைக் காட்டியிருந்தாரோ அதே அளவிற்கு உபாதைகளையும் கொண்டிருந்தார். இந்த நிலையில் வேறொரு வீராங்கனையாக இருந்திருந்தால் ரெனிஸ் உலகில் இருந்து ஓய்வு பெற்றிருப்பார். ஆனால் செரினா எந்த நிலையிலும் ரெனிஸ் ஆட்டங்களை விட்டுக் கொடுப்பதாக இல்லை. சில வேளைகளில் தற்காலிகமாக சில கிராண்ட்ஸ்லாம் போட்டிகளைத் தவிர்த்துக் கொண்டதன் மூலம், தவிர்க்க முடியாமல் இவரது சாதனைக் காலம் சிறிது பின் நகர்ந்திருக்கும் என்று மட்டுமே கூறமுடியும். எனது முன்னாள் அதிசிறந்த வீராங்கனைகளின் சாதனைப் பட்டியல்களை எனது கனவாக நான் என்றும் எடுத்துக் கொண்டதில்லை. அதுதேவையற்ற ஒரு அழுத்தமாகவே இருந்திருக்கும். பொதுவாகவே அழுத்தம் நிறைந்த சுற்றுப்போட்டிகளில் வீணாக சுமைகளை ஏன் சுமக்க வேண்டும் என்பவர், தனது ஆறாவது விம்பிள்டன் தட்டத்தை (Rosewater Dish) இன்னொரு வெற்றி என்றே எடுத்துக்கொண்டுள்ளார். இருந்தாலும் இந்த இறுதிப் போட்டியில் முக்ரூசாவிடம் (ஸ்பானியா) தோல்வி கண்டிருந்தால் மிகவும் கவலைப்பட்டிருப்பேன் என்பதும் உண்மை என்கிறார். சாதனைக்காக விளையாடாவிட்டாலும், சாதனையுடன் கூடிய வெற்றியை அவர் கொண்டாடத் தவறவில்லை. விம்பிள்டன் இறுதிப்போட்டியில் வெற்றி பெற்றதும் மைதானத்தில் சிறு பிள்ளைகளைப் போல குட்டைப் பாவாடையின் இரு பக்கங்களையும் பிடித்துக் கொண்டு பள்ளிப் பிள்ளைகளைப் போல நடனமாடியது, இந்த வெற்றி அவரை எட்டு அல்லது ஒன்பது வயதுச் சிறுமியாக்கிவிட்டது என்தையும் சொல்லி வைத்தது. நான் தோல்விகளை வெறுப்பவள். அதனாலேயே தொடர்ந்தும் ரெனிஸ் களத்தில் நிற்கும் ஆவல் கொண்டவளாக இருந்தேன். என் வயதை ஒத்தவர்கள் - நிறையப்பேர் ஓய்வுபெற்றுக்கொண்டு சென்றுவிட்டார்கள். ஆனால் நான் மிகக் கடுமையாகப் போராடுபவள். யாரையும் விடவும் கடுமையான பயிற்சிகள் செய்பவள். போராடுபவள் இந்த விடயத்தில் அனைவரையும் விட முதன்மையாக இருக்க விரும்புபவள் என்று கூறியருக்கிறார். அதோடு என்னில் என்னைப் புதுப்பித்துக் கொள்பவதே என் கடின பணி. எந்த ஒரு விடயத்திலும் இருந்ததைவிடச் சிறிது முன்னேற்றம் காண வேண்டும். இருக்கும் நிலையில் இருந்து மேன்மையான ஒரு இடத்துக்குச் செல்லவேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருப்பேன் என்றும் கூறியுள்ளார்.

இவர் எதிர்கொண்டு தோற்கடித்த அநேக வீராங்கனைகள் இவரைவிட வயதில் குறைந்தவர்கள். செரினாவின் வயதும், அவர் எதிர்கொள்ளும் இடையறாத உபாதைகளும் தோற்றுப்போகும் அளவிற்கு செரினாவின் இலக்கும் நோக்கமும், அர்ப்பணிப்பும் மிக உயரத்திலேயே இருக்கின்றன. இதுவே இவரின் உன்னத நிலைக்கு காரணமாக இருக்கவேண்டும்.



இவற்றையெல்லாம் இன்னும் சில வருடங்கள் இவர் தக்கவைத்துக் கொண்டால், உலக ரெனிஸ் வீராங்கனைகளில் 'முதன்மையானவர்' இவர் என்பதை நீண்ட காலம் அசைக்க முடியாத இடத்தில் வைத்திருப்பார் என்று நம்பலாம். இந்த அமெரிக்க மங்கையின் பெரும் கதிர் வீச்சைத் தாங்க முடியாமல் தானோ என்னவோ, இவரை மலினப்படுத்தவும் சிலர் முனைந்திருந்தார்கள். விம்பிள்டன் வெற்றியின் பின்னர், இவரது உடல் அமைப்பு, தசைகளின் திரட்சி போன்றவற்றையும், அதற்கும் அப்பால் நிறத்தையும் வைத்து செரினாவை கிண்டல் செய்திருந்தார்கள். இதையெல்லாம் செரினா பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. ஆனால் அத்தகைய சின்னத்தனமான பேச்சுக்களுக்கெல்லாம் மிகக் கடுமையான பதிலடிகளை இன்னொரு உன்னத ரெனிஸ் வீராங்கனையான வெள்ளை இன அமெரிக்கப் பெண்மணியான மார்டீனா நவ்ரரிலோவா கடுமையாகக் கொடுத்திருந்தார். அது ஒரு ஆறுதலான விடயம் தான்.

செரினாவில்லியம்ஸின் சாதனைகளைக் கண்டு அவரைப் புகழ்வதும் செரினாவுக்குப் பெருமை தான். அதே போல அவரது சாதனைகளைக் கண்டு பொறாமைப்பட்டு அவரைப் பற்றி அவதூறு செய்ய முனைவதும் கூட அவர் எல்லோர் பார்வையிலும் இருக்கும் மிகப் பெரிய பிரபல்யம் என்பதற்கு ஒரு சான்று என்றும் கூறலாமே.

# பனையோலைத் தாலி கட்டிய வம்சம்?



சங்க காலத்திற்கு முன்னரே தாலிப் பனையின் ஓலை யினை சுருளாக நூலில் கட்டி ஆண்மகன் மணப்பெண்ணிற்கு அணியும் வழக்கம் இருந்தது. ஆதலால் தான் தாலி ஓலையை தந்த மரத்திற்கு தாலிப்பனை என்ற பெயரே இன்றளவும் வழங்கப்படுகிறது.

செல்வம்

தமிழ் மகளிர் தாலி அணிந்தமை பற்றிய வாத விவாதங்களும், பட்டிமன்ற சர்ச்சைகளும் சூடு பிடித்துள்ள இவ்வேளையிலும், ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக தாலி அணிதல் பற்றிய வரலாற்று உண்மைகள் நம் முன்னே கொட்டிக்கிடக்கின்றன. அவற்றை சீர்தூக்கிப் பார்த்து உண்மையை ஊருக்குச் சொல்வது நமது சந்ததிகள் முறையான கலாச்சார பாதையில் பயணிக்க ஏதுவாகும்.

தமிழர்கள் பின்பற்றிய பழக்கவழக்கங் களில் பெரும்பாலானவை இன்று, நேற்று வந்ததல்ல. பழங்காலத்திற்கு முன்னமே நம் முன்னோர்களின் பட்டறிவினால் உருவானதாகும். மனிதன் தோன்றி நாகரீக வளர்ச்சியடைந்த படிநிலை வளர்ச்சியின் போது நாடு காவலுக்காக எழுந்த போர்ச் சமூகத்தில் குழந்தைப்பேறு ஊக்குவிக்கப்பட்டது. இடைக்காலகட்டத்தில் பேரரசுகள் உதயமானதால் ஏற்பட்ட படை களின் பெருக்கம் இதற்கு தூபம் போட்டது.

இக்காலத்தில்தான் பிள்ளைப்பேறுக்கும் பெண்களின் மார்பகங்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதாக தமிழர்கள் கருதினர். பழந்தமிழகத்தில் பிள்ளைப் பேற்றினை ஊக்குவிக்கும் வகையில் ஆண்களே, தாம் திருமணம் செய்ய விருக்கின்ற பெண்ணுக்கு வரதட்சணையை கொடுத்தனர். இதனை “முலைவிலை” என்று அழைத்தனர். இதுவே பின்னர் வடமொழியில் ஸ்ரீதனம் என்றாகி சீதனம் என்று திரிந்தது.

ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணியில் முலைவிலை பற்றிய விரிவான குறிப்பை தருகிறார். இந்த அடிப்படையில்தான் வளமையின் குறியீடாக மார்பில் தாலி அணியப்படுவது சிறப்பானதாக கருதப்பட்டு அணியப்பெற்றது. மேலும் தத்துவார்த்த ரீதியிலான கற்பிதங்கள் தாலி அணிவது தொடர்பாக இதன் பின்னரே எழுந்தது. அங்கீகரிக்கப்பட்ட உறவின் அடையாளச் சின்னமாகவே தாலி இவ்வேளையில் கருதப்பட்டது.

சங்க காலத்திற்கு முன்னரே தாலிப் பனையின் ஓலையினை சுருளாக நூலில் கட்டி ஆண்மகன் மணப்பெண்ணிற்கு அணியும் வழக்கம் இருந்தது. ஆதலால் தான் தாலி ஓலையை தந்த மரத்திற்கு தாலிப்பனை என்ற பெயரே இன்றளவும் வழங்கப்படுகிறது. மாங்கலநாண் அணிகின்ற வழக்கத்தை பொறுத்தமட்டில் சங்க காலத்தில், கடலோடிகளான மீனவர்களின் மனைவிமார்கள் சுறாவின் எலும்பிலான தாலியினை அணிந்திருந்தனர்.

கடல் வணிகம் செய்து பொருளீட்டிய வணிகர்களான நானாதேசிகள் (நான்கு திசைகளுக்கும் சென்று வியாபாரம் செய்தவர்கள்) குலப் பெண்கள் பொன்தாலி சூட்டியிருந்தனர். தாலி என்பது காலந்தோறும் பல்வேறு கருத்துக்களில் வழங்கி வந்தமையத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. ஐம்படைத்தாலி, புலிப்பல்தாலி, நவரத்தினதாலி, மணித்தாலி, எயிற்றுத் தாலி, போன்றவை பருவ அடிப்படையில் அணியப்பட்டு வந்தமையை பரவலாக தமிழ் இலக்கியங்கள் பேசுகின்றன.

கண்ணகி திருமணத்தின் போது நிகழ்ந்த சடங்கினை இளங்கோவடிகள் குறிப்பிடுகையில், “அகலுள் மாங்கல அணி எழுந்தது” என்னும் சொற் றொடரில் குறிக்கிறார். மங்கல அணி என்பதைக் கொண்டு தாலி கட்டியதாக கூறிவிட முடியாது என்கின்றனர் திரா விட வரலாற்றாளர்கள். ஆனால் கோவலன் தன்னை விட்டுப் பிரிந்து மாதவியுடன் வாழ்ந்தபோது ‘மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்’ என்று கூறி கண்ணகி தாலி அணிந்ததை இளங்கோவடிகளே உறுதி செய்கிறார். சங்க நூலான புறநானூற்றில் “ஈகை யரிய இழை யணி மகளிர்’ என்னும் வரிகள் மற்ற அணி களைத் தானமாக தரலாம், அலங்காரம் தேவையற்ற காலங்களில் அவற்றை நீக்கி விடலாம். ஆனால் தாலி மட்டும் கழுத்தை விட்டு நீங்காது என்ற கருத்தினையே உணர்த்துவதாக கூறலாம்.

சிலப்பதிகாரத்திலேயே வருகின்ற மற்றொரு பாடல் தாலி அணியும் வழக்கம் காணப்பட்டதை சந்தேகத்திற்கிடமின்றி உறுதி செய்கிறது. கண்ணகி, கோவலனது திருமணத்திற்காக பொன் உருக்கிய செய்தியினை சிலப்பதிகாரம்,

‘தரவுருக்கப் பொன்னிடவே தக்க
கணிதரையழைத்து
வரைவிலிப்போ முகூர்த்தமிட மிக்க
பசும்பொன் – வாங்கிக் கரமதனாற்
தான்நிறுத்துக் கடுகவர் கையோழுத்தார்
கொடுத்த பசும்பொன் வாங்கிக்
குடைபிடித்தே
எடுத்தாங்கே பாளமாக இயல்பாகவே
நீட்டி
அடுத்தங்கே தக்குகொட்டி ஆவதான
பணிகள் செய்து’

எனக் கூறக் காணலாம்.

அதேபோல சங்க இலக்கியமான புறநானூற்றில் இடைக்குன்றூர் கிழார் – தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியனை, போர்க்களத்தில் எதிரி-களை கொல்லாது, அவர்தம் மனைவிமார்கள் நாணம் கொண்டு இறந்து போகுமாறு, அவரவர் ஊர்வரையிலும் துரத்திச் சென்று கொன்றான். இந்நிகழ்வினை கூறும் ‘மாண் இழை மகளிர் நாண’ என்னும் பாடலிலும் தாலி பற்றிய குறிப்பு வருகிறது.

சங்கப்புலவர் நக்கீரர் பாடிய நெடுநல் வாடையில் தலையாலங்கானத்து செரு வென்ற நெடுஞ்செழியனை போரின் பொருட்டு பிரிந்த அவனது மனைவி கோப் பெரும்தேவி, நெடுஞ்செழியனை பிரிந்த கார ணத்தால், அணிகலன்கள் எதுவும் அணியாமல், அலங்காரம் செய்யாமல், மகரக்குழை அணிந்த காது வெறுமையாக இருக்க, குழையணிந்த வடுவு டன் வண்ணம் தீட்டப்படாத ஓவியமாக காட்சியளித்த நிலையிலும், தன் நெஞ்சில் குத்துகின்ற தாலியை அணிந்திருந்தாள் என்று வர்ணிக்கிறது
(அடிகள் 136-147).

இம்மட்டுமன்றி, பல்லவர் காலம் தொட்டு தமிழர்கள் பின்பற்றி வந்த தேவதாசி முறையில் தாலி அணியும் வினோத வழக்கமும் காணப்பட்டது. பருவமடையாத பதினொரு வயதிற்கு உட்பட்ட சிறுமிகளை கோயிலுக்கு அர்ப்பணிக்கும் வழக்கமே தேவதாசி முறையாகும். கோயில் பணிக்காக அர்ப்பணிக்கப்பட்ட இவர்களை தேவரடியவர், கணிகையர், கோயில் பெண்டுகள், தளிச்சேரிப் பெண்டுகள், பதியிலார், கோயில் அணங்கு கள் என்றெல்லாம் இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இம்முறையின்படி கோயிலுக்கு நேர்ந்து விடப்படும் பெண்கள் சீரிய சடங்குகளுடன் உறவினர் புடைசூழ கோயிலுக்கு அர்பணிக்கப்படுவர். இச்சடங்குகளுக்கு ஆகும் செலவ-ினை மற்றும் மன்னனோ அல்லது ஊர் சபையோ ஏற்றிருந்தனர். இந்நிகழ்வின் போது கோயிலின் சார்பாக பெண்ணை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு கோயிலின் அர்ச்சகர் (தலைமை பூசாரி) பொட்டுத்தாலி என்ற தாலியை சிறுமிக்கு அணிவிப்பார்.

(அடுத்த இதழில் தொடரும்...)

பேராசிரியர். மா. சின்னத்தம்பி

# எமது கல்வியின் இலக்கு எது?

கல்வியின் இலக்கு என்பது மனிதர்களை அதிக மதிப்புமிக்கவர்களாக மாற்றுவதுதான்: தனி நபருக்கும், சமூகத்துக்கும் தீமை தரும் விடயங்கள் மற்றும் செயல்களிலிருந்து தாமாக உணர்ந்து விலகி வாழ்வதற்குரிய விருப்பம், ஆற்றல், உறுதி என்பவற்றை அவர்களிடம் வளர்த் தெடுப்பதுதான் கல்வியின் குறிக்கோள்.

மனிதர்களை தீமைகளிலிருந்து விலக்கி, தம் பெறுமதி யையும், மகிழ்ச்சியையும் வெற்றியையும் உறுதிப்படுத்திக் கொள்ளச் செய்வதுதான் கல்வியின் அடிப்படையான நோக்கம், பரந்துபட்ட குறிக்கோள்.

இதற்காக குடும்பங்கள் தனித்தனியாக செய்ய முடியாதவற்றை சமூக மாக கூட்டிணைந்து



செய்ய முனைந்தார்கள். அதன் வெளிப்பாடும் விளைவும் தான் முன்பள்ளிகளும், பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும், தொழில்நுட்ப உயர்கல்வி நிறுவனங்களும்.

இந்த நிறுவனங்களும், அவற்றின் செயல் முறை களும், அவை உருவாக்குகின்ற ஒன்றிணைந்த பொருளாதார சமூக, அரசியல், பண்பாட்டு, தொழில்நுட்ப விளைவுகளும் தான் கல்வி முறை (Education System) என்று அழைக்கப்படுகிறது.

இந்தக் கல்வி முறையை வடிவமைக்கவும் அதனை மாற்றியமைக்கவும் , பன்முகப்படுத்தவும், நவீனமயப்படுத்தவும் ஓர் அறிவுசார் தலைமைத்துவம் (Knowledge Leader Ship) தேவைப்பட்டது. அதனைக் கல்வியில் உயர்ந்த உயர் குழாத்தினர் (Elites) உருவாக்கினர். இவர்களது ஆலோசனை- களையும் முடிவுகளையும் செயல் முறைப்படுத்தும் வலு (Power) அரசியல் வாதிகளிடமிருந்தது. சிலசமயங்களில் உயர்குழாத்தினரான கல்வி மான்களே அரசியல் தலைவர்களாகினர். ஜேர்மனியின் சான்சலர் ஒரு பேராசிரியர். இந்நிலையில் கௌரவமான அரசியல் தலைவர்களாக (ஜனாதிபதிகளாக), கல்விமான்களாக வருவதுண்டு. பல சமயங்களில் வலுமிக்க அரசியல் தலைவர்களின் பின்னால் அறிவுத்தலைவர்களாக கல்விமான்கள் செயற்படுவதுண்டு. வணிகத்தலைவர்களின் பின்னால் விஞ்ஞானிகளும் புதியன புனைவோரும் நின்று அவர்களைப் பலப்படுத்துவதுண்டு.

இத்தகைய கல்விமான்கள், விஞ்ஞானிகள், நிபுணர்கள் போன்றோரை கண்டறிதல் வேண்டும்? எங்கிருந்து கண்டறிவது? எவ்வாறு கண்டறிவது? இதற்கான செயற்பாட்டு பொறிமுறையான அல்லது ஒழுங்குமுறையான ஏற்பாடாக வடிமைக்கப்பட்டவை தான் எமது பாடசாலைகள் மற்றும் பல்கலைக் கழகங்கள்.

இவர்களை தேசத்தின் குடிமக்களிடமிருந்து வளர்த்தெடுக்க வேண்டும். அவர்களிடமிருந்து அறிவாற்றலும், செயற்றிறனும் மிக்கவர்களை கண்டறிந்து நுண்மதியாளர்களாக அல்லது கூர்மதி மிக்கவர்களாக மாற்றவேண்டும். இதற்காக நன்கு கட்டமைப்பு செய்யப்பட்டவைதான் எமது கல்வி நிறுவனங்கள். தற்போதைய நவீனமயமாக்கப்பட்ட முறைசார் கல்வி நிறுவனங்களும், கல்விச் செயன்முறை (Process) களும் இவை உருவாக்கும் வெளியீடுகளும் (Outputs), விளைவுகளும் (Out comes), தாக்கங்களும் (Impacts) தான் தேசத்தின் வளர்ச்சிப்படிமுறைகளாகவும் பரிணாமங்களாகவும் விரிந்து செல்கின்றன.

d முன்பள்ளிகள் - உள்ளூர்மட்ட செயற்பாடுகள்
d பாடசாலைகள் - பிரதேச மட்ட செயற்பாடுகள்
d பல்கலைக்கழகங்கள்-தேசியமட்ட செயற்பாடுகள்
d உயர் விஞ்ஞான பாடங்களையும் இரு மொழிகளில் கற்பிக்கும், சிறந்த கட்டமைப்புள்ள , AB பாடசாலைகளில் கற்றல்.
d வீட்டில் ஊட்டமுள்ள உணவு, நல்ல உடை, காற்றோட்டமும், வெளிச்சமும் இடவசதியும் கொண்ட வீடுகளில் வசித்தல், படிப்பதற்கான வசதிகளுமிருத்தல்.
d கற்றலில் அதிக நேரம் செலவிடுவதற்கு உதவியாக கற்பதற்காக வேறு வீட்டுப்பணிகளில் அல்லது சிறு வேலைகளிலிருந்து முழுமையாக விடுவித்தல்.
d சுய கற்றலின் போது வீட்டில் துணை செய்வதற்கு கல்விகற்ற பெற்றோரும் , சகோத ரர்களுமிருத்தல்.
d பாடசாலைகள் தவற விட்டவற்றைக் கற்பிக்கவும், விளங்க முடியாதவற்றைக் கற்பிக்கவும், மீளக்கற் பிக்கவும் உரிய மேலதிக ஆசிரியர்களை போதி யளவில் ஏற்பாடு செய்து கொடுத்தல்.
d பரீட்சைக் காலங்களில் மீட்டல், வினா - விடைப்பயிற்சி தொடர்பாக விசேடமான கற்றல் - கற்பித்தல் வசதி- களை பெற்றோர் ஏற்பாடு செய்தல்.
d மூன்றாவது மொழியொன்று மற்றும் கணினி தொடர்பான கற்றல் வசதிகளையும் ஏற்பாடு செய்து வழங்குதல்.
d உலகதரத்திலான பல்கலைக்கழகங்கள் - உலக ரீதியான செயற்பாடுகள்.

பலமான குடும்பங்களிலிருந்து திறமை யானவர்களை உருவாக்குதல் சிறப்பாக கற்றல் என்பது தனிநபர் மற்றும் குடும்பம் சார்ந்த பல காரணிகளில் தங்கியுள்ளது. உடல் வலு, உள ஆற்றல், கற்கும் சூழல், உன்னதமான கற்பித்தல், கற்பதற்கான உதவிகள், கற்கும்படியான ஊக்குவிப்புக்கள், கல்வி மீதான நம்பிக்கை போன்ற பலவும் ஒன்றினையும் போது உன்னதமான கற்றல் நிகழ்வதாக கல்வி ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இத்தகைய எல்லா வசதிகளையும், சூழலையும் பிள்ளைகளுக்கு வழங்கக்கூடிய வசதிகளும் வாய்ப்புக்களும் பலமான குடும்பங் களுக்குரியனவாயுள்ளன. உயர்கல்வி, உயர் வருமானமும் சமூக அந்தஸ்தும் கொண்ட தொழில்கள், பலமான சமூகங்களுடனான நல்ல தொடர்புகள் கொண்ட குடும்பங்களே பலமானவர்களாயுள்ளனர்.

இவர்கள் கல்வி மீது கட்டுப்பாட்டையும் மேலாதிக்கத்தையும் கொண்டுள்ளனர். இது பின்வரும் மாதிரிகளில் வெளிப்படுகின்றது.

d அதிக வசதிகளும் , சிறந்த ஆசிரியர்களும் கொண்ட இருமொழிப்பிரயோகம் உள்ள முன் பிள்ளைப்பருவ கல்வி நிறுவனங்களில் கற்றல்.
d வசதியான போக்குவரத்து வாகனங்களில் பெற்றோருடன் பாடசாலை செல்லுதல்.
d கற்றல் திறனை அதிகரிப்பதற்குரிய பகைப் புலமாக அமையும் வகையில், பிள்ளைகளுக்கான மகிழ்ச்சிகரமான பொழுதுபோக்கு மற்றும் சுற்றுலா வசதிகளை பெற்றோர் ஏற்பாடு செய்தல்.
d தொடர்கல்வி, எதிர்கால கல்வி தொடர்பான மிகச் சிறந்த கல்வி வழிகாட்டல்கள் மற்றும் ஆலோ சனைகளையும் பெறுவதற்குரிய உதவிகளையும் ஏற்பாடுகளையும் பெற்றோர் செய்து கொடுத்தல்.

இலங்கை போன்ற நாடுகளில் சிறுபான்மை யான ஒரு தொகுதி மாணவர்கள் "சாடியில்" வளர்க்கப்படும் மலர்ச் செடிகள் போல கவனமாக போஷிக்கப்படுகிறார்கள். ஆரோக்கியமான போட்டிக் குதிரைகளாக வளர்க்கப்படுகிறார்கள். இவர்களில் அதிக பணமும், நேரமும், அதீத கவனமும் முதலிடப்படுகின்றன. இவர்களே எமது கல்வி முறையில் தென்படும் வெற்றி வலயங்களுக்கான கதவுகளை ஒரே தடவையில் திறந்து கொண்டு வேகமாக பயணிக்கிறார்கள். சமூகத்தினதும் அரசாங்கத்தினதும் பெருந்தொகையான முதலீடுகளையும், முன்னேற்றங்களையும் இவர்களே கையகப்படுத்தப்போகிறார்கள். கல்விப்பரப்பின் உரிமையாளராகிறார்கள். அவ்வாறாயின் மற்றவர்கள் யார்? அவர்களது நிலைமையாது?

------------------------- தொடர்ந்து பேசுவோம்.

( 9 ம் பக்கத் தொடர்ச்சி...)

## ( மக்கள் விடுதலை ...

கட்சி அங்கத்தவர்கள் அனைவரும் சிவப்பு நிற சேட் அல்லது ரி சேட் அணிந்து தாங்கள் இன்னார் தான் என ஒரு குழப்பமும் இல்லாது அமர்ந்து இருந்து அனுரகுமார திசநாயக்க உரையாற்றும் போது மிக அவதானமாக செவிமடுத்தனர்.

2015 தேர்தல் பிரசாரத்தின் போதும் வன்முறைகளோ, கெடுபிடிகளோ, கைதுகளோ ஜே.வி.பி தலைவர்கள் மத்தியிலோ ஆதரவாளர்கள் மத்தியிலோ காணப்படவில்லை.

கட்சியை ஒழுக்கம் மிக்கதாகவும், ஜனநாயகத் தன்மை மிக்கதாகவும், நாகரீகமான அணுகு முறைகளைக் கொண்டதாகவும் அதன் எதிர்காலம் பற்றிய தீர்க்க ஆலோசனையுடன் அனுரகுமார திசநாயக்க எடுத்துச்செல்வது இதற்கு முன்னர் ஜே.வி.பி அமைப்பில் காணப்படாத சிறப்பு அம்சங்கள் ஆகும்.

அனுரகுமார திசநாயக்க, ரில்வின் சில்வா, விஜித ஹேரத், ஹந்துநெத்தி போன்றவர்கள் ஊழல் அற்ற நேர்மையான தலைவர்களாக மக்கள் மத்தியில் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களது தனிப்பட்ட நடத்தை காரணமாக ஜே.வி.பி கட்சிக்கான மக்கள் செல்வாக்கு அதிகரித்து வருகிறது என்பதில் ஐயமில்லை.

2015 பொதுத்தேர்தலில் யாழ்ப்பாணம் உட்பட இலங்கை முழுவதிலும் தமது வேட்பாளர்களை நிறுத்தி உள்ளது ஜே.வி.பி.

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் முஸ்லிம் நகரங்கள், பள்ளிவாசல்கள் பல தாக்குதலுக்கு உள்ளான வேளைகளில் ஜே.வி.பி தலைவர்கள் அங்கு சென்று அந்த மக்களுக்கு ஆறுதல் கூறியும் உதவிகள் செய்தும் உள்ளனர். இது முஸ்லிம் மக்கள் மத்தியில் ஜே.வி.பி தொடர்பான புதிய நம்பிக்கை ஒன்றினை ஏற்படுத்தி உள்ளது. கம்யூனிச சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள ஜே.வி.பி தனது நடைமுறை அணுகுமுறைகளால் மக்களைக் கவர்ந்துள்ளது என்பதற்கு இது நல்ல உதாரணமாகும் .

களுத்துறை, பண்டாரகம, இரத்தினபுரி போன்ற பிரதேசங்கள் ஜே.வி.பி.யினரின் பூர்வீக பகுதிகளாக அடையாளம் காணமுடியும். உபதிஸ்ஸ கமநாயக்க, களப்பதி மற்றும் பல மூத்த தலைவர்கள் இப் பிரதேசங்களில் தமது நம்பிக்கைகளை ஏற்கனவே வளர்த்து வைத்துள்ளனர். இப்பகுதிகளில் இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கிராமத்தவர்கள் ஆகியோர் மத்தியில் ஜே.வி.பி.யினர் அதிகம் செல்வாக்குப் பெற்றுள்ளனர் என்பது மறுப்பதற்கில்லை. இம்முறை நடைபெற இருக்கும் தேர்தலில் ஏறத்தாள 15 இற்கும் மேற்பட்ட அங்கத்தவர்களை ஜே.வி.பியினர் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் மிக சாதாரணமாக உள்ளது.

மற்றும் பல மூத்த தலைவர்களின் ஊழல் அற்ற தன்மையும், நேர்மையான நடவடிக்கைகளும் ஒழுக்கம் மிக்க செயற்பாடுகளும், ஜனநாயகத் தன்மையும், ஜே.வி.பியின் அரசியலைத் தக்க வைத்துக்கொள்ளும் என்பதை விட அவர்களின் வெற்றி என்பது ஏனைய அரசியற் கட்சிகளுக்கு சிறந்த முன்னுதாரணமாகவும் இருக்க முடியும்.

ஒரு நாகரீகமான தலைமைத்துவம் எந்தளவுக்கு மக்கள் மத்தியில் இடம்பிடித்துள்ளது என்பதனை ஜே.வி.பி இனிமேல் எடுக்கின்ற ஒவ்வொரு பாராளுமன்ற பிரதிநிதித்துவமும் கோடி காட்டி நிற்கப்போகிறது.

## தமிழர் வங்கியும்.....

(8 ம் பக்கத் தொடர்ச்சி....)

மகளிருக்கான வங்கிப்பிரிவு, மாணவர் கல்விக்கான நிதிப்பிரிவு, மாற்றுத் திறனாளிகளை சிறுதொழில் முனை வோராக வலுவூட்டும் செயற்றிட்டம், உயர்கல்வித்துறை மாணவர்களுக்கான பகுதிநேர மனிதவளப் பயிற்சித் திட்டம், கிராமிய சிறு விவசாயிகளுக்கான சந்தைப் படுத்தல், நிதி அலகுபோன்ற பலவற்றை நாம் எமது மாதிரியில் வடிவமைப்பதற்கான அடித்தளக் கட்டுமானத்தை தமிழர் வங்கியால் உருவாக்க முடியும். நீண்டகாலத்தில் இவை ஒவ்வொன்றுக்குமான கருத்தாக்க அறிக்கைகளை (Concept Papers ) தமிழர் வங்கி தயாரிக்க முடியும்.

மனித வள விரயங்களை குறைக்கவும், எமது இளைஞர்களின் உடல், உள ஆற்றலை முழுமையாக பயன்படுத்தவும், தமிழர் பிரதேசங்களில் தமிழர் வங்கி முயற்சிக்க முடியும். வங்கியியல் கல்வி, பயிற்சி, தொழில் வாய்ப்பு, நிபுணத்துவக் கல்வி போன்ற பல நிலைகளில் இளைஞர் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு இவ் வங்கி வழிகாட்டவும், அதில் பங்கேற்கவும் முடியும்.

**"தேசிய ரீதியில் வேலையின்மையைக் குறைத்தல்"**

தமது பிரதேசங்களிலேயே தமக்குரிய தொழில் வாய்ப்பைக் கண்டறிதல் என்கின்ற நடைமுறைச் சாத்தியமான இலக்குகளுடன் இவ் வங்கி இயங்க முடியும். இலங்கை மத்திய வங்கியின் பிரதேசக் கிளைகளின் உதவிகளையும் இவற்றுடன் ஒருங்கிணைக்க வேண்டும்.

எமது பிரதேச வளர்ச்சியில் நாட்டமும், முதலீடு செய்யும் நிதி ஆற்றலும் கொண்டு வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடமிருந்து சட்டபூர்வமாக செலா வணியை நாட்டுக்குள் கொண்டு வரவும், தமிழர் வங்கி குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்க முடியும். வெளிப்படைத் தன்மை மற்றும் தெளிவான நடைமுறைகளைப் பின்பற்றும் போது இது சாத்தியமாகி விடும். பயன்படுத்தப்படாது கிடக்கும் நிதிப் பேராற்றலை எமது பிரதேசம் நோக்கி நம்பிக்கையுடன் திசை திருப்புவதில் எதிர்காலத்தில் தமிழர் வங்கி மிகப்பெரிய பங்களிப்பை வழங்கமுடியும். இது தேசிய ரீதியிலும் நிச்சயம் வரவேற்கப்படும்.

கல்வித்துறை ஒரு பொருளாதாரத் துறையாக வும், கல்வி முதலீடு, பொருளாதார முதலீடாகவும் உலகம் முழுவதும் மாறியுள்ளது. உலகின் தலையான பல்கலைக்கழகங்களில் கற்பதற்குரிய நிதி வசதிகளை வழங்குவதற்குரிய வாய்ப்புக்கள் பற்றியும் தமிழர் வங்கி கவனம் செலுத்த முடியும். உலகம் முழுவதிலும் தமிழர் வாழும் பகுதிகளின் பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து இணை நிகழ்ச்சித் திட்டங்களையும் ( Joint Programs ) தமிழர் வங்கி தயாரிக்க வேண்டும். எதிர்காலத்தில் இலங்கையில் உருவாகி வளரவிருக்கின்ற தனியார் பல்கலைக்கழகங்களில் கற்பதற்கான நிதி வழங்கும் பிரிவு ஒன்றைக் கவனமாகத் திட்டமிடுவதால் தமிழர் தம் உயர் கல்வி வளர்ச்சியை புதிய திசையில் நகர்த்த முடியும். பொதுக்கல்வி, உயர்கல்வி, தொழில்நுட்பவியல்கல்வி என்பன தொடர்பான கொள்கை வகுப்பு செயற்றிட்டத்தையும் இவ்வங்கி ஊக்குவிக்க முடியும்.

**சிந்தனையும் செயலாக்கமும்**


தமிழர் வங்கி பற்றிய சிந்தனையை நாம் காலம் தாழ்த்தாது செயலாக மாற்றவேண்டும். அதற்கான சில படிமுறைகளையும் பரிசீலிக்கமுடியும்.

* கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளல்.
* சாத்தியப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்தல்.
* பல்வேறு வளங்களையும் பரிசீலித்தல்.
* செயற்றிட்டங்களை (Action Plans ) உருவாக்குதல்.
* முன் மாதிரி வங்கிப் பிரிவை தொடக்குதல்.
* வெற்றி-வெற்றிசார் அணுகுமுறையை ( Win -win Approach ) பின்பற்றல்.
* "சுவட்டு" (SWOT ) மதிப்பீட்டை மேற்கொள்ளல்.
* வங்கியைக் கூட்டு நிறுவன மாதிரியில் ( Co-operative Type – Company ) நிறுவுதல்.
* காலத்துக்குக் காலம் இடைநிலை மதிப்பீடுகளைச் செய்து இம்மாறுதல்கள் மூலம் வளர்ச்சியையும் பேண்தகு ஆற்றலையும் உறுதிப்படுத்துதல்.
* கூட்டுத் தீர்மானங்களும், நேர்சிந்தனைகளும் எதிர்காலத்தில் எமக்குரிய தமிழர் வங்கியை உருவாக்க நிச்சயம் உதவும் என்ற நம்பிக்கை சமூக ஆதரவுடன் உண்டு. இவ்வங்கியை உருவாக்கி அதனை எமது அபிவிருத்தி மற்றும் வளர்ச்சியின் மைய விசையாக மாற்றுதல் வேண்டும். இலக்கு நோக்கி தெளிவுடனும் உறுதியுடனும் பயணிப்போம்.

## கடந்த பாராளுமன்றத் தேர்தல்கள்

| | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| 2010 பாராளுமன்றத் தேர்தல் | | |
| TNA | 65119 | 43.85 % |
| UPFA | 47622 | 32.07 |
| 2011 பாராளுமன்றத் தேர்தல் | | |
| TNA | 150 000 | 71.5% |
| UPFA | 58 000 | 27.6 % |
| UPA | 3750 | 1.7 |
| 2013 வடமாகாணம் - உள்ளூராட்சித் தேர்தல் | | |
| TNA | 253.000 | 83.3% |
| UPFA | 253000 | 74.4 % |
| 2015 ஜனாதிபதித் தேர்தல் | | |
| மைத்திரிபால சிறிசேன | 254000 | 74.4 % |
| மகிந்த | 74454 | 21.85 % |

# கலாம் என்கின்ற அக்கினிப் பறவை




இந்தியப் பெருங்கண்டத்தின் தென்கோடியில் பிறந்து இந்தியா முழுவதையுமே அறிவியலாலும், ஆளுமையாலும், ஆட்சியாளராகவும் கோலோச்சியவர் விஞ்ஞானி அப்துல் கலாம்.

சிறுவயதில் ஓட்டிஷத்தால் பாதிக்கப்பட்டவர். ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த கலாம் தனது விடாமுயற்சியால் படித்து முன்னேறியவர். உலகெங்கும் புகழ்பெற்ற இந்த மனிதர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தபோது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் விஜயம் செய்திருந்தார். அது பற்றி அப்பாடசாலையின் மாணவன் ஒருவன் இவ்வாறு நினைவு கூர்ந்தான்.

'அந்தப் பெரிய அறிவியல் மேதையை என் வாழ்நாளில் நேரில் காண்பேன் என ஒருபோதும் நினைத்திருக்கவில்லை. அவரை நேரில் கண்டபோது இவரா? அந்த ஏவுகணை மனிதர் என்ற ஏக்கம் எங்கள் எல்லோருக்குமே ஏற்பட்டது. எம்முடன் மிகச் சாதாரணமாகவே பழகிக் கொண்டார்.

எனது பாடசாலைக்கு சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி போன்றோர் ஏற்கனவே வருகை தந்திருந்ததாக அறிந்திருக்கிறேன். ஆனால் நான் பாடசாலை மாணவனாக இருந்த போது விஞ்ஞானி அப்துல் கலாம் எங்கள் பாடசாலைக்கு வந்ததை எனது வாழ்நாளில் ஒருபேறாகவே கருதுகிறேன்"

அறிவியல் மேதையான கலாம் தனது இறுதிக் கணத்திலும் அறிவியலுக்குப் பங்களிப்புச் செய்துகொண்டிருந்தார் என்பது எல்லா அறிவியல் மேதைகளுக்கும் கிடைத்துவிடாத ஒன்று.

விண்வெளியை ஆண்ட அந்த மனிதர் - இந்தியாவின் ஜனாதிபதியாக இருந்தவர், என்பவற்றுக்கெல்லாம் அப்பால் அவர் எவ்வளவு தூரம் எளிமையானர், நேர்மையானவர் என்பதற்கு சிறந்த உதாரணம் தனது படிப்பையோ, பணத்தையோ, அதிகாரத்தையோ பயன்படுத்தி அவர் பிறந்த வீட்டிற்கு மின்சாரம் பெறவில்லை என்பது மட்டும் அவரது எளிமைக்கும் நேர்மைக்கும் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

## தமிழ் உணர்ச்சிப்..

(11ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்காலத்தில் ஒரு நல்ல இடத்திற்கு வரக்கூடியவர் என அன்றே ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் திருநிலைப் படுத்தப்பட்டவர். இவரது சாணக்கியத்திற்கு சிறந்த உதாரண-மாகக் கூறப்படுவது மிக இறுக்கமான கட்டமைப்பைக் கொண்டிருந்த விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய கருணா என்பவரை அவ் அமைப்பில் இருந்து பிடுங்கி எடுத்தன் மூலம் அவ் அமைப்பைப் பலவீனப்படுதினார்.

### மைதிரிபால சிறீசேன

தனது குறுகிய ஆட்சிக் காலகட்டத்திற்குள் பல பௌத்த மையங்களைத் திறந்து வைத்ததும், சரத்பென்சேகாவுக்கு பீல்ட் மாஷல் என்ற பதவியைக் கொடுத்ததுடன், இராணுவத்தை எல்லா நிலைகளிலும் பலப்படுத்தியவர்.

மகிந்தவின் அரசில் யாழ்ப்பாணத்தில் 59 சிறிய இராணுவ முகாம்கள் மூடப்பட்டது தொடர்பில் அதிருப்தியுடன் இருப்பவர். அவ்வாறு மூடப்பட்டதற்கு மகிந்தவே காரணம் எனக் கூறியதன் மூலம் சிங்கள மக்களுக்கு ஆத்ம திருப்தியைக் கொடுத்தவர்.

நான் மேலே குறிப்பிட்ட சிங்களத் தலைவர்கள் தமது இனத்திற்காகவும், மதத்திற்காகவும், நாட்டிற்காகவும் நினைவுகூர வேண்டியவர்கள் என்ற வகையில் அதற்கான அடைவினை எட்டியவர்கள்.

தமிழ்த் தலைவர்களைப் பொறுத்த வரையில் பிரித்தானியர் காலத்தில் 'நாம் அப்படியிருந்தோம் இப்படி இருந்தோம், அதி-காரம் மிக்கவர்களாக இருந்தோம்" என்கிறார்களே தவிர, அந்தக் கட்டத்தில் சட்டபூர்வமாகத் தமிழ் மக்களுக்கு செய்யக் கூடியவற்றைச் செய்யத் தவறிய தலைவர்கள் தமது பரம்பரைக்குத் தேவையான அந்தஸ்தையும், சொத்துக்களையும், கல்வியையும் பிரித்தானியரிடம் இருந்து தாழ்மையுடன் பெற்றுக் கொண்டவர்கள்.

இதையே பின்னாளில் வந்த தமிழ்த் தலைவர்களும் பின்பற்றி வருகின்றனர். (தந்தை செல்வாவைத் தவிர)

தமிழ்த் தலைவர்களில் பலர் சட்டத்தரணிகள் என்பதால் நன்றாக விவாதிக்கக் கூடியவர்கள் என்ற நம்பிக்கையில் அவர்களைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பினார்கள். அவர்களது பாராளுமன்ற விவாதங்களைப் பற்றி பத்திரிகைகளில் பெருமைப்படுத்தி எழுதினார்கள். அவற்றால் தமிழ் மக்களுக்கு என்ன நன்மை கிடைத்தது என்பதை தர்க்க ரீதியாகப் பார்க்கத் தவறிவிட்டனர்.

சிங்களத் தலைவர்கள் - தமிழ்த் தலைவர்களை பாராளுமன்றத்தில் கடுமையாகத் தாக்கிப் பேசுவதை தமிழ்த் தலைவர்கள் மனதார விரும்பினர். ஒருதடவை சிறில் மெத்தியூ என்பவர் 'அமிர்தலிங்கத்தை பாக்குமரத்தில் கட்டி காலிமுகத்திடலில் இரண்டாக்க கிழிக்க வேண்டும்" என்று பேசினார். அவ்வாறு செய்யமாட்டர்கள் என்பதை அமீர் நன்கு அறிந்திருந்தார். இந்தப் பேச்சு அவருக்கு கைமேல் பலனைக்கொடுத்தது அதைப் பத்திரிகைகள் கண்டித்து எழுதின. இந்தியா மற்றும் வெளிநாடுகளில் எல்லாம் அமீர் ஒரு பேசுபொருளாக , தமிழ் மக்களின் உணர்வுகளை சிங்களவர் பக்கம் திருப்பிவிட வாய்ப்பாகப் பயன்படுத்தினர்.

மருதமலை என்ற திரைப்படத்தில் வடிவேலு ஏட்டையாவாக நடித்தபோது அவருக்கு அடித்த ஒருவன் வந்து நான் உங்களை அடித்திருக்கிறேன் ஞாபகம் இருக்கிறதா?" என்று கூற "அங்க வைத்து அடித்தார்களே" அதை சொல்கிறாயா? "இங்கவைத்து அடித்தார்களே" இதைச் சொல்கிறாயா? என்று கேட்பது போலவே தமிழ்த் தலைவர்கள் தம்மைச் சிங்களவர்கள் மோசமாகப் பேசுவதை தமக்கு சாதகமாகக் கொண்டார்களே தவிர, தமிழ் மக்களுக்கு தாம் கொடுத்த வாக்குறுதிகளில் எத்தனையை நிறைவேற்றினார்கள் என்று பார்ப்பதில்லை.

தமிழ்த் தலைவர்களிடம் எதைச் செய்யப்போகிறோம் என்ற நிகழ்ச்சி நிரல் இல்லை. (தற்போது உள்ளவர்களிடம் கூட யுத்தத்தில் இறந்தோர், விதவைகள், ஊனமுற்றோர் போன்ற விபரங்களைக் கேட்டால் அது பற்றிய சரியான தரவு அவர்களுக்கு தெரிந்திருப்பது இல்லை) இவ்வாறு திட்டமில்லாது இருப்பதால், அவர்கள் தமது அடைவைப் பற்றி கவலைப்படுவதில்லை.

அவ்வாறான ஒரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் மக்கள் நலன் சார்ந்து செயற்பட்டிருந்தால் அவை நிறைவேற்றப்படாது இருக்கும்போது தமது பாராளுமன்றப் பதவிகளை இராஜினாமாச் செய்திருப்பார்கள்.

2015 பொதுத்தேர்தலில் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தன் - 2016இல் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு ஒன்று கிடைக்கும் அதற்காக எமக்கு வாக்களியுங்கள் என்கிறாரே தவிர, அவ்வாறு தீர்வு கிடைக்காவிட்டால் 2016 டிசம்பரில் தாம் அனைவரும் தமது பாராளுமன்றப் பதவிகளை இராஜினாமாச் செய்வோம் என்று குறிப்பிடவில்லை.

தமிழ்த் தலைவர்கள் சிங்களத் தலைவர்களைக் கிண்டல் அடிக்கிறார்களே தவிர, உதாரணமாக அத்துலக் முதலியை 'அச்சுலக்கை" எனக் கூறுகிறார்களே தவிர, அவர்களுக்கு இணையாக தம்மை வளர்த்துக்கொள்ளத் தவறிவிட்டனர். 'சிங்களவன் மூடன்" என்ற எண்ணம் தமிழரில் ஒரு பகுதியினருக்கு இன்னமும் உண்டு.

மிதவாத அரசியல் என்று கூறிக்கொண்டு இரத்தம் கொதிக்கும் அளவிற்கு ஆக்ரோஷமாக கதைக்கிறார்களே தவிர எதையும் சாதிக்கவில்லை.

30 வருட காலமாக ஆயுதப் போட்டத்தின் மூலம் பல சாதனைகளை நிலைநாட்டிய விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் நவம்பர் 27 இல் மாவீரர் தின உரை நிகழ்த்தும்போதுகூட ஆக்ரோஷப்பட்டுக் கதைப்பதில்லை. அவரது உரையில் இம்முறை என்ன சொல்லப்போகிறாரோ என உலகையே காத்திருக்க வைத்தவர்.

ஆனால் மிதவாதம் என்று தம்மைக் காட்டிக் கொள்பவர்கள் பொய்சொல்லுகிறோம் என்று நன்றாகத் தெரிந்திருந்தும் அடக்கி வாசிக்கும் பழக்கம் அவர்களிடம் இருக்கவில்லை.

தமிழ்த் தலைவர்களில் தந்தை செல்வா, தமிழ் மக்களின் உரிமைக்காக எல்லா முயற்சிகளையும் நியாய பூர்வமாகவும், இதய சுத்தியுடனும் மேற்கொண்டு அது சாத்தியப்படாத பட்சத்தில் "இனிக் கடவுள்தான் தமிழ் மக்களைக் காப்பாற்றவேண்டும்" என்று கூறி அணைந்துவிட்டார்.

அவர் மேடையில் பேசும் போது என்ன பேசுகிறார் என்பது வெளியில் கேட்காததை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு 'தந்தை செல்வா இப்படித்தான் சொல்கிறார்" என கத்திக் கதைத்து தமிழ் மக்களை எழுச்சியூட்டினார்களே தவிர, அமிர்தலிங்கம் தன்னைப் பற்றி மக்களுக்கு என்ன கூறுகிறார் என்பதையும், தந்தை செல்வா அறியாமல் இருந்தது தான் துன்பமானது.

ஏற்கனவே கட்டுரையின் முற்பகுதியில் குறிப் பட்ட சிங்களத் தலைவர்கள் சிங்கள மக்களின் நிலைப் பேற்றுக்கான செயற்பாட்டில் இறங்கியவர்கள் எனவும் தமிழ்த் தலைவர்கள் எழுச்சியைப் பேசி தம்மைத் தலைவர்களாக பிரகடனப்படுத்திக் கொண்டவர்கள். இவ்வாறான உணர்ச்சிப் பேச்சுப் பேசுகின்றவர்களையே சிங்களத் தலைவர்கள் பெரிதும் விரும்பினர். "அவர்கள் குலைப்பார்களே தவிர கடிக்கமாட்டார்கள்" என்று.

தமிழ் மிதவாதத் தலைவர்கள் மிகத் தந்திரமாக மக்களை ஏமாற்றும் வகையில் பேசுவார்கள். இதற்கு நல்ல உதாரணமாக ஒரு மேடையில் அண்மையில் கூறிய 'அ.ஆ.இ" யைக் குறிப்பிடலாம். அதாவது அகிம்சையில் ஆரம்பித்தோம் அது பலனலிக்காத போது ஆயுதம் ஏந்திப் போராடினோம். அதுவும் பலனளிக்காத போது தற்போது இராஜ தந்திரமாக நடந்து கொள்கிறோம் என்றார். (இதில் 'இ" ) என்பது இணங்கிய அரசியலோ என எண்ணத் தோன்றுகிறது.

# அருகிவரும் தபால் சேவையின் மகத்துவம்




**பிறைவானன்**

நவீன தொழில்நுட்பங்கள் வளர்ச்சியால் எண்ணற்ற மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. 'புதியன புகுதலும் பழையன கழிதலும்' என்பதற்கேற்ப, சில தொழில்கள் மறைந்து வருகின்றன. தகவல் பரிமாற்றத்தில் பெரும்பங்கு வகித்த தபால் துறையும் அதிலிருந்து தப்பவில்லை.

தபால்களைக் கையாள்வதில் தபால் பெட்டிகளின் பங்கு மகத்தானது. இருக்கும் இடத்தின் அருகிலேயே, அனுப்ப வேண்டிய தபால்களை போடுவதற்கு, தபால் பெட்டி வசதிகள் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஈ-மெயில், எஸ். எம்.எஸ். போன்ற பல்வேறு நவீன மாற்றங்கள், தகவல் பரிமாற்றத்தில் ஏற்பட்டாலும், கடிதம் மூலம் அனுப்பப்படும் செய்திகள், தகவல்கள் மிகவும் உணர்ச்சியுடையவை என்பதை மறுக்க முடியாது.

## தபால் வளர்ந்த கதை

இங்கிலாந்தில், லோங்வில்லி மாகாண போஸ்ட் மாஸ்டர் ஜெனரல், மினிஸ்டர் ஃபாகத் என்பவரது மனைவியின் யோசனையில், முதல் தபால் பெட்டி 1653-ம் ஆண்டு அறிமுகமானது. தபால் பெட்டிக்கு மாதிரி வடிவத்தை கொடுத்தவர் சார்லஸ் ரீவ்ஸ்.

1851-ல் பிரிட்டிஷ் அரசு, அந்தோணி ட்ரோலயி என்ற நாவலாசிரியரை பிரிட்டிஷ் தபால் இலாகாவின் பணி மேம்பாட்டு அதிகாரியாக நியமித்தது. அவரது ஆய்வின் பயனாக, லண்டன் நகர் மற்றும் பல நகரங்களில் ஐந்தடி உயரமுள்ள இரும்புத் தூண் தபால் பெட்டிகள் வைக்கப்பட்டன. பிரான்ஸ் நாட்டில் அறிமுகமான தபால் பெட்டிகளைப் பின்பற்றி பிரிட்டிஷ், பெல்ஜியம், ஜேர்மனி நாடுகளில் தபால் பெட்டிகள் பரவலாயின. இவையெல்லாம் அதிகபட்சம் ஐந்தரை அடியாகவும், குறைந்த பட்சமாக நான்கு அடியாகவும் இருந்தன. ஜெர்சி மாகாணத்தில் 1852-ல் நான்கு தூண் தபால் பெட்டிகள் வைக்கப்பட்டன.

பொது மக்களைப் பெரிதும் ஈர்த்தது பிரிட்டிஷ் அரசின் தபால் பெட்டிகள். பிரிட்டிஷ் அரசின் சின்னமும், பிரிட்டிஷ் தபால் துறையின் ரோயல் மெயில் சின்னமும் தபால் பெட்டிகளின் மேல்பாகத்திலும், முகப்பிலும் இடம்பெற்றன. மெயில் ரயில்கள், மெயில் பஸ்கள் போன்ற வாகனங்களிலும் தபால் பெட்டிகள் இடம்பெற்றன.

மக்களின் கவனத்தை ஈர்க்க, தபால் பெட்டிக்கு பிரிட்டிஷ் அரசு தந்ததுதான் இந்த சிவப்பு வர்ணம். உலகிலுள்ள அனைத்துத் தபால் பெட்டிகளும் இந்த நிறத்துக்கு மாறின. இதுவே, 'போஸ்ட் ஆபீஸ் ரெட்' என்று பிரபலமானது. உள்ளூர் கடிதங்களைப் போட அறிமுகமானதுதான் பச்சை நிற தபால் பெட்டிகள்.

## முதல் தபால் பெட்டி

உதகமண்டலம் தபால்நிலையம் 1826-ல் ஆரம்பிக்கப்பட்டது. 1855-ம் ஆண்டு உதகைக்கு லண்டனிலிருந்து பில்லர் லெட்டர் பாக்ஸ் கொண்டு வரப்பட்டது. இதுவே தான் லண்டனிலிருந்து, இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட முதல் தபால் பெட்டி. 1856-57 ஆண்டுகளில், லண்டனிலிருந்து பெருவாரியான தபால் பெட்டிகள் இறக்குமதி செய்யப்பட்டன. தார்லார் சமஸ்தானத்தில், 4 அடி 3 அங்குலம் உயரம் கொண்ட மரத்திலான தபால் பெட்டிகள், எட்வர்ட் ஆட்சிக்காலத்தில் வைக்கப்பட்டிருந்தன.

## உற்ற நண்பன்

தற்போது, தபால் பெட்டிகளை சரிவர பராமரிப்பதில்லை. ஆள் நடமாட்டம் இல்லாத இடங்களில் தபால் பெட்டிகளை வைத்திருப்பதும், மரத்தில் கட்டிப்போட்டிருப்பதுமாக, முக்கியத்துவமே தரப்படாமல், பெயரளவில் உள்ளன. கிராமப் பகுதிகளில் இன்றும் தபால் பெட்டிகள், அவர்களுக்கு உற்ற நண்பனாக இருக்கின்றன.

கடந்த காலங்களில் வேலை நியமனம், நேர்காணல் போன்ற அனைத்துத் தகவலும் தபால்களில்தான் வரும். முக்கியத்துவம் பெற்ற தபால் பெட்டிகள், தற்போது குப்பைப் பெட்டிகளோடு சேர்த்து வைத்திருப்பதுதான் வேதனையாக இருக்கிறது.

ஸ்கொட்லாந்தில் 1712-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தபால் நிலையம்தான் உலகின் மொத்த தபால் நிலையங்களுக்கும் தாய் வீடாகும். இன்றைக்கும் அந்த தபால் நிலையம் மக்கள் சேவையாற்றி வருகிறது. இற்றைக்கு உலகில் 8 லட்சத்துக்கும் அதிகமான தபால் நிலையங்கள் உள்ளன. உலகிலேயே அதிக தபால் நிலையங்களை கொண்ட நாடாக இந்தியாவுள்ளது. கிட்டத்தட்ட 1.5 லட்சம் தபால் நிலையங்கள் இந்தியாவில் உள்ளன.

சுவிஸ் தலைநகர் பெர்னெயில் 1874-ம் ஆண்டு ஒக்ரோபர் 9-ம் திகதி 'சர்வதேச தபால் ஒன்றியம்' தொடங்கப்பட்டதையொட்டி உலக அஞ்சல் தினம் கொண்டாடப்படுகிறது.

1874ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9ம் திகதி சுவிட்சர்லாந்தின் பெர்ன் நகரில் "சர்வதேச தபால் ஒன்றியம்' ஸ்தாபிக்கப்பட்டது.

இதை நினைவுகூரும் முகமாக ஆண்டு தோறும் ஒக்ரோபர் மாதம் 9ம் திகதி உலக தபால் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

விந்தைமிகு விஞ்ஞானத்தின் வெளிப்பாடுகள் காலத்துக்கு காலம் புதிய பல படைப்புக்களை மனிதனுக்கு வழங்கிக் கொண்டே இருக்கின்றன. செய்திப் பரிமாற்ற வேகம் மைக்ரோ செக்கன்களையும் முந்தி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தச் செய்திப் பரிமாற்றம் இன்று எழுத்து, ஒலி, ஒளி வடிவம், உணர்வு வடிவம் என பல பரிணாமங்களை பெற்று விட்டது. ஸ்கைப் இணையத்தள வசதியூடாகக் கதைப்பவர்கள் கைகளைப் பிடித்துக் கொண்டு பேசுவது போன்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் ஓர் உபகரணம் கூட அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

ஆனால், ஒரு காலத்தில் மனிதர்களுக்கிடையிலான தகவல் பரிமாற்றங்களுக்கு தபால் துறையிலேயே தங்கியிருக்க வேண்டியிருந்தது. இலங்கையின் தபால் துறையின் வரலாற்றுப்பதிவை உள்ளடக்கிய நூதன சாலை ஒன்று கொழும்பு தபால் தலைமையகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. பண்டைய தொடர்பாடல் முறைகளை தற்போதைய தலைமுறையினர் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் அத்தொடர்பாடல் சாதனங்கள் காட்சிப் பொருட்களாக அந்த நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

முதல் முறையாக கற்பாறைகளில் படங்களை வரைவதனூடாகவே தகவல் பரிமாற்றத்தை ஆரம்பித்து, பின்னர் ஊ...... என்ற ஓசையெழுப்புவதன் ஊடாக தகவல் பரிமாற்றத்தின் பரிணாமம் ஆரம்பித்ததாக காட்டும் சித்திரிப்பு ஓவியங்களுடனான சிறு விளக்கத்துடனேயே இந்நூதன சாலையில் காட்சிப்படுத்தல் ஆரம்பமாகிறது.

(தொடரும்)



# மெல்லிசையால் வாழும் விஸ்வநாதன்

செல்வா-

தமிழ்த் திரைப்பட வரலாற்றில், 50 ஆண்டுகளுக்கு மேலாக ஆதிக்கம் செலுத்திய, 'மெல்லிசை மன்னர்' எம்.எஸ்.விஸ்வநாதன் எம்மை விட்டு கடந்த 14.7.2015 இல் பிரிந்து சென்றார். அவரின் இசை என்றும் அவரை வாழ வைக்கும் என்பது உண்மை. இசை மீதான தீராத காதலால் 1940 ஆம் ஆண்டு சினிமாவில் நுழைந்தார் மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன். "புது வசந்தமாமே வாழ்வில் இனிதாய் சுகமே காண்போமே " என்ற பாடலே இவரின் முதல் பாடலாகும். இந்த முதல் பாடல் மூலமே புகழின் உச்சிக்குப் போனார் என்றால் மிகையாகாது. அன்றைய புகழ் பெற்ற அத்தனை இசையமைப்பாளர்களின் அறிமுகமும், அவர்களது இசைக்கு உதவியாளராக தன்னைப் பயணிக்க வைத்தது தான் உலகம் போற்றும் இசை மேதையாக தன்னை அடையாளப்படுத்த மெல்லிசை மன்னரால் முடிந்தது.

சிறு வயதிலேயே, தந்தையை இழந்து மிகவும் கஷ்டப்பட்ட இவர் - நீலகண்ட பாகவதரிடம் முறைப்படி சங்கீதம் கற்றார். தன், 13வது வயதில், மேடையில் முதல் கச்சேரி செய்தார். 1200 படங்களுக்கு இசையமைத்தவர். மலையாளத்தில் 74 திரைப்படங்களுக்கும், தெலுங்கில் 31 திரைப்படங்களுக்கும் இசையமைத்துள்ளார்.

சினிமாவில் இசையமைக்கும் ஆர்வம் நடிகர் எம் .ஜி ஆர் நடித்த ஜெனோவா (1953) என்ற திரைப்படத்தின் மூலம் நிறைவேறியது. அந்தக்காலத்தில் புகழ்பெற்ற இசையமைப்பாளர்களான எம் .எஸ். ஞானமணி, டி.ஏ.கல்யாணம் போன்ற இசையமைப்பாளர்களும் இணைந்து இசையமைத்தார்கள். அந்தப் படத்தில் இடம்பெற்ற பாடல் பெரிய வெற்றியைத் தரமுடியவில்லை. எனினும் " பரலோக மாதா பரிதாபம் இல்லை" நானறிவேனே உங்கள் ஜாலம் " "ஆசையே அலை மோதுதே " போன்ற பாடல்கள் குறிப்பிடத்தக்கவை.

பின்னாளில் இரட்டையர்களாக என் .எஸ் . கிருஷ்ணன் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட மெல்லிசை மன்னர்கள் என்ற இணை, 1950 களின் இறுதியிலும் 1960 லிலும் உச்சம் பெறத் தொடங் கியது. மெல்லிசையில் உச்சங்களைத் தொட்டுக் கொண்டிருந்த ஹிந்தி திரைப்பட இசை போல தமிழ் திரைய-'சையையும் மெல்லிசைப் பக்கம் திருப்பிய வர்களில் முதன்மையானவர்கள் மெல்லிசை மன் னர்கள் விஸ்வநாதன் ராமமூர்த்தியைச் சேர்ந்த வெற்றிக் கூட்டணி 1965ம் ஆண்டு வரை தொடர்ந்தது. இவர்கள் 700 படங்களுக்கு மேல் இசையமைத்தனர். மாபெரும் வெற்றி கண்ட திரைப்படம், எம்.ஜி.ஆர்., உடன் ஜெயலலிதா இணைந்த முதல் திரைப்படமான 'ஆயிரத்தில் ஒருவன்' ஆகும். பின்னர் இருவரும் தனித் தனியாக இசையமைக்கத் தொடங்கினர்.

கர்நாடக இசை ராகங்களுடன் , ஹிந்துஸ்தானிய சங்கீத ராகங்களையும், ஹிந்துஸ்தானிய வாத்தியக் கருவிகளையும் இணைத்து பிரமிக்க வைக்கும் பாடல்களை அநாயாசமாகத் தந்து, நம்மாலும் ஹிந்திப் பாடல்களுக்கு நிகராக இசையமைக்க முடியும் என நிரூபித்தார்கள். சாக்ஸபோன், கிடார், ஹார்மோனிகா, ஒபோ, ட்ரம்பெட், கிளாரினெட், பொங்கொஸ் போன்ற மேலைத்தேய, லத்தீன் அமெரிக்க இசைக்கருவிகளை இசை மேதை சி.ராமசந்திரா இந்தி திரைப்படங்களில் பயன்படுத்தி புதுமை செய்தது போல அவற்றை தமிழ் திரை இசையில் புகுத்தி வெற்றிகண்டவர்கள் மெல்லிசை மன்னர்கள்.

அவர்கள் இணைந்து இசையமைத்த பந்தபாசம், பாலும் பழமும் , பாகப்பிரிவினை, பாசமலர் போன்ற படங்கள் மட்டுமல்ல பல்வேறு படங்களிலும் அவர்களின் இசை சோடை போனதில்லை. சாகாவரம் பெற்ற பாடல்களின் சொந்தக்காரர்கள் மெல்லிசை மன்னர்கள். இசையில் பாண்டித்தியம் பெற்ற ராமமூர்த்தி , உலக இசையின் மீதும் ஆர்வம் கொண்ட தேடல் மிக்க விஸ்வநாதன் கூட்டிணைவு தந்த வெற்றிக்கனிகளை தமிழ் மக்கள் பரிபூரணமாக அனுபவித்தனர்.

1965 மனக்கசப்பால் இரு மேதைகளும் பிரிந்தமை தமிழ் இசை ரசிகர்களுக்கு பேரிழப்பானதாகும். தனித்து இசையமைத்த பின்னரும் வெற்றிக்கொடி நாட்டிக் காண்பித்தவர் விஸ்வநாதன். கனதி மிக்க ராகங்களைக் கையாண்டு, வெற்றிகண்டு பாமரர்களை மட்டுமல்ல, இசை அறிஞர்களையும் வியக்க வைத்தவர் விஸ்வநாதன். மெல்லிசை மன்னரின் தனித்துவம் வாய்ந்த சிறப்பு எனக் கருதுவது அவரது தனித்துவமிக்க இசை ஆளுமையை பாடக, பாடகிகள் மீது பதிய வைப்பதே! அவரது ஆளுமை பாடும் பாடகர்களின் குரலிலும் துல்லியமாக துருத்தி நிற்கும் வண்ணம் பாதிப்பை ஏற்படுத்தி விடுவதை நாம் கேட்கலாம். எந்தப் பெரிய பாடகர் பாடும் பாடலிலும் விஸ்வநாதனின் இசை ஆன்மா வெளிப்பட்டு நிற்கும்.

திரைப் படங்களுக்கு மட்டுமல்ல, பக்திப் பாடல்கள், தனிப் பாடல்கள் போன்றவற்றிற்கும் இசையமைத்தவர் மெல்லிசை மன்னர். வாத்திய இசையாக அவர் வடித்த இசை வடிவம் இசைஞானி போன்றோர் பின்நாளில் செய்த வாத்திய இசை வடிவங்களுக்கு



ஆதர்சமாக இருந்தது எனலாம். புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே. ஆயர் பாடி மாளிகையில் இலங்கை வானொலியில் " பொங்கும் பூம்புனல் " என்ற நிகழ்ச்சியின் முன்னிசை மெல்லிசை மன்னரின் இசையை நாம் கேட்டு மகிழ்ந்தோம்.

அவருடன் இணைபிரியா சகபாடியாக இருந்த கவிஞர் கண்ணதாசன் மெல்லிசை மன்னர் பற்றி இப்படி நினைவு கொள்கிறார் .." அவனுக்கு இசையைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது. அவன் அரசியல், உலக நடப்புக்கள் பற்றி கேட்டால் சிரிப்பாக இருக்கும். ஆனால் இசை என்று வந்தால் , உலகெங்கிலும் என்னென்ன இசை உண்டு என்பது அவனுக்கு தெரியும். இந்தியா முழுவதும் பல இசை அமைப்பாளர்களை சந்தித்திருக்கிறேன். ஆனால், எந்த மொழியிலும், தம்பி விஸ்வநாதனைப் போல் ஒருவரையும் கண்டதும் இல்லை கேட்டதும் இல்லை." என்றார்.

"நீராரும் கடலுடுத்த நிலமடந்தை " தமிழ் நாட்டின் அடையாளப் பாடலை பண்டைத் தமிழர் போற்றி வளர்த்த முல்லைப்பண்ணான இன்றைய மோகனத்தில் நம் மரபிசையின் மேன்மையை நெகிழத் தந்த இசை மேதை இவர். பிறப்பால் மலையாளியாகப் பிறந்து தமிழ் திரை இசையை தனது ஆற்றலாலும், கடின உழைப்பாலும் வளர்த்த இசை மாமேதை இவரைப் பற்றி இசைஞானி சொல்லும் போது.

" அவரது இசையில் என் நாடி , ஊறிக்கிடக்கிறது !" அவருடைய பாடல்கள் நல்ல இசை ரசிகர்களின் நாடி, நரம்புகளிலெல்லாம் ஊறித்தான் கிடக்கிறது. பாசமலர் படத்தில் அவர் பாடும் " அன்பு மலர் ஆசை மலர் " தமிழர்கள் காதுகளில் என்றென்றும் ரீங்காரமிட்டுக் கொண்டே இருக்கும். என்றார்.

ஹிந்தி இசையின் நவீனத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்த தமிழர்கள் 1970 களின் மத்தியில் திடீரென நமது மண் வாசனையை நுகரத் தொடங்கியது ஒரு மிகப் பெரிய இசை மாற்றத்திற்கான முதல் சுவடு. இவ்வாறு நம் இசை நம்மிடமே திரும்பி வந்தது எனலாம். 1970 களில் இவர் ஒரு தனிக்காட்டு ராஜாவாகவே வலம் வந்தார்.

20 ஆண்டுகள் கழிந்தும் இவரின் இசை வெள்ளம் தடைகளற்று ஓடிக்கொண்டிருந்தது. சங்கர் கணேஷ், வி.குமார், ஜி.கே.வெங்கடேஷ், வேதா, தட்சிணாமூர்த்தி, கோவர்த்தன், ஷியாம், விஜய பாஸ்கர் போன்ற இசையமைப்பாளர் ஆடுகளத்தில் இருந்தாலும், எம்.எஸ்.வி.மட்டுமே இசையை தன் வசம் வைத்துக்கொண்டிருந்தார். சொல்லப் போனால் 1970 களில் பிரபலமான பாடல்கள் கூடுதலாக இவராலேயே இயற்றப் பெற்றவை.

விஸ்வநாதனும், ராமமூர்த்தியும் இணைந்து, 700 படங்கள். இவர் தனியாக, 500 படங்கள் என தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி மொழிகளில், 1,200 படங்களுக்கு இசை அமைத்துள்ளார்.

1951 முதல் 1981 வரை, 30 ஆண்டுகள், தமிழகத்தில், அவரது இசை ராஜ்யம் தான் நடந்தது. இளையராஜாவுடன் இணைந்து மெல்லத் திறந்தது கதவு, செந்தமிழ் பாட்டு, செந்தமிழ் செல்வன், விஸ்வதுளசி போன்ற படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

இசையமைப்பாளராக மட்டுமல்லாது நடிகராவும் வாழ்ந்திருக்கிறார். கமல், அஜித் உள்ளிட்ட நடிகர்களுடன் நடித்துள்ளார். காதலா காதலா, காதல் மன்னன், தகதிமிதா, அன்பே வா (புதியது), மகாராஜா, தில்லு முல்லு (ரீ-மேக்) ஆகிய படங்களில் நடித்துள்ளார். தமிழ்த்தாய் வாழ்த்தான, 'நீராரும் கடலுடுத்த...' பாடலுக்கு இசையமைத்தவரும் இவரே. 1965ல், இந்தியா- - பாகிஸ்தான் போரின் முடிவில், போர் முனைக்கே குழுவோடு சென்று, கழுத்தில் ஆர்மோனியத்தை மாட்டி, காயமுற்ற வீரர்களுக்காக பாடி உற்சாகப்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# கடனை மீட்கும் கடன்

கடனை மீட்கும் கடன் கிரேக்கத்தின் பொருளாதாரச் சிக்கலைத் தீர்க்குமா...?

கிரேக்கத்தில் இன்று ஏற்பட்டிருக்கும் கடன் எடுத்து கடனை அடைக்கும் பொருளாதாரச் சிக்கலைப் புரிந்து கொள்வதற்கு வரலாற்றில் நாம் சற்று பின்நோக்கி பயணித்துதான் ஆகவேண்டும். அந்த வகையில் அமெரிக்க ஏகாதிபத்தியம், ஐரோப்பிய யூனியன் இவற்றிற்கும் சற்று பின்னோக்கிச் சென்று நேட்டோ, வார்ஸோ வரை சென்று உலகம் இரு முகாம்களாக பிரிந்திருந்த வரலாறு வரை சென்றுதான் ஆகவேண்டும். 1991 களில் சோவியத் யூனியனின் வலிந்த உடைப்பு உலகில் முதலாளித்துவ முகாம், சோசலிச முகாம் என்றிருந்த இரு முகாங்களை முதலாளித்து ஏகாதிபத்தியம் என்ற தனிக்காட்டு ராஜாவை உருவாக்கிச் சென்றது. இதனால் மகிழ்ந்திருந்தது. ஆனால் இந்த அமெரிக்காவின் மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

நவம்பர் 1ம் திகதி 1993 இல் ஜேர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி, நெதர்லாந்து, லக்சம்பேர்க் ஆகிய ஆறு நாடுகள் முதலில் ஒன்றிணைந்து ஐரோப்பிய யூனியனை உருவாக்கினர். ஐரோப்பிய யூனியனின் உருவாக்கத்திற்கு ஐரோப்பாவில் இருக்கும் பல நாடுகள் தமக்கிடையே ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தி பொருளாதார, இராஜ தந்திர உறவுகளை வலுப்படுத்தல் என்ற காரணங்களுக்கு அப்பால் இன்னும் ஒரு முக்கிய காரணமும் உண்டு. உலகம் நேட்டோ, வார்ஸோ என்றிருந்த இரு கூட்டமைப்புக்களில் சோவியத் யூனியனின் பலநாடுகள் சுதந்திரமாகப் பிரிந்து சென்ற நிகழ்வுடன் இல்லாமற்போன வார்ஸோவிற்கு பதிலாக? நேட்டோவின் இன் மறுவளமாக உருவாக்கப்பட்ட அரசியல் சிந்தனையும், ஐரோப்பிய யூனியனின் உதயத்திற்கான முக்கியமான காரணிகளில் ஒன்றாகப் படுகின்றது. இதே பார்வைதான் உலக மக்களால் மட்டும் அல்ல அமெரிக்காவாலும் முதலில் பார்க்கப்பட்டது. கூடவே டிசம்பர் 16 1995 அன்று ஐரோப்பிய யூனியன் உருவாகிய குறுகிய காலத்திலேயே யூரோ என்ற பொது நாணயம் அறிமுகப்படுத்தப்படுகிறது. கூட்டமைப்பு உருவாகிய சிறிது காலத்திலேயே நாடுகளுக்கிடையே பொதுவான நாணயப் புழக்கம் என்ற வகையில் யூரோ என்னும் நாணயத்தின் வருகை உலக மக்கள் மத்தி யிலும் நாடுகளிடையேயும் ஐரோப்பிய யூனியன் பற்றி நம்பிக்கையையும் இதன் பலத்தையும் எடுத்தியம்பி நின்றது. ஆனால் அமெரிக்காவிற்கு இது கசந்தே நின்றது. காரணம் உலக சந்தையில் தனது நாணயம்

சிவா மூ. ஈஸ்வரமூர்த்தி

டொலர் கோலோச்சும் வர்த்தக பரிமாற்றத்தை எங்கே யூரோ பிரதியீடு செய்துவிடுமோ என்பதனாலேயே.

இந்தப் பொதுவான நாணயப் புழக்கத்தில் ஐரோப்பிய யூனியனில் எல்லா நாடுகளும் ஆரம்பத்தில் தம்மை இணைத்துக்கொள்ளவில்லை. ஏன் இன்றுவரையும் இணைத்துக் கொள்ளாத நாடுகளும் உண்டு. இந்த பொது நாணயப் புழகத்தில் இணைத்துக் கொண்ட நாடுகள் எவை என்று எடுத்துப்பார்த்தால், ஜி 8 நாடு களில் இருந்து, முன்னாள் சோவியத்து ஒன்றியத்தில் இருந்து பிரிந்து உருவான நாடுகள், பல ஏழை வளர்முக நாடுகளும் அடங்கும். கிரேக்கம் ஜனவரி 2001 இந்த பொது நாணயப் புழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டது. விலத்தி நின்ற நாடுகளில் பிரித்தானியா, சுவிஸ் போன்ற நாடுகள் முக்கியமானவை. இணைந்த நாடுகளில் ஜேர்மனி, பிரான்ஸ் என்பன முக்கிய நாடுகளாக இருக்கின்றன.

பொது நாணயம் அறிமுகப்படுத்தப்பட்ட சிறிதுகாலத்தில் இந்நாணயத்தின் மதிப்பு எங்கே பிரித்தானியாவின் ஸ்ரேலிங் பவுணின் பெறுமதியையும் விஞ்சுமோ என்ற எகிறல் அமெரிக்காவின் டொலருக்கு விழுந்த பலத்த அடியாக பார்க்கப்பட்டது. அது இன்று வரை தொடர்வது வேறு விடயம்.

உலக வர்த்தகம் அமெரிக்க நாணயப் பரிமாற்றத்தில் நடைபெறவேண்டும் என்ற அமெரிக்காவின் ஏகாதிபத்திய செயற்பாட்டை எங்கே இந்த ஐரோப்பிய பொது நாணயம் யூரோ உடைத்துவிடுமோ என்பதில் அமெரிக்கா அதி-கம் கவலை கொண்டிருந்தது. இது என்ன கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக சோவியத்யூனியனை இல்லாது ஒழிக்க, ஐரோப்பிய யூனியன் என்ற புதிய பூதம் கூடவே கழுத்தில் யூரோ என்ற விலை மதிப்பு மிக்க வைர ஆபரணங்களுடன் வெளிக்கிட்டு வருகுதே என்பது அமெரிக்காவிற்கும், அதன் முன்னாள் நெருங்கிய நேட்டோ கூட்டாளிகளையும் ரூம் போட்டு சிந்திக்க வைத்தது.

ஐரோப்பிய யூனியனின் தோற்றமும், யூரோவின் புழக்கமும் தற்போது அமெரிக்காவிற்கு இரண்டு முக்கிய புதிய வேலைகள் உருவாக்கி நின்றன. முதலாவது ஐரோப்பிய யூனியனை இன்னொரு தன் சிந்தனை சண்டியனாக (ஐரோப்பாவின் பொலிஸ்காரனாக) மாற்றுவது. டொலருக்கு மாற்றீடாக யூரோ உருவாகி உலக வர்த்தகத்தை டொலரை மாற்றீடு செய்து யூரோ உருவாகாமல் தடுப்பது. இதே சிந்தனையில் முழுமையாக இல்லாவிட்டாலும் பொது நாணயத்திற்குள் தன்னை இணைக்காத பிரித்தானியாவும் முன்னணி வகித்தது. மேலும் யூரோ நாணய வலயத்திற்குள் இருந்த ஜேர்மன், பிரான்ஸ்ூம் உள்ளுக்குள் இருந்து இதற்கு குழிபறிக்க தயாராக இருந்தன. ஆனால் இவ் இரு நாடுகளிலும் கடந்த காலங்களில் நடைபெற்ற தொழிலாள வர்க்கப் புரட்சிப் பாடங்கள் இந்த நாட்டு மக்களையும் அவர்களைப் பிரநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளையும் அமெரிக்காவின் முழுமையான இந்த குழி பறிப்புக்களுக்கு கேள்விகள் இன்றி ஆதரவுகளை வழங்க அனுமதிக்கவில்லை. அநேகமாக மாறி மாறி உருவாகிவரும் இந்நாட்டு அரசுகள் அமெரிக்காவின் விருப்பத்திற்கு ஏற்ப மகுடியாட்டம் போடும் பாம்பின் நிலையில் இந்த நாடுகளை வைத்திருக்க முடியவில்லை. எனவே, தனது விருப்பை நிறைவேற்ற அமெரிக்கா பிரித்தானியா ஊடா-கவும், ஏனைய யூரோ பொது நாணயத்தில் இணையாத ஏனைய ஐரொப்பிய ஒன்றியத்தின் நாடுகளையும் பயன்படுத்தி வந்தது.

பண்ட உற்பத்தியில் குறைந்த அளவு ஏற்றத் தாழ்வுகளை தன்னகத்தே கொண்டிருந்த நாடுகளை ஒன்றிணைத்து பொது நாணயம் என்ற பொது ஓட்டத்திற்குள் கொண்டு வருதல் என்பதுவே பொருளா-தார விஞ்ஞானத்தில் சரியானதும் வெற்றியளிக்கக் கூடியதுமாக அமைய வாய்ப்புக்கள் அதி-கம். இதனை விடுத்து பண்டப் பொருளாதாரத்தில் கிட்டத்தட்ட சமநிலை அடையாத நாடுகளை ஒன்றிணைத்து காகிதப்பொருளாதாரத்தில் (அதுதான் நாணயம்) பொது நாணயப் புழக்கத்தை ஒருங்கிணைக்க முயலுதல் என்பது தோல்விகளை விஞ்ஞானபூர்வமாக கருத்தறிந்து கொள்வது ஆகும். பொருளா-தார வல்லுநர்களின் கணித்து அறிதல்கள் மூலம் தான் இன்று கிறீஸ், ஸ்பெயின், போத்துக்கல் போன்ற வளம் குறைந்த நாடுகளில் நடைபெற்றுவரும் கடனில் மூழ்குவதிலிருந்து மீட்டெடுத்தல் என்ற இடியப்பச் சிக்கல்களுக்கான ஒரு காரணம் ஆகும்.

மேலும் மற்றொரு முக்கிய காரணியாக அமைவது ஐரோப்பிய யூனியன் அமைக்கப்பட்டபோது இருந்த நேட்டோ அல்லது அமெரிக்காவின் தலைமைக்கான மாற்றீடு ஐரோப்பிய யூனியன் என்ற ஆரம்ப சிந்தனை காலப்போக்கில் அடிபட்டுப் போய் எப்படி தமது கூட்டமைப்பிற்குள் இருக்கும் ஏழை நாடுகளை மேலும் சுரண்டல் என்பது மேலோங்கி வந்ததும் ஒரு முக்கிய காரணி ஆகும். தம்முடன் இணைந்து வளர்ந்து வரும் நாடுகளை கை கொடுத்து தூக்கி விடுவதற்கு பதிலாக, கடன் கொடுத்து மூழ்கடித்தல் என்னும் வேலைத்திட்டம் இங்கு முதன்மைப்படுத்தப்பட்டது. இதில், கடனை வழங்க பணக்கார நாடுகளில் உள்ள தனியார்களின் பணங்களும், ஏன் வறிய நாடுகளில் அதிக சுரண்டலில் ஈடுபட்ட அந்த நாட்டு முதலாளிகளின் பணங்களும் பயன்படுதப்பட்டன என்பது அண்மைய கிறீஸ் இன் கடன் நெருக்கடி உச்சத்தை அடைந்த போது அம்பலப்பட்டும் இருந்தது இங்கு கவனிக்கத்தக்கது.

இத் தனி நபர்கள் தமது நிதியினை ஒரு பொது நிறுவனத்திற்கு வழங்கி அவர்கள் ஊடாகவே தமது வட்டி வசூல் பைசல்களை மேற்கொண்டனர். தமது நிதியிற்கான பாதுகாப்பு காரணமாக இதனைச் செய்தனர் என்பதற்கு அப்பால் இக் கடன் வழங்கும் போது கடன்பெறும் நாடுகளுக்கு இந்தப் பொது நிறுவனங்கள் ஊடாக நிபந்தனைகளையும் போட்டே வந்தனர். இந்த நிபந்தனைகளை ஆழமாகப் பார்த்தால் புரியும். தொடர்ந்தும் உள்ளூரில் தமது சுரண்டலை அதிகமாக செய்ய இந்த நிபந்தனைகள் வாய்கால்கள் கட்டி நீர்பாய்ச்சி வருவதை அவதானிக்க முடியும்.

(தொடர்ச்சி 20 ஆம் பக்கம் பார்க்க...)



# கடனை மீட்கும் கடன்

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

இது மேலும் தமது சுரண்டல்கள் மூலம் அதிக பணம் சம்பாதிக்கும் பொறிமுறையின் ஒரு வகை ஸ்தாபனப்படுத்தபட்ட வடிவம் இந்த நிபந்தனைகள் ஆகும். இவற்றின் மூலம் வறிய நாடுகள் பொருளாதாரத்தில் மேலும் மீள முடியாமல் அமிழ்ந்துகொண்டே போவதற்குரிய சாத்தியப்பாடுகளே அதிகம் ஏற்பட்டன.

இதன் வெளிப்பாடுதான் அண்மைய கிரேக்கத்தின் கடன் மீட்பு காய்ச்சல்கள் ஆகும். ஒருகாலத்தில் உலகிற்கே கணிதங்களை கண்டுபிடித்து கற்பித்த நாடு, கப்பல் கட்டி கடல் கடந்து வியாபாரங்களை, பிரயாணங்களை செய்து கோலோச்சி நாட்டை - குட்டிச்சுவராக்கியதில் இந்த ஐரோப்பிய யூனியனின் கூட்டுக் கொள்ளையர்கள், கிரேக்கத்தின் உள்நாட்டுக் கொள்ளையருடன் கை கோர்த்துச் செயற்பட்டதே காரணம்.

இவை எல்லாவற்றிற்கும் உலகமயமாக்கல் என்ற பொதுக் கருதுகோளும் முக்கிய காரணம். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் உலக மயமாதல் என்பது வளங்களை எல்லோருக்கும் பகிர்ந்து அளித்தல் என்பது போன்ற இருவழிப் பாதையை வெளிக்காட்டினாலும் இது ஒரு வழிப்பாதைதான். இலாபம் என்று வரும் போது எனக்கு மட்டும் சொந்தம் என்பதும் அதுவே நட்டம் என்று வரும்போது எல்லோருக்கும் அது சொந்தம் என்ற ஒரு வழிப்பாதைதான். இது கிரேக்கத்தின் இன்றைய பொருளாதார தாழ்வு நிலை யில் முக்கிய பங்கை வகிக்கின்றது. நஷ்டத்தில் கடனில் மூழ்கி கடனாளியாக்கப்பட்டது என்னவோ கிரேக்கம்தான். கடனை வழங்கி தமது சுரண்டல்களை இதே கடனில் மேற்கொண்டவர்கள் பொருள் பண்டங்களுடன் ஓடியே விட்டனர். அல்லது இன்னமும் தமது சுரண்டல்களைத் தொடர இன்னமும் நிபந்தனைக் கடன் கொடுக்க வழி வகை தேடித் திரிகின்றனர். இதனைத்தான் பனையால் விழுந்தவனை மாடேறி உழக்குவது என்பதாகும்.

இவற்றிலிருந்து கிரேக்கம் மீள முடியாதா..? முடியும்...! இதற்கு நல்ல உதாரணம் சோவியத் யூனியனின் உடைவுக்கு பின்னரான கியூபாவின் வீழ்ந்துவிடாமல் எழுந்து நிற்றல் என்பது நல்ல உதாரணம். இன்னும் பல அமெரிக்க பொருளாதாரத் தடைகளை எதிர்நோக்கியுள்ள தென், மத்திய அமெரிக்க சோசலிச நாடுகளும் இவற்றுடன் இணைந்த மூன்றாம் உலக நாடுகளின் வரிசையில் உள்ள வளர்ந்து வரும் நாடுகளும் உதாரணமாகக் கூறலாம். இதில் வெற்றி பெறுவது என்பது ஒரு வகையில் விரதம்தான். ஆனால் தனது உற்பத்தியில் தங்கியிருத்தல், எனது இயலுமைக்கு உட்பட்ட வசதிகளை எல்லா மக்களுக்கும் வழங்குதல். என்னால் திருப்பிக் கொடுக்கக்கூடிய அளவில் அது பணமாகவும் இருக்கலாம் அல்லது பண்டமாகவும் இருக்கலாம் ஏன் சேவை வடிவிலும் கூட இருக்கலாம். எம்மிடம் இல்லாத பண்டங்களை சேவைகளை ஏனைய நாடுகளிடம் இருந்து பெறுதல் என்ற வரையறைகளை தெளிவாக வரையறுக்க வேண்டும். எளிமையாகச் சொல்லின் விரலுக்கு எற்ப வீக்கத்தை ஏற்படுத்த வேண்டும். தேவைகளுக்காக வாழுதல், விருப்பத்திற்காக வாழுதலைத் தவிர்தல். எனவேதான் ஆரம்பதிலேயே சொன்னோம் இது ஒரு வகை விரதம்தான். முயன்றால் முடியாதது என்றும் ஒன்றில்லை. எமது சுயத்தில் சுய உற்பத்தியில் தங்கிருக்க, வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

கிரேக்கம் ஐரோப்பிய யூனியனிடம் பெற்ற தனது பொருளாதார மீட்சிக்காக பெற்ற கடனை குறிப்பிட்ட கால எல்லைக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும். முழுமையாக இல்லாவிட்டாலும், பகுதியாக வட்டியுடன் செலுத்த ஆரம்பிக்க வேண்டும். இந்தக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் தனது கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. இதனைத் தொடர்ந்து இதற்கான கால எல்லை தள்ளிப் போடப்பட்டது. அப்போதும் கிரேக்கத்தினால் திருப்பிச் செலுத்த முடியவில்லை. கிரேக்கம் கடனை திருப்பிச் செலுத்துவதற்கு தனது வருவாயிலிருந்து செலுத்துதல் என்ற பொறி முறை அடிப்படையில் செயற்படவில்லை. மாறாக கடனைச் செலுத்த மீண்டும் இதே ஐரோப்பிய யூனியனிடம் மீண்டும் ஒரு தொகைக் கடனைப் பெற முயற்சித்ததே நடைபெற்றது. இக்கடனை வழங்க ஐரோப்பிய யூனியன் இலகுவில் தயார் நிலையில் இல்லை. இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் முக்கிய காரணம் தற்போது கிறீஸ் இல் ஆட்சியில் இருக்கும் அரசு ஒரு இடதுசாரிக் கட்சியின் தலைமையில் அமைந்த ஒன்று. இது ஐரோப்பிய யூனியனில் 'வீற்றோ' பவர் நாடுகளுக்களான ஜேர்மன், பிரான்ஸ், பிரித்தானியா போன்ற நாடுகளுக்கு ஏற்புடையதாக இருக்கமாட்டாது என்பது வெள்ளிடை மலை. எனவே இந்த கடனை மீளச்செலுத்துதல் என்ற பொருளாதார ஆர்ப்பாட்டத்தில் ஆளும் சோசலிச அரசை இல்லாமல் செய்தல் (பெரும்பாலும் உள்ளூர் கலகக்காரர்களை தூண்டிவிடுதல் என்ற பொறி முறையின் ஊடாக) என்பதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். இந்த தகிடுதத்த வேலைக்கு எதிராக கிரேக்கத்தின் நிதி அமைச்சர் தலைமையில் மக்கள் அணி திரட்டல்களையும் செய்தன. இறுதியில் தற்போது என்னவோ நிதி அமைச்சரின் இராஜினமாவிற்குப் பின்னரே ஐரோப்பிய யூனியனின் நிபந்தனைகளுக்கு அமைய கடன் மீட்பு நிதி வழங்கப் பட்டுள்ளது.

என்ன பெரிய நிபந்தனை போட்டிருப்பார்கள் என்று பார்த்தால் மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் சேவைகளை நிறுத்துதல் அல்லது இச் சேவைகளை இலவசமாக வழங்கல்கள் என்ற பொறி முறையிலிருந்து பணம் அற விடும் முறைமைக்கு மாற்றுதல். இந்த சேவைகளை பணம் அறவிடும் முறமைக்கு மாற்றினால், இதில் பெரும் பணம் ஈட்டப்போவது சர்வதேச பல்தேசியக் கம்பனிகளும் இவர்களின் உள்ளூர் கூட்டாளிகளும் ஆவர். இந்த வகையில் தற்காலிகமாக கடனை வழங்கி கடனை மீட்கும் இந்த முதலாளிகள் வெற்றியடைந்திருக்கின்றார்கள் என்றே கூறவேண்டும்.

ஆனால், பழம் பெரும் நாகரீகமும் அறிவியலும் கடும் உழைப்பையும் தன்னகத்தே கொண்ட கிரேக்க மக்களின் வீரம் செறிந்த தெளிவான போராட்டங்களும் சரியான அர சியல் தலைமைகளுக்கான ஆதரவும் கிரேக்கத்தை கொள்ளையடிக்கும் கடன் கொடுத்து கடன் மீட்கும் கொள்ளைக்கார்களிடம் இருந்து நாட்டைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கை நிறை யவே உண்டு. இப்படி ஏற்பட்டால் ஸ்பெயின், போத்துக்கல் போன்ற நாடுகளுக்கு இது பரவக்கூடும் என்பது ஐரோப்பிய யூனியன் 'வீற்றோ' நாடுகளுக்கும், அமெரிக்க தலைமையிலான நேட்டோ நாடுகளுக்கும் தெரியும். எனவே என்ன விலை கொடுத்தாவது இதனைத் தடுக்கவே இவர்கள் முயலுவர். மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிடியிலிருந்து பிரிந்து சுயாதிபத்தியம் உள்ள நாடுகளாக இவர்கள் இயங்குவதற்கு பதிலாக, ஏது செய்தும் இல்லாமல் செய்ய முடியாமல் போய் கொண்டிருக்கும் ரஷ்யாவுடன் நெருக்கமான உறவுகளை இவர்கள் அமைத்துக் கொள்வர். இது எதிர்காலத்தில் மீண்டும் ஒரு நேட்டோ வார்ஸோக்களை உருவாக்கி, சோசலிச- முதலாளித் துவ முகாங்களை ஏற்படுத்தும் வாய்ப்புகளை ஏற்படுத்தும். இதனால் யாரும் கேள்வி கேட்க இல்லாதவிடத்து, சோமாலியாவில் ஆரம்பித்து ஈராக், லிபியா, என்று பரந்து உக்ரேன் வரையும் தனது விருப்பங்களை மட்டும் நிறைவேற்றும் சுரண்டல்களை, யுத்தங்களை, யுத்தங்களின் பின்னரான மீள்கட்டுமானம் என்ற மீண்டும் சுரண்டல்களை கேள்வி எழுப்பும் நிலையை உருவாக்கலாம் என்பது அமெரிக்க கூட்டமைப்பிற்கு இல்லாமலா போகும். பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். கிரேக்கம் போன்ற நாடுகளின் மக்களின் வீரம் செறிந்த போராட்டங்களை உலகையே உலக மயாமாக்கல் என்ற நவீன சுரண்டல் முறைக்குள் சுரண்டும் பல்தேசியக் கம்பனிகளையும் இவர்களின் எசமான் நாட்டு அரசுகளையும் தமது கொல்லைப்புறத்திலிருந்து அப்புறப்படுத்துமா? அல்லது அமிழ்ந்து போகுமா? என்பதை அறிவதற்கான வழிமுறையாகும். வரலாறு பின்னோக்கி நகர்வது இல்லை. இறுதி வெற்றி மக்களுக்கு என்பதை இவை நிரூபித்தே நிற்கும் .!

# மூல விக்கிரகங்கள் முற்றத்துக்கு வரும்...



தேர்தல் திருவிழா
தெருக்களை அலங்கரித்துள்ளது
மாறுபட்ட வண்ணங்கள்
வேறுபட்ட சின்னங்கள்
கனவுகள் நனவாகும் - என்ற
தொனிப்பொருள் கொண்ட எண்ணங்கள்
ஏராளம் தரித்தபடி - சிரிக்கின்ற
மந்திரிப் பதவிக்கான பதாதைகள்
ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை
வந்து போகும் இந்த உற்சவத்தில்
எண்ணெய்க் காப்புச் செய்வதற்கு
மூல விக்கிரகங்கள்
முற்றத்திற்கு வரும்
நேற்றுவரை இருந்த
நிமிர்வில்,
கம்பீரத்தில்,
மிடுக்கில்,
நடையுடையில்
உணவுப் பழக்கவழக்கத்தில் - எல்லாம்
தளர்வும்,
தாழ்மையும்,
ஏழ்மையும்.
ஒட்டியிருக்கும்.

கண்களில் கண்டவர்களை
கண்டு கதைப்பதற்கு
கண்டிப்பாய் நேரம் இருக்கும்
கன்னம் கிழித்து
கடைசிப் பல் தெரியும் வரையில்
சிரிப்பு நீண்டிருக்கும்
தொழு நோயாளர்களைக்கூட
கைகள் தழுவும்
அழும் மாந்தரைப் பார்த்து
விழிகள் அழும்
வேண்டுதல்கள் அனைத்தும்
வேண்டப்படும்
வாக்குறுதிகளால்
வளவே நிறையும்.
சத்தியங்கள் பிறக்கும்.
வாக்கு வங்கியின் சேமிப்புப் புத்தகங்கள்
வாசல்கள் தோறும் ஒட்டிக் கிடக்கும்
எது எப்படியோ
பாலைவனங்கள்
புள்ளடி போட்டு விட்டு
மழையின் வரவை எதிர்பார்க்கும்
வெண் மேகங்கள்
மழை மேகங்களாய் மாறிய பின்
காற்று வீசும் பக்கமாய்த் திரண்டு
மழையாய் பொழியும்.
அப்போதும் பாவம்
பாலைவனங்கள்
பாலைவனங்களாகவே
காட்சி தரும்.

**ஜெயந்திநகர், விசு**

# நயவஞ்சக நரி

ஒரு காட்டில் நரி ஒன்று இருந்தது. நிறைய உணவு ஒரே வேளையில் சாப்பிட வேண்டுமென்று விரும்பிற்று. அதற்கான தருணம் எப்போது வாய்க்கப் போகிறதோ என்று காத்துக் கொண்டிருந்தது.

மரத்தின் நடுவிலுள்ள பொந்து ஒன்றில் அது மிகவும் நல்லவனைப் போல வசித்து வந்தது. இந்த மரத்தில் கூடு கட்டி வரும் பறவைகள் குஞ்சு பொரித்தால் அந்தக் குஞ்சுகளை அப்படியே சாப்பிட்டு விடலாம் என்றெண்ணியது நரி.



அதன் எண்ணம் வீண்போக வில்லை. இரண்டு கழுகுகள் கணவன், மனைவியாக ஒரு நாள் அம்மரத் தடிக்கு வந்தன. மரப்பொந்தில் படுத்துக் கிடக்கும் நரியைப் பார்த்தன.

"நரியாரே! நீ இம்மரப்பொந்தில் எவ்வளவு நாளாக இருக்கிறீர்?" என்று கேட்டது ஆண் கழுகு.

"கழுகாரா... வாங்க... கூட யாரு? மனைவியா?" என்று கேட்டது.

"ஓம்!" "நான் கேட்டதற்கு நீர் இன்னமும் பதில் சொல்லவில்லையே!" என்றது கழுகு.

"ஓம்...! இம்மரப்பொந்தில் பல வருஷங்களாக இருக்கிறேன்...! ஏன் கேட்கிறீர்?" என்று கேட்டது நரி.

"என் மனைவிக்கு பிரசவகாலம் நெருங்குகிறது. இம்மரத்தில் கூடு கட்டி, முட்டையிட்டு, குஞ்சு பொரிக்கலாமா என்று ஒரு ஆசை!" என்றது ஆண் கழுகு.

"ரொம்ப ராசியான மரம் இது... முன்பு கூட ஒரு பருந்து இங்கு கூடு கட்டி, குஞ்சு பொரித்து, சுகமாக வாழ்ந்தது!" என்றது நரி.

"ஆபத்து ஏதாவது உண்டாகுமா?" என்று கவலையோடு கேட்டது பெண் கழுகு.

"நான் வயதானவன். இந்த பொந்தே கதி என்று கிடக்கிறேன். நீங்கள் பயப்படவே வேண்டாம். நாம் நல்ல நண்பர்களாக இருப்போம்!" என்றது நரி.

பிறகு மரத்தை அண்ணாந்து பார்த்து மூன்று கிளைகள் பிரியும் ஒரு இடத்தை சுட்டிக்காட்டி, "அங்கு கூடு கட்டிக்கொள்ளுங்கள். மிகவும் வசதியாக இருக்கும்!" என்றது நரி.

ஆண் கழுகும், பெண் கழுகும் அங்கு சென்று கூடு கட்ட ஆரம்பித்தன. ஆண் கழுகு வெளியில் இரை தேடிச் செல்லும் பொழுது, "என் மனைவி மட்டும் கூட்டிலிருக்கிறாள். அவளால் பறக்க முடியவில்லை... இன்றோ, நாளையோ முட்டை இடப்போகிறாள்... கொஞ்சம் பார்த்துக்கொள்ளும் நரியாரே!" என்றது.

"கவலைப்படாமல் போய் வாரும் நண்பரே! நான் இங்கிருக்கும் வரை எந்த ஆபத்தும் அண்டாது!" என்றது நரி.

நமக்கு நல்ல நண்பன் கிடைத் தான் என்றெண்ணி இரை தேட பறந்து சென்றது ஆண் கழுகு.

பெண் கழுகு முட்டையிட்டு குஞ்சு பொரித்து அவை பெரிதானதும், எல்லாவற்றையும் சாப்பிட்டு விட வேண்டுமென்று நரி எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது, மரத்தடியில் புதிதாக வந்த பன்றியும், அதன் கொழு கொழு குட்டிகளும் அதன் பார்வையில் பட்டது.

பன்றிக் குட்டிகளை சாப்பிட்டு பல நாள் பசியாறலாம் போலிருக்கிறதே என்றெண்ணிற்று நரி. மேலே கழுகு குஞ்சுகள், கீழே பன்றிக்குட்டிகள்... பேஷ் பேஷ்...

"நரியாரே இந்த மரத்தடியில் நானும் என் குட்டிகளும் தங்கலாமா?" என்று கேட்டது அம்மா பன்றி.

" தங்கலாம்!" என்றது நரி.

"எனக்கும், என் குட்டிக்கும் ஏதாவது ஆபத்து வருமா நரியாரே?" என்று கவலையோடு கேட்டது அம்மா பன்றி.

"நான் இருக்கும் இடத்துக்கு வந்துவிட்டாய் பன்றியே... கவலையே படாதே...! நான் வயதானவன். இந்த பொந்தே கதி என்று கிடப்பவன்...! எதிரிகள் எவரையும் மரத்தருகில் அண்டவே விடமாட்டேன்...! நானிருக்க பயமேன்?" என்றது நரி.

பன்றி தன் குட்டிகளுடன் மரத்தடியில் தங்கிக் கொண்டது. நாளடைவில் மரத்தின் மேலுள்ள கூட்டில் பெண் கழுகு முட்டையிட்டு குஞ்சு பொரித்தது. நான்கைந்து குஞ்சுகள் இருக்கும். கத்தியபடி இருந்தன. மரத்தடியில் பன்றிக் குட்டிகளும் "கர், கர்" என்று உறுமிய படி உலாவிக் கொண்டிருந்தன.

வந்ததற்கு இப்போது பன்றிக் குட்டிகள் மிகவும் பருத்திருந்தன. அம்மா பன்றியும் தான். அவை-களை எப்படி சாப்பிடலாம் என்று யோசித்த நரி, ஆண் கழுகையும், பெண் கழுகையும் அழைத்தது.

"இதோ பாருங்கள்...! மரத்தடியில் இருக்கிறதே பன்றி அது சுத்த மோசம்... உங்கள் குஞ்சுகளை எப்பொழுது சாப்பிடலாமென்று தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது!" என்றது.

இரண்டு கழுகுகளும் இரை தேடக் கூட வெளியில் செல்லாமல், கூட்டிலுள்ள குஞ்சுகளை காவல் காக்கத் தொடங்கின. வெளியே எங்கேயும் போகப் பயந்தன.

மேலே ஒருமுறை பார்த்துவிட்டு குட்டிகளுடன் மேய்ந்து கொண்டிருந்த பன்றியிடம் வந்தது நரி.

"பன்றியே...! நீ உன் குட்டிகளை மிகவும் ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ள வேண்டும். மேலே இருக்கிற இரண்டு கழுகுகளும் மகா பொல்லாத கழுகுகள். அவை நீ இல்லாத சமயத்தில் உன் குட்டிகளைக் கொத்திக் கொன்று சாப்பிட்டுவிட நேரம் பார்த்துக் கொண்டிருக்கின்றன!" என்றது நரி.

பன்றி ஒரேயடியாக பயந்து போய்விட்டது. குட்டிகளை எல்லாம் தன் காலின் கீழ் அணைத்துக் கொண்டது. மரத்தடியிலேயே இருக்க வேண்டும். குட்டிகளை தனியாக விட்டு விட்டு போய் விடக்கூடாது.

கழுகுகள் சாப்பிடவா என் குட்டிகளை கண்போல வளர்க்கிறேன் என்றெண்ணியது பன்றி. அதன் பிரகாரமே இருக்கவும் ஆரம்பித்தது அம்மாப் பன்றி.

ஆண், பெண் கழுகுகளும், அம்மா பன்றியும், பன்றிக் குட்டிகளும் இரை தேடாததால் வாடி இளைத்தன. சோர்ந்து, துவண்டு ஒரு நாள் எல்லாமே இறந்து போயின.

நரி விரும்பியதுபோல் நிறைய சாப்பிட கழுகுகளும், பன்றிகளும் அதன் தந்திரத்தால் கிடைத்துவிட்டன.

யார் யாரிடம் நட்பு கொள்ள வேண்டுமென்று யோசித்து நட்புக் கொள்ளாததால் கழுகுகளுக்கும், பன்றிகளுக்கும் நேர்ந்த பரிதாபமான முடிவைப் பார்த்தீர்களா, நல்லவர்களோடு மட்டுமே நட்பு கொள்ள வேண்டும்.

# இன்டர்போல்

International Criminal Police Organization என்பதன் சுருக்கம், interpol.

இது சர்வதேச அளவில் சமூகக் கொடூரங்களைக் களைய அமைக்கப்பட்ட ஒரு கழகமாகும்.

சுமார் 120 நாடுகளின் கூட்டு அமைப்பு. இது எந்தவொரு நாட்டிலும் அநீதிகளைக் களைவதும் அரசியல் பிரச்சனைகளை ஆராய்வதும், தீர்ப்பதும், தகவல் பரிமாற்றங்கள் செய்வதும் இதன் செயல்பாடுகளாகும்.

மேலும், கள்ளக்கடத்தல், தங்கம், போதைவஸ்துக்கள், கள்ளப்பணம், இராணுவ உளவு மோசடி போன்ற கிரிமினல் வழக்குகளில் அதிக அதிகாரம் கொண்டு செயற்படும் கழகமாக விளங்குகிறது.

1923ம் ஆண்டு லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது இண்டர்போல்.

# அல்பாகா!



உங்கள் தாத்தாவின் காலத்தில் மிக உயர்ந்த சூட் (கோட், பேண்ட்) அல்பாகா என்ற விலையுயர்ந்த கம்பளியினால் தைக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறாரா? இன்று, அந்த இயற்கைக் கம்பளி ஆடையைப் போலவே செயற்கைக் கம்பளிகள் (ஸிந்தடிக்) வந்துவிட்டன. ஆனால், அன்று மிக உயர்ந்ததாகக் கருதப்பட்ட அல்பாகா என்ற கம்பளி ஆடை, இங்கு நீங்கள் காணும் மிருகத்தின் ரோமத்தினால் உருவானதுதான். இந்த மிருகத்தின் பெயரான, "அல்பாகா' என்பதையே, அந்தக் கம்பளி ஆடைக்கும் வைத்து விட்டனர்.

இலேசாகவும், அதிக கதகதப் பையும் தந்து, நீண்டநாள் உழைக்கக் கூடியது அல்பாகா ஆடைகள். அல்பாகா என்ற இந்தப் பிராணி, தென் அமெரிக்காவின் பொலிவியா, பெரு ஆகிய நாடுகளின் மலைகளில் வாழுகிறது. இது காட்டு விலங்கல்ல. நம் வளர்ப்புப் பிராணியான ஆடுகளைப் போன்றது. லாமா இனத்து வழிவந்த பிராணி. பெருநாட்டு சுதேசிகள் இதன் உயர்ந்த ரோமத்துக்காகவே (கம்பளி) இதை பல்கிப் பெருக வைத்துள்ளனர்.

அற்புதமான கம்பளியைத் தரும் அதிசயப் பிராணி இது. ஆழ்ந்த காவி அல்லது கறுப்பு நிற ரோமங்கள் இதன் கால்களை மூடும் அளவுக்கு அடர்ந்து வளர்ந்திருக்கும். பொலிவியா... பெருவாசி கள், அல்பாகா என்ற இந்த மிருகத்தை நாம் ஆடுகளைப் பேணி வளர்ப்பது போல வளர்க்கின்றனர். ஆண்டின் குறிப்பிட்ட பருவத்தில் இதன் உடலிலுள்ள கம்பளி ரோமங்களை மழித்துச் சேகரிப்பர்.

ஒரு காலத்தில் கம்பளி ஆடைகள் உற்பத்தி செய்யத் தொடங்கிய போது தென் அமெரிக்காவிலிருந்து ஏராளமான அல்பாகா மிருகங்களை இங்கிலாந்திலும், ஆஸ்திரேலியாவிலும் கொண்டு போய் குவித்தனர். ஆனால், இங்கிலாந்திலும், அவுஸ்ரேலியாவிலும் பருவநிலை இந்த மிருகத்துக்கு ஒத்துக்கொள்ளவில்லை. நீண்ட நாள் வாழாமல் மடிந்தன. ஆகவே இம்முயற்சி கைவிடப்பட்டது.

அல்பாகாவின் உயரம் ஐந்தரை அடி. இதன் கழுத்து மிகவும் நீளமானது.

அல்பாகாவின் குட்டிகள் ரொம்ப அழகாக இருக்கும். மிருதுவான கிரீம்-காவி, கறுப்பு, வெள்ளை இப்படிப் பல்வேறு நிறங்களில் ரோமங்கள் (கம்பளி) அடர்ந்திருக்கும். குட்டிகளுக்கு பெற்றோர்களைப் போல நீண்ட ரோமம் இருக்காது. நன்கு வளர்ச்சியடைந்த பிறகு, கம்பளி ரோமங்கள் நீளமாக வளரத் துவங்கும்.

# வாழ்க்கையின் வெற்றிக்கு வித்திடும் 'மௌனம்'

ஒரு குறுகியகால வாழ்க்கையில் இன்பத்தையும், துன்பத்தையும் அனுபவிக்காதவர்கள் இந்த உலகத்தில் இருக்கமாட்டார்கள் என்றால் அதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை.

எல்லாம் இருந்தும் சிலருக்கு வாழத்தெரியாது. சிலருக்கு இருப்பதைக் கொண்டு வாழத் தெரியாது. இன்னும் பலர் குறுகிய வட்டத்துக்குள் வாழ்க்கையை சுருக்கிக் கொள்வார்கள்.
இன்னும் சிலர், தன் வாழ்க்கை போராட்டத்துக்குள் மற்றவர்களின் வாழ்க்கைக்குள் நுழைந்து அவர்களுடைய வாழ்க்கையையும் சீரழித்துவிடுவார்கள்.

இந்தப் பூவுலகில் பிறந்த எல்லா உயிர்க்கும் இறப்பு மட்டுமே நிரந்தரம். பிறப்பு - பிறந்து நன்கு வளர்ந்த பின்தான் பிறப்பின் இரகசியம் நமக்கு தெரியும். ஆனால் பிறந்த பின் நாம் நிச்சயம் ஒருநாள் இறந்துவிடுவோம் என்பதை வாழும்போது உணர்வோம். இந்த இரகசிய பிறப்பை அமைதியாக ரசித்து வாழ்பவர்கள் நம்மில் எத்தனை பேர். அந்த வாழ்க்கை போராட்டமாக மாறுவது ஏன்? விட்டுக்கொடுத்தல், பக்குவம், புரிதல், மரியாதை, அறிவு ஆகியன இன்மையால் வாழ்க்கையே போராட்டமாகி விடுகின்றது. விட்டுக்கொடுத்தல், பக்குவம், புரிதல், மரியாதை, அறிவு இவற்றை கடைப்பிடித்தால் அன்புக்கு பஞ்சமே இருக்காது. அன்பு இருந்தால் இந்த உலகத்தில் நிம்மதியாக இருந்துவிடலாம்.

அன்பைக் கொடுப்பதற்கும் அன்பை பெறுவதற்கும் எம்முடைய வார்த்தை பயன்பாடு மிகவும் முக்கியமானதும் இன்றியமையாததாகவும் இருத்தல் வேண்டும். அதுதான் வள்ளுவரே!

**'தீயினால் சுட்டப்புண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு'**
**'யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு'**

என்ற குரல்கள் மூலம் எடுத்தியம்பியிருக்கின்றார்.
அன்பை வார்த்தைகள் மூலம் மட்டுமல்ல மௌனத்தின் ஊடாகவும் வெளிப்படுத்தலாம். வார்த்தைகளில்லாமல் நம்முடைய ஆழ்மனதின் உணர்வுகளை வெளிப்படுத்துவது தான் மௌனம். உள் மனதோடு பேசுதல், வார்த்தைகள் இல்லாமல் பிரார்த்தனை செய்தல், இயற்கையோடு இணைத்துக் கொள்ளுதல் ஆகியவற்றில் நாம் மௌனமாக இருக்கிறோம்.

இந்த உலகம் இரைச்சல் மிகுந்தது. எந்நேரமும் எல்லா காலத்திலும் ஏதாவது கூச்சலும் குழப்பமுமாகவே இருப்பது. அழுகைச் சத்தமும், அலறல் சத்தமும், அகங்கார கொக்கரிப்பும், அவசரமும், அதட்டலும் மிகுந்தது. மிருகங்கள் இரவில் மட்டும் இரைக்காக கூச்சலிடும்.

ஆனால், எல்லா காலத்திலும் மனிதர்களின் கூச்சல் உலகத்தை இடையறாது அசைத்துக்கொண்டுதான் இருக்கிறது. இந்தக் கூச்சலுக்கு நடுவே, இந்த சந்தடிக்கு நடுவே, மௌனமாக இருத்தல் என்பது முடியுமா? இந்தக் கேள்வியைக் கேட்கும்போதே, எதற்கு மௌனமாக இருக்க வேண்டும் என்ற கேள்வியும் வரும். பல நேரங்களில் மௌனமாக இருப்பது கடினமே. மௌனத்தைக் கலைத்து உங்களை கோபமூட்டிப் பார்க்க வேண்டும் என்ற நோக்கிலேயே ஒரு சிலர் செயற்படுவார்கள்.

உலகில் அவரவர் திறமையைக் கொண்டு முன்னுக்கு வருவோம் என்று நினைப்பவர்களை விடவும், அரசியல் பண்ணி மேலதிகாரிகளைப் போட்டுக் கொடுத்து எப்படியாவது அந்த இடத்தைப் பிடித்துக் கொள்ள வேண்டும் என செயற்படுபவர்களே அதிகம். அதில் சிலர் வெற்றி பெறுவதும் உண்டு. ஆனால் அந்த வெற்றி நிலையானதாக இருக்காது.

மௌனத்துக்கும் மனோதத்துவத்துக்கும் தொடர்புகள் அதிகம். பெரும்பாலான நேரத்துக்கு மௌனமாக இருந்தாலும் மனோவியாதி உள்ளவர்களாகக் கருதி மற்றையவர்கள் ஒதுக்கி விட நேரிடும். ஆனால், மௌனத்தால் பல விடயங்களைச் சாதித்தவர்களும் உண்டு. மௌனம் சம்மதத்துக்கு அடையாளம் என்பது பழமொழி. அதுவே எதிர்ப்புக்கும் அடையாளமாகக் கொள்ளலாம்.

ஒருவர் கூறும் விடயம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால், அதனை ஆமோதிக்காமல் மௌனமாகச் சென்று விடுவோரும் உண்டு. இதனால், அந்தக் கருத்துகளை சம்பந்தப்பட்டவர் ஏற்றுக்கொண்டதாக அர்த்தமல்ல. மௌனமும் ஆன்மீகமும் மிகவும் நெருங்கிய தொடர்பைக் கொண்டது. ஆன்மீகத்தின் ஓர் அடையாளமான தியானம் செய்வதன் மூலம் மனதை ஒரு முகப்படுத்துகிறோம்.
பரபரப்பு நிறைந்த இன்றைய உலகில் அவ்வப்போது ஒருநாள் மௌன விரதத்தைக் கடைப்பிடிப்போரையும் காண்கின்றோம். இதனால் மனதுக்கும் உடலுக்கும் புத்துணர்ச்சி ஏற்படுவதோடு, மருத்துவ அடிப்படையிலும் உடல் உறுப்புக்களும் புத்துணர்ச்சி பெறுகின்றன. என்றாலும், எல்லா நேரங்களிலும் மௌனத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்க முடியாது. தேவைப்படும் நேரத்தில் தேவையானவற்றைத் தெளிவாகவும் உறுதியாகவும் பேசுவது அவசியமாகிறது.

அதிக ஒலியுடன் ஆவேசமாகப் பேசுவதால் உடலின் சக்தி வீணாவதுடன், அப்படிப் பேசுபவர்கள் மீதான மற்றவர்களின் பார்வையும் தவறானதாக நேரிடும். எனவே, அளவுடன் தேவையானவற்றைப் பேசி நல்ல மனோ நிலையை அடைவோம். மௌன மொழிமூலம் வாழ்க்கையில் வெற்றிக்கு வித்திடுவோம்.



“எரிந்தகட்டை மீதில் இணைக்கோ வணத்தை
உரிந்துரட்டிப் போட்டது கண்டு” - பட்டினத்தார்

Under the moonlight - ஈரான்

தீவிர இஸ்லாமிய மத கல்லூரியில் முல்லாவாக வருவதற்காக செயிட் ஹெசெய்ன் படித்து வருகின்றார். கட்டுப்பாடுகள் மிக அதிகமானது இக் கல்லூரி. முல்லாவிற்கான உடைகளுக்கான துணிகளை வாங்கிக் கொண்டு வேக புகையிரத வண்டியில் வரும் பொழுது ஒரு சிறுவன் செயிட்டின் துணிகளை களவாடிவிடுகின்றான். மீண்டும் மீண்டும் சிறுவனைச் சந்திக்கும் செயிட்டிடம் சிறுவன் “நான் உன்னிடமிருந்து களவெடுக்கவில்லை. நீ துணிகளை மிக இறுக்கமாக கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தாய். நான் நினைத்தேன் மிக உயர்ந்த பொருட்களை நீ வைத்துள்ளாய் என. அதனால் தான் எடுத்துச் சென்றேன். உனது கவன யீனம் தான் இதற்கு காரணம் எனக் கூறுகின்றான். நாளை சுரங்க ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள பாலத்திற்கு கீழ் வா. உனது பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்” என்கின்றான்.

மறு நாள் பாலத்திற்கு கீழ் செயிட் செல்கின்றான். அங்கு சமூகத்தால் ஒதுக்கப்பட்ட மனிதர்களை சந்திக்கின்றான். அவர்களது வாழ்விடமே அது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரச்சினைகளுடன் வாழ்கின்றனர். ஒருவர் கூறினார் “the sea of poverty has no shore” என. ஒரு சில நாட்களுக்கு முன்னர் வாங்கிய புதிய மத நூல்களை விற்று இவர்களுக்கு சாப்பாடு வாங்கிச் செல்கின்றான். அவர்கள் அனைவரும் ஒன்றாக பகிர்ந்து உண்கின்றார்கள். மதக் கல்வியில் காண முடியாத கடவுளை இங்கு காண்கின்றான் செயிட். இது இவனை புதிய மனிதனாக்குகின்றது.

வெகு இயல்பாக 90 நிமிடங்களுக்குள் இப் படத்தை இயக்கியுள்ளார்

Seyyed Reza Mir-Karimi

தெஹரானில் பிறந்து திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ள இவருக்கு இது இரண்டாவது படம். ஈரானிய நியு வேவ் அலையில் எழுந்துள்ள மற்றொரு படமே இது. தீவர மதக் கொள்கைகளை கொண்டுள்ள ஈரானில் கடவுளைத் தேடும் மாணவர்கள் ஊடாக கடவுள் கோயில்களிலும் மத நூல்களிலும் இல்லை. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மனிதர்களிடமே உள்ளார் என துணிச்சலாக கூறியுள்ளார் இயக்குனர்.



# சித்தன் சினிமா

# ரெயிலர்

எங்களது
வாழ்க்கையில் பல
எல்லைகளை கடந்துள்ளோம். எமக்கருகில்
உள்ள கனடா–அமெரிக்க எல்லையை பல தடவைகள்
கடந்துள்ளோம். ஒவ்வொரு தடவை கடக்கும் பொழுதும் பல வித்தியாசமான
அனுபவங்கள், பல கதைகள் உண்டு. அவ்வாறே பல எல்லைகளை நாம்
கடந்திருப்போம். மெக்சிக்கோ  அமெரிக்க எல்லை, இந்தியா– நேபாள
எல்லை, ஐரோப்பிய நாட்டு எல்லைகள் என பல எல்லைகளைக் கடந்த
அனுபவங்கள் உண்டு. இந்திய– நேபாள எல்லையை சைக்கிள் ரிக்சாவில்
கடக்கலாம். ஒரு தடவை போட் எரி (கனடா–அமெரிக்க எல்லை) எல்லையில்
ஒருவர் சைக்கிளில் கடந்ததை கண்டுள்ளேன்.

இவ்வாறான ஒரு எல்லைதான் பிரேசில் – உருகுவே எல்லை. இதனருகில்
உள்ள ஊரின் பெயர் மெலோ (ஆநடழ). மெலோ உருகுவே நாட்டில் உள்ள
ஊர். உருகுவே பெருமளவு ஐரோப்பியரைக் கொண்ட லத்தீன் அமெரிக்காவின்
இரண்டாவது சிறிய நாடு. லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஊழல் குறைந்த நாடு.
நீண்ட காலம் இராணுவ ஆட்சியில் இருந்த நாடு. விவசாயத்தை பிரதான–
மாக கொண்ட நாடு. உருகுவே வெளிநாட்டு பொருட்களுக்கு தடை விதித்தது.
இதன் காரணமாக பெருமளவு பொருட்கள் பிரேசிலில் இருந்து கடத்தி
வரப்படுகின்றன. இந்த மெலோவிற்கு ஒரு நாள் பெரும் அதிர்ச்சி. போப்பாண்டவர்
இங்கு வரப்போகின்றார் என்பதே. அந்த மக்களுக்கு என்ன செய்வதே என்றே
தெரியவில்லை. குழம்பியிருந்தார்கள்.

அவ் ஊர் மக்களில் சில ஆண்கள் பிரேசில் எல்லையை சைக்கிளில்
கடந்து வெளிநாட்டு பொருட்களை கொண்டு வந்து மெலோ வியாபாரிகளுக்கு
கொடுப்பார்கள். சுமார் 60 கிலோ மீற்றர்களை ஒவ்வொரு தடவையும் இவர்கள்
கடக்க வேண்டும். அப்படி கடந்து பொருட்களை வீதி வழியாக கொண்டு வரமு–
டியாது. எல்லையில் இராணுவ சோதனை முகாமுண்டு. வயல் வழியாகத்தான்
கொண்டு வரவேண்டும். அப்படிக் கொண்டுவரும் பொழுது, வழமைபோல்
கடத்தல் காரர்களது எதிரி – சுங்க இலாகா அதிகாரி மறித்து பல பொருட்களை
எடுத்து விடுவார். சில சமயங்களில் இதனால் வியாபாரிகளுக்கு இலவசமாக ஒரு
பயணத்தை இந்த கடத்தல்காரர்கள் கொடுக்கவேண்டி வரும். கடத்தல்காரர்களது
வேலை – பொருட்களை மெலோ வியாபாரிகளிடம் கொண்டுவந்து கொடுப்பதே.
என்ன என்ன பொருட்கள் என்பதுகூட இவர்களுக்குத் தெரியாது. முழுப்
பொருட்களையும் கொடுக்காத பட்சத்தில் இலவசமாக ஒரு தடவை சென்று
வரவேண்டும். சுரண்டலின் முழு வடிவத்தை இங்கு காணலாம்

இக் கிராமத்துக்குப் போப் வருகை தரவுள்ளார். அவ்வளவு தான்
மக்கள் போப்பின் வருகையை எவ்வாறு பயன்படுத்தலாம் என யோசிக்கத்
தொடங்குகின்றனர். பீற்றோவும் அவனது குடும்பமும் போப்பைத் தரிசிக்க
வருபவர்கள் செல்வதற்கு ஒரு மலசல கூடம் இங்கில்லை. எனவே தாங்கள்
ஒரு மலசலகூடத்தை அமைக்க முடிவுசெய்தனர். இதற்காக இவர்கள் கடின
உழைப்பை வழங்கினர். போப் வந்து சென்ற போதும் ஒருவரும் பீற்றின் மலசல
கூடத்துக்கு வரவில்லை. ஊடகங்கள் தொடர்ச்சியாக சொன்னது போல்
லட்சக்கணக்கானோர் வரவில்லை. ஒரு சிலரே வந்திருந்தனர்.

# Amira & Sam

சாம் அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றியவர். ஈராக், அப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் பணியாற்றிவிட்டு அமெரிக்கா திரும்பியுள்ளார். இவரது ஈராக்கிய மொழிபெயர்ப்பாளர் பசாமை அமெரிக்காவில் சந்திக்கின்றார். பசாமுடன் அமிரா தங்கியுள்ளார். அமிராவின் மாமனார் பசாம். அமிரா திருட்டு பிரதி விடியோக்களை வீதியில் நின்று விற்பவர். பசாமை சந்திக்க சாம் வந்தபொழுது அமிராவுடன் நட்பு ஏற்படுகின்றது. முதலில் அமிரா சாமை வெறுக்கின்றார். இது அமெரிக்கா மீது ஏற்பட்ட வெறுப்பு. அமிராவின் சகோதரன் அமெரிக்க துருப்புக்களின் குண்டுகளுக்கு பலியானார். சாமின் ஒன்று விட்ட சகோதரன் சார்லி. இவன் ஹெட்ஜ் பன்ட் அதாவது கந்து வட்டி தொழில் முகவர். தனது வியாபாரத்தில் செய்யும் தில்லு முல்லுக்களுக்கு சாமின் உதவியை நாடுகின்றான். ஒரு இரவு விருந்தில் ஏற்பட்ட ஒரு சிறு சண்டையைத் தொடர்ந்து அமிரா கைது செய்யப்படுகின்றார். தற்செயலாக நடந்த விபத்து ஒன்றை உருமாற்றி அமிராவை கைது செய்ய வைக்கின்றனர். கைதிலிருந்து பிணையில் வெளியே வந்த போதும், குடிவரவு அதிகாரிகள் சட்டத்துக்கு மாறாக அமிரா அமெரிக்காவில் தங்கியுள்ளார் எனக் குற்றஞ்சாட்டி இவரை நாடுகடத்த முடிவெடுக்கின்றனர். சாம் அமிராவுடன் இணைந்து வெளியேற்றத்துக்கு எதிராக போராடத் தொடங்குகின்றனர். இவர்களது பயணம் வெற்றியில் முடியவேண்டும் என்பதே எமது விருப்பம்.







ஒருவர்: எம்.பிக்களுக்கு சம்பள அதிகரிப்புச் செய்யப்போகிறார்களாம்.

மற்றவர்: அப்ப உந்த விடயத்தில கட்சி வேறுபாடோ வேறு முரண்பாடோ இல்லாமல் எல்லாரும் ஒன்றா நிப்பினம் பாருங்கோ.



தேர்தலில் ஆதரவாளர்களுக்கு சாப்பாடு சாராயம் என எல்லாவற்றுக்கும் செலழித்து தோற்றுப் போன ஒருவர் யோசித்துக் கொண்டிருந்தபோது-

தொண்டன்: என்ன ஐயா இப்படி யோசிக்கிறியள் அடுத்த தேர்தலில பார்ப்போம். இதுக்கெல்லாம் மனம் உடையக்கூடாது.

தோற்றவர்: நான் ஒன்றும் மனம் உடைய வில்லை தேர்தலுக்கு முதல் நாள் இங்கு வந்து ஆட்டுக்கறியோட சாப்பிட்டவங்கள் எறிந்துவிட்டுப்போன எச்சி இலையை ஒருக்கா எண்ணிப் பார்.

குமார் : மச்சான் இந்தமுறை எந்தக் கட்சிக்கு வேலை செய்கிறாய்.

சீலன்: நாங்கள் கனபேர் இறங்கி இருக்கிறம் மச்சான். கடந்த தேர்தலில் வேட்பாளர்கள் எங்களை ஏமாற்றிப் போட்டார்கள் பெற்றுத்தாறன் என்ற ஒன்டையும் தரவில்லை. அதால யாழ்ப்பாணத்தில ஒரு கட்சிக்கு வேலைசெய்கிறம். கிளிநொச்சியில இன்னொரு கட்சிக்கு. மன்னாரில வேறெரு கட்சிக்கு தேர்தலில நாங்கள் இப்பவே வெண்டிட்டம் மச்சான்.

எம்.பி: தேர்தலில் பல வாக்குறுதிகளைக்கூறி இவையெல்லாம் எனது ஆட்சிக்காலத்துக்குள் நடக்கும் என்று பேசியதாக ஞாபகம் இருக்கு. என்னென் வாக்குறுதிகளை அள்ளி வீசினேன் என ஞாபகம் வரவில்லை.

தொண்டர்: அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். எதிர்க் கட்சிக்காரர் ஞாபகப்படுத்திச் சொல்லுவார்கள் தானே.



ஒருவர்: அரசியல் வாதிகளின் குடும்பத்தில் சம்பந்தம் பேசினது பெரிய வம்பாய்ப் போச்சு.

மற்றவர்: ஏன்?

ஒருவர்: சீதனமா 100 அடியாள், 5000 வாக்குகள், மதுபானக் கடை எனக்கூட்டிக் கொண்டே போகிறார்கள்.

இருவர் பேசிக் கொண்டனர்: தேர்தலில் பணத்தைத் தண்ணியாச் செலவழிச்சுத்தோற்றுப்போய் விட்டன்.

பின்ன என்ன நீ அவ்வளவு சிக்கனமாக செலவழிச்சா எங்க வோட்டுப் போடப் போறாங்கள்.

ஓர் அரசியல் வாதி தனது தேர்தல் பிரசாரக்கூட்டத்தை பெரும் எடுப்பில் ஒழுங்கு செய்திருந்தார். சனம் வரவில்லை வந்த சனமும் பேச்சைக் கேட்டுச் சலிப்படைந்து போய்விட 3 பேர் மட்டும் குந்தியிருந்தார்கள். அவர்களுக்கு அந்த அரசியல்வாதியின் பேச்சு நன்கு பிடித்திருக்கிறதா என்பதை எட்டிப் பார்த்தபோது "பேசுபவரின் மேடையில் போட்டிருப்பது எங்களுடைய பாய் அதை எடுத்துக் கொண்டு போவதற்காக காத்திருக்கிறோம்" என்றார்கள்.

உங்கள் கணினிகள் பழுதடைந்துள்ளனவா..?
நம்பகத்தன்மை மிக்க சேவைகளை எதிர்பார்க்கின்றீர்களா?

All Kinds of Computer Sales
& Repairing
Service & Maintanence
Software Development
Networking
Data Recovery

CALL NOW...
+94777072092
ibuy COMPUTERS

SALE

4GB DDR2
80GB HDD
CORE2 DUO
3.0GHz

மிக குறைந்த விலையில் தரமான 2nd Hand கணினிகள் விற்பனைக்கு உண்டு.

Branded Dell optiplex 760 , 755 PC

CCTV Security Camera Systems
கண்காணிப்பு Camera system செய்து கொடுக்கப்படும்.
Online இல் 24 மணிநேரமும் எங்கிருந்தாலும் CCTV Camera பொருத்தப்பட்ட இடத்தை பார்வையிடும் வசதியும் உண்டு

Come inside & See your self...

i Buy Computers
Taking you forward...
Business Reg No. NAL/DS/977
#75/10, Front Lane, Palaly Road, Thirunelvely, Jaffna
Hotline : +94 777 072092 Landline: +94 213 202411
e-Mail : ibuycomputers@live.com



ஒலிம்பியா ஸ்போட்ஸ்

மெய்வல்லுநர் நிகழ்வுகளுக்குரிய
தட்டு, குண்டு, ஈட்டி, அளவுநாடா, etc.
பாண்ட் வாத்தியக் கருவிகள்
வெற்றிக்கேடயங்கள், வெற்றிக் கிண்ணங்கள்,
பந்து வகைகள்
Rackets
கிரிக்கெட் உபகரணங்கள்
நீச்சல் உடைகள் உபகரணங்கள்
உடற்பயிற்சி சாதனங்கள்
போன்றவற்றிற்கும்
மெடல்ஸ்,
அணிகளுக்கான Jersy வகைகள், T-Shirt வகைகள்
உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு
ஓடர்செய்து பெற்றுக்கொள்ள.

ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல.6. ஜும்மா பள்ளிவாசல் லேன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
TEL:021 222 3190 Hotline: 077 8060267



கபில்
ஸ்ரூடியோ அன் வீடியோ
Kabil
Studio & Video

உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்துவிதமான நிழ்வுகளையும் சிறந்த முறையில் அதி நவீன டிஜிட்டல் கமெரா மூலம் படப்பிடிப்பு செய்து கொடுப்பதுடன் அனைத்துவிதமான அல்பங்களும் சகலவிதமான பிறேம் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.


No: 749, Palaly Road, Thirunelvely
இல.749, பலாலிவீதி, திருநெல்வேலி
தொ.இல: 021 5686 187 - 0776002364




NLT

New Lanka Traders (Pvt) Ltd.

Post : No. 222 & 226, Staney Road, Jaffna, Sri Lanka.
Tel : 0094 (0) 21-2222062, 21-2222838, 21-2221150
Fax : 0094 (0) 21-2222062
Email : newlanke@sltnet.lk / nltpvtltd@sltnet.lk


CAPS
முன்பள்ளி ஆங்கில ஆசிரியர்,
தாதியர் பயிற்சிகள்
வெளிநாட்டுக் கல்வியையும்
வேலைவாய்ப்பையும் இலக்காகக்
கொண்ட பாடத்திட்டங்கள்.
இமிகிரேசன் உதவிகள்.
IELTS
NURSING
Etc.
யாழ்
திருநெல்வேலி
சந்திக்கருகில்
தொடர்பு...
077-386-7458
021-205-2240
Canadian Academy of Professional Studies

ERIC GANESH
OPTICIANS
Proprietor - Mrs.s.Ganeshalingam.
BRANCHES
107,K.K.S.Road, Chunnkam.
T.P - 021 224 0255
K.K.S. Road, Kokuvil.
T.P. - 021 - 222 5233
Head ofice
566,Hospital Road,Jaffna
T.P/ Fax - 021 222 2486